வாசகர் பர்வம்

எஸ்.ராமகிருஷ்ணன்

[உயிர்மை கட்டுரைகள்]

விக்ரமாதித்யன் எனும் பெருநகரப் பாணன்……………………………. ………………………………..2

கோபி கிருஷ்ணன் : வலி தரும் பரிகாசம்...13

ஏ.கே.ராமானுஜன் : நாட்டார் கதைகளின் நாயகன்...22

அசோகமித்திரன் அன்றாட வாழ்வின் சரித்திரம்...32

ப. சிங்காரம் : அடங்க மறுக்கும் நினைவு...40

ந.முத்துசாமி உடல் மொழியின் நாடகம்..50

கரிசலின் உன்னதக் கதை சொல்லி கி.ராஜநாராயணன்..60

விக்ரமாதித்யன் எனும் பெருநகரப் பாணன்

இந்த ஆண்டு சென்னைப் புத்தகச் சந்தையில் நீண்ட நாட்களுக்குப் பிறகு கவிஞர் விக்ரமாதித்யனைப் பார்த்தேன். நண்பர்கள், இளைஞர்கள் புடைசூழ மிதமான போதையும் சிரிப்புமாக அலைந்துகொண்டிருந்தார். அருகில் சென்று அண்ணாச்சி என்று அழைத்தவுடன் முகத்தில் பரவசம் மின்னக் கைகளைப் பிடித்துக்கொண்டு உரிமையும் அன்புமாக விசாரித்தார். அடர்ந்து நரைத்த தாடி சற்றே தளர்ச்சியடைந்து போன தோற்றம். எதற்கெனத் தெரியாத படபடப்பு. எப்போதும் போலவே புதிதாகக் கவிதை எழுதத் துவங்கியுள்ள இளம் கவிஞர் ஒருவரை அறிமுகம் செய்து வைத்தார்.

அண்ணாச்சி நீங்க அப்படியே இருக்கீங்க என்று சொன்னவுடன் வெடித்துப் பீறிட்டது சிரிப்பு. பேசிக்கொண்டிருக்கும்போதே தொலைவில் தெரிந்த இன்னொரு நண்பருக்குக் கையசைப்பு. கையில் என்ன புத்தகம் வைத்திருக்கிறேன் என்று வாங்கிப் பார்க்கும் ஆர்வம். சமீபத்தில் படித்த நாவல் பற்றிய விமர்சனம். புதிதாக வந்துள்ள சிறு பத்திரிகைகள் பற்றிய விசாரிப்பு என்று பத்து நிமிசத்திற்குள் அவர் மனதில் இருந்ததைப் பகிர்ந்து தந்து விட்டு வேறுசில நண்பர்கள் அழைக்க என்னைக் கடந்து சென்றுவிட்டார்.

விக்ரமாதித்யனிடம் எனக்குப் பிடித்தது அவரது அசலான சிரிப்பு. மற்றும் எப்போதும் தன்னைச் சுற்றி இளைஞர்களோடும் கொண்டாட்டத்துடனும் உள்ள இயல்பு. நான் அறிந்தவரை தமிழ்க்கவிஞர்களில் இவரைப் போல இளம்கவிஞர்களை வாசித்து, பாராட்டி, கவிதைகளைத் தொகுத்து புத்தகமாக வெளியிட வைக்கும் பொறுப்புணர்வும் அக்கறையும் கொண்ட கவி வேறு எவருமில்லை. இதை ஒரு கவிஇயக்கமாகவே செய்கிறார் எனலாம்.

அந்த வகையில் நவீனத் தமிழ்க் கவிதையுலகின் மிக முக்கியமான ஆளுமை விக்ரமாதித்யன். எப்போதும் என் நினைவிலுள்ள அவரது கவிதைகளில் ஒன்று.

கூண்டுப் புலிகள்
நன்றாகவே பழகிவிட்டன
நாற்றக்கூண்டு வாசத்துக்கு
பெரிதாக ஒன்றும் புகார் இல்லை
நேரத்து இரை
காலமறிந்து சேர்த்து விடப்படும் ஜோடி
குட்டி போட சுதந்திரம் உண்டு
தூக்க சுகத்துக்குத் தடையில்லை
கோபம் வந்தால்
கூண்டுக் கம்பிகளில் அறைந்து கொள்ளலாம்
சுற்றிச்சுற்றி வருவதும்
குற்றமே இல்லை
உறுமுவதற்கு உரிமையிருக்கிறது

முகம் சுழிக்காமல்
வித்தை காண்பித்தால் போதும்
சவிக்குச் சொடுக்குக்குப் பயந்து
நடந்து கொண்டால் சமர்த்து
ஆதியில் ஒரு நாள்
அடர்ந்த பசியக்காட்டில்
திரிந்து கொண்டிருந்தனவாம்
இந்தக் கூண்டுப்புலிகள்

*

எழுத்தின் மீதான வேட்கையில் சென்னைக்கு வர நினைப்பவர்கள் எவருக்கும் ஆதர்சபிம்பமாக நிற்பது கவிஞர் விக்ரமாதித்யன் உருவமே. காரணம் விக்ரமாதித்யன் கவிஞராக மட்டுமே வாழ்வது என்ற சவாலில் தன்வாழ்வின் பெரும் பகுதியைக் கழித்து இன்றும் சென்னையில் தனக்கெனத் தனியாகத் தங்குமிடம் இன்றி, கையில் காசின்றி பெருநகரப் பாணனைப் போலத் தன் வீரியம் குறையாமல் கவிதைகளின் வழியாக மட்டுமே தன் இருப்பை சாத்தியமாக்கிக் கொண்டு வாழ்ந்து வருகிறார்.

பத்திரிகை அலுவலகங்களில் தற்காலிக வேலைகள், நண்பர்களின் உதவி என்று நிரந்தரமான வருமானம் குறித்து எவ்விதமான உத்தரவாதமும் இன்றி மனைவி பிள்ளைகள் என்று சொந்த வாழ்வின் நெருக்கடிகள் காலைக் கவ்விய போதும் கூடத் தன் இயல்பை மாற்றிக் கொள்ளாது அதே உற்சாகத்துடன் செயல்பட்டவர் விக்ரமாதித்யன். இருபத்தைந்து ஆண்டுக் காலமாகச் சென்னைக்கு வருவதும் போவதுமாகவிருக்கிறார். எந்த அறையில் தங்குகிறார். யார் யாரைச் சந்திக்கிறார் என்பது ஒவ்வொரு முறையும் புதிராகவேயிருக்கும்.

அவரது பயணங்களின் பின்னால் உள்ள இடர்களும் சிரமமும் நான் அறிவேன். பறவைகள் இளைப்பாறுதலுக்காக வழியில் உள்ள மின்சாரக் கம்பிகளில் அமர்வது போன்றதுதான் அவரது சென்னைப் பயணங்கள். சொந்த வலிகள் குறித்து அதிகம் பகிர்ந்து கொள்கின்றவர் இல்லை அவர். அவர் கவிதைகளில் வெளிப்படும் ஆதங்கம் அளவுகூட நேர்ப் பேச்சிலிருக்காது. ஆனால் தன்னைச் சந்திக்கின்றவர்களை உற்சாகப்படுத்துவதில் அவர் தனித்துவமானவர்.

ஒரு வகையில் வண்ணநிலவன், வண்ணதாசன், கலாப்ரியா, சி. மோகன், கந்தர்வன், துவங்கி, நான், கோணங்கி, ஜெயமோகன், வித்யாசங்கர், லட்சுமி மணிவண்ணன், அஜயன்பாலா, குறுமலை சுந்தரம், சமயவேல், பிரான்சிஸ் கிருபா, சங்கர ராம சுப்ரமணியம், தளவாய் சுந்தரம், பாலைநிலவன், முத்துமகரந்தன், மலைச்சாமி, திருப்புவனம் சரவணன், கனகசபை, ராஜகோபால், ரமேஷ் வைத்யா, யவனிகா ஸ்ரீராம், கைலாஷ்சிவன், சிவா, அப்பாஸ், ஸ்ரீநேசன் என நீளும் மூன்று தலைமுறைப் படைப்பாளிகள் அனைவரின் படைப்புகளுக்கும் பின்னால்

விக்ராமதித்யனின் நெருக்கமான பகிர்தலும், உண்மையான அக்கறையும் கலந்திருக்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மை.

*

கவிஞனாக மட்டுமே வாழ்வது என்பது தமிழ்ச் சூழலில் ஒரு பெரிய சவால். வாழ்க்கை நெருக்கடிகள் ஒரு பக்கம் இழுபட மறுபக்கம் கவிதைக்கான உரிய அங்கீகாரம் இன்றியும் படைப்பு சார்ந்த எதிர்வினைகள் , மறுவாசிப்புகள் அற்றும், புறக்கணிக்கபட்ட தனிமையில் தள்ளப்படுவதே காலம் காலமாக நடைபெற்று வருகிறது. ஒரு வேளை தமிழ்ப்பாரம்பரியமே இதுதான் போலும். கவிஞனாக உரிய கௌரவத்துடனும் சுதந்திரமான மனதோடு எக்காலத்திலும் ஒரு கவிஞன் கூட வாழ்ந்தாக நான் அறியவில்லை.

மனம் நிறைய கவிதைகளுடன் காடு, மலை, கடல் என நடந்து அலைந்து புரவலனின் இடம் தேடிச் சென்ற கவிஞர்களைத்தான் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. கவிதை பாட வயதும் இளமையான பெண் உடலும் தடையாக இருக்கிறது என்று முதுமை கொள்கிறாள் ஔவையார். உலக இலக்கியத்தில் கவிதைக்காக இப்படி உருச்சிதைவு செய்துகொண்ட கவிஞர் வேறு எவரும் இருப்பார்களா எனத் தெரியவில்லை.

தமிழ் மரபில் கவிஞனாக வாழ்வது விரும்பி ஏற்றுக்கொண்ட சாபம் என்றே தோன்றுகிறது.

கவிஞனாக வாழ்வது என்பது ஒரு எதிர்ப்புணர்ச்சி. தன் விருப்பத்தின் வழியில் மட்டுமே வாழ்வைக் கொண்டு செல்ல முடியும் என்று உயர்நம்பிக்கை. கவிதைகளின் வழியாக மட்டுமே தன் இருப்பு அர்த்தப்படுகிறது என்ற பேருண்மை.

ஆனால் நடைமுறை வாழ்க்கை சாதாரண மனிதன் மீது சுமத்தும் பிரச்சினைகள், மனத்துயர்கள், வெளிக்காட்ட முடியாத அக நெருக்கடி போல நூறு மடங்கைக் கவிஞன் மீது அழுத்துகிறது. கற்பனைக்கும் நடப்பிற்கும் இடையில் அலைபடும் பாவை போலச் சிக்கித் தவிக்கிறான் கவிஞன். இத்தனையும் மீறி அவனை முன்னெடுத்துச் செல்வது கவிதைக்கான மனநிலை மற்றும் இன்னும் கவிதை மீது அக்கறை கொண்ட நிஜமான வாசகர்கள்.

புதுமைப்பித்தனில் துவங்கி நேற்று முதல்கவிதைத் தொகுதி வெளியிட்டவர்கள் வரை பலரும் எழுத்தை நம்பி வாழ்ந்துவிடலாம் என்று சென்னைக்கு வந்து இறங்கிக் கொண்டேதான் இருக்கிறார்கள். எப்போதுமே எழும்பூர் ரயில் நிலையம் எனக்கு ஒரு பலிபீடம் போலத்தான் தோன்றும். காரணம் இங்கே வந்து இறங்கி எத்தனையோ கனவுகளுடன் நகருக்குள் வாழவந்தவர்கள் எத்தனை ஆயிரம் கலைஞர்கள். அவர்களில் அறியப்பட்ட சிலரைத் தவிர மற்றவர்கள் என்ன ஆனார்கள். புதைசேறு இழுத்துக்

கொள்வதைப் போல சப்தமின்றி சென்னை மாநகரம் வந்தவர்களைத் தன்னுள் இழுத்துக் கொண்டுவிடுகிறதா?

சென்னையில் தங்க இடமில்லாமல், வேலை இல்லாமல், எழுத்தாளராக , கவிஞராக மட்டுமே வாழ்வது என்று வந்து இறங்குவது பெரும் சாகசம். இந்த சாகசத்தில் என் வாழ்வின் பதினைந்து வருடங்கள் சென்னையில் வீசி எறியப்பட்ட வாழைப்பழத்தோலைப் போல எந்த முக்கியமும் அடையாளமும் இன்றிக் கழிந்திருக்கின்றன. ஆனாலும் இந்த வலி, நிராகரிப்பு, வெளிக்காட்ட முடியாத அவமானம் இவைதான் என்னை எழுத வைத்தன. எனக்கான இடத்திற்கான போராட்டத்தை சாத்தியமாக்கியிருக்கின்றன.

உலகின் பெரும்கவிஞர்கள் பலரும் கொண்டாட்டத்தைத் தன்னோடு கூடவே வைத்திருந்திருக்கிறார்கள். அல்லது அவர்கள் மனது சகலகோடித் துயர்களையும் தாண்டி ஒவ்வொரு நிமிசமும் புதிதாக உள்ள வாழ்வினைப் பருகவே முனைந்திருக்கிறது.

லோர்க்காவின் கவிதைகளை வாசிப்பவன் அடையும் நெருக்கம் அவன் வாழ்வைப் பற்றி அறியும் போது இன்னும் அதிகமாகிறது. பிரெஞ்சுக் கவிஞனான ழான் காக்தூ கலகக்கவிஞன் என்னும் சிறப்பு அடையாளத்துடன் குடி, கொண்டாட்டம், கலையை மட்டுமே நம்பி வாழ்வது என்று இயங்கிய தீவிரம் இன்றும் அடையாளம் காட்டப்பட்டு வருகிறது.

போராட்டமே உலகம் என்று உரத்துக் குரல் கொடுத்த பாப்லோ நெருதாவின் வாழ்வில் எத்தனை காதல்கள், எவ்வளவு கொண்டாட்டங்கள். நடனம், இசை, குடி, பெண்கள் என்று வாழ்வை அவர் ருசித்த விதம் அலாதியானது. அவ்வளவு இசைக்கும் காதலின் பிரிவுகளுக்கும் இடையில்தான் அவர் சமூகவிடுதலைக்கான கவிதைகளை எழுதியிருக்கிறார்.

*

தமிழ்க் கவிஞர்களில் விக்ரமாதித்யன் ஒருவர் மட்டுமே தன்னைச் சுற்றி எப்போதுமே கொண்டாட்டத்தையும் பெரிய இளைஞர் கூட்டத்தையும் உடன் வைத்திருப்பவர். ஒருவகையில் விக்ரமாதித்யனின் சந்திப்பு என்பது கொண்டாட்டத்திற்கான துவக்கமாகவே எவருக்கும் இருக்கிறது.

விக்ரமாதித்யன் வேதாளத்தைச் சுமந்துகொண்டு திரிவதாகப் புனைகதை சொல்கிறது. நான் அறிந்த வரையில் கவிஞர் விக்ரமாதித்யன் தான் வேதாளம். எப்போது அவர் விக்ரமாதித்யனாக இருப்பார். எப்போது வேதாளமாக மாறி தன்னைச் சுமக்கவிடுவார் என்பது சூழலும் விருப்பமும் பொறுத்தது.

எழுத்தாளர்களில் நகுலனுக்குப் பிறகு விக்ரமாதித்யன் குறித்தே அதிகம் புனையப்பட்ட கதைகள் உள்ளன. குறிப்பாக விக்ரமாதித்யன் இலக்கியக் கூட்டங்களில் நடந்து கொண்ட விதம், தனிப்பட்ட நண்பர்களோடு சேர்ந்து குடிப்பதில் உருவான நகைச்சுவை, கவிஞர்கள் பற்றிய அவரது பதிலடிகள், அவர் எழுதிய குறுங்கவிதைகள் என்று அவர் ஒரு நாட்டார்தெய்வம் போல எண்ணிக்கையற்ற கதைகளும் கற்பனைகளும் சூழப்பட்டிருக்கிறார். அக்கதைகளில் சிறிதளவாவது உண்மையிருக்கும் என்பதே நிஜம். ஆனால் அந்தக் கதைகள் சுவாரஸ்யமானவை. ஒரு எழுத்தாளன் எவ்வளவு பெரிய ஆளுமையாக, எதிர்ப்புக் குரல் தரும் கலைஞனாக இருந்திருக்கிறான் என்பதற்கான சாட்சிகள் அவை.

தமிழ் இலக்கியத்தில் அண்ணாச்சி என்னும் சொல் விக்ரமாதித்யன் ஒருவரை மட்டுமே குறிக்கக்கூடியது. பலநேரங்களில் அவரைவிட வயதில் மூத்த சிலர் கூட அவரை அண்ணாச்சி என்றே அழைப்பதைக் கண்டிருக்கிறேன். அண்ணாச்சியைப் பார்த்தேன். அண்ணாச்சி கூடப் போயிருந்தேன் என்று சொல்லும் இளைஞர்களின் கண்களில் உற்சாகம் வழிந்து கொண்டிருப்பதைப் பலமுறை பார்த்திருக்கிறேன்.

ஒரேயொரு கவிதையை எழுதி முடித்திருந்த இளைஞனைக்கூட உலகின் ஒப்பற்ற கவிதையை அடையாளம் கண்டுவிட்ட சந்தோஷத்தைப் போலப் பாராட்டிப் பேசிச் சிறப்பிக்க வேறு எவருக்கு மனதிருக்கிறது. விக்ரமாதித்யனின் பாராட்டும் தொடர்ந்த அக்கறையும் பலரைக் கவிஞர்களாக்கியிருக்கிறது.

தன்னைச் சுற்றிய இளைஞர்களை இவ்வளவு சந்தோஷமாக ஒரு மனிதனால் வைத்திருக்க முடியுமா என்று பொறாமை கொள்ளுமளவு உற்சாகி விக்ரமாதித்யன். அதே நேரம் இத்தனை நண்பர்களிருந்தும் பல நேரங்களில் பின்னிரவில் படுக்க இடம் கிடைக்காமல் யார் யாருக்கோ போன் செய்து எங்காவது ஒரு அறை தேடிச் சென்று குப்பை படிந்த மூலையில் பையைத்தலைக்கு வைத்து உறங்கிச் செல்லும் அடிநிலையும் இவருக்கு மட்டுமே நேரக்கூடியதாக இருக்கிறது.

நானோ, கோணங்கியோ செல்லும் இலக்கற்ற பயணங்களில்கூட எங்களை அறியாத சில தயக்கங்கள், எதிர்பார்ப்புகள் இருக்கும். விக்ரமாதித்யனிடம் அது கிடையாது. உண்மையில் அவர் ஒரு தீராத சஞ்சாரி. கிடைத்த பஸ்ஸில் ஏறிக் கொண்டு, மனம் விரும்பிய ஊரில் இறங்கி, கவிஞர்கள், நண்பர்கள், இளம்வாசகர்கள், இலக்கியப் பரிச்சயமே அறியாதவர்கள் என்னும் பேதமின்றி எவரோடும் இணக்கமாகவும் நெருக்கமாகவும் ஆகிவிடக் கூடியவர்.

கவிதை குறித்தும் அவர் எவரையும் மிரட்சி கொள்ள வைக்கின்றவர் இல்லை. கவிதை எழுவது எல்லோருக்கும் சாத்தியமாகும் ஒரு மனநிலை என்று சொல்வதோடு தான்

போகின்ற இடங்களில் எல்லாம் கவிதைகள் சொல்லி எழுத வைத்து நிரூபணமும் செய்கின்றவர். சங்ககாலப் பாணர்களைப் போல அவர் செல்லுமிடம் எல்லாம் கவிதைக்கான நிகழ்வெளிகளே.

குடிப்பதில் அதிக விருப்பம் கொண்டிருந்தபோதும் எந்த போதையின் உச்சத்திலும் கூட அவர் வழிமாறிப் போய்விடுவதில்லை. மாமிசம் உண்டதில்லை. அறியாத நபரைத் தவறாக ஒரு சொல் பேசிவிடுவதில்லை. இன்னும் சொல்லப்போனால் அவர் வரையில் குடி என்பது சேர்ந்து உரையாடுவதற்கான பரிமாற்ற பானம் மட்டுமே. குடிக்காதவர்களை அவர் கட்டாயம் செய்வதில்லை. தான் குடிக்கக் கூடாது என்று மறுப்பவர்களை அலட்சியம் செய்யத் தவறுவதுமில்லை.

எனக்கு விக்ரமாதித்யன் என்னும் ஆளுமையைப் பிடிக்கும். அவர் கவிதைகளை ரொம்பவும் பிடிக்கும். அன்னம் வெளியீடாக ஆகாசம் நீல நிறம் என்னும் விக்ரமாதித்யனின் முதல் கவிதைத் தொகுப்பு நவகவிதை வரிசையில் 1982ஆம் ஆண்டு வெளியானது. அன்னம் வெளியிட்ட மிக முக்கியமான பங்களிப்பு இந்த நவகவிதை வரிசை.

இதில்தான் வண்ணநிலவன், கோ. ராஜராம், அப்துல்ரஹ்மான், மீரா, முதலியவர்களின் கவிதைத் தொகுதிகள் வெளியாகின. கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் அவற்றைத் தேடித்தேடி வாங்கிப் படித்தேன். விக்ரமாதித்யனை அப்போது அறிமுகமாகவில்லை.

அதன் சில வருடங்களுக்குப் பிறகு ஒருமுறை கோணங்கியோடு குற்றாலம் செல்லப் புறப்பட்ட போது தென்காசிக்கு ஒரு காலை நேரம் வந்திறங்கினோம். இளமஞ்சள் வெயிலோடு கூடி விட்டுவிட்டு சாரல் அடித்துக்கொண்டிருந்தது. பேருந்து நிலையத்தின் அருகில் தான் விக்ரமாதித்யனின் வீடு இருக்கிறது. போய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்றார். இருவரும் வீட்டைத் தேடிப் போனோம்.

கோவிலின் அருகாமையில் ஒண்டுக்குடித்தனங்கள் உள்ள குடியிருப்பு ஒன்றில் பாதி இருள் மங்கிய வீட்டின் உள்ளே சூரிய வெளிச்சம் எட்டிப் பார்ப்பதும் மறைவதுமாக இருந்தது. மின்சார மற்றுப்போன பகலில் ஓலைவிசிறியால் வீசியபடியே அக்னிநதி நாவலைப் படித்துக் கொண்டிருந்தார் விக்ரமாதித்யன். மெலிந்த உடம்பு. சீவப்படாத தலை. புகைப்பதற்கான பீடிகள், தீப்பெட்டி. ஒரு பக்கம் சாப்பிடுவதற்காக எடுத்து வைத்து மூடப்பட்டிருந்த உணவு. வீட்டில் வேறு யாருமில்லை.

எங்களைப் பார்த்த மாத்திரத்தில் அவரது முகத்தில் புன்னகை ததும்பத் துவங்கியது. மாப்ளே என்று உரிமையுடன் கோணங்கியை அழைத்து அருகில் உட்கார வைத்தார். என்னை,

கோணங்கி அறிமுகம் செய்து வைத்தவுடன் யோவ் உன்னைத்தான்யா.. ராமச்சந்திரன் சொல்லிக்கிட்டே இருந்தான். உன் கதை ஒண்ணைப் பத்தி ரொம்ப நல்லாச் சொன்னான்யா.. அவன் சாதாரணமா யாரையும் பத்தி சொல்லமாட்டான். உன்னைப்பத்தி ரொம்பச் சொன்னான்யா என்று உற்சாகத்துடன் பேசத் துவங்கினார்.

அவர் சொல்வது வண்ண நிலவனைப்பற்றி என்று கோணங்கி குறுக்கிட்டு என்னிடம் சொன்னார். என்னுடைய சிறுகதை குறித்து வண்ணநிலவன் சொன்ன விஷயத்தை அன்றைய உரையாடலில் நாலைந்து முறை நினைவுபடுத்தியதோடு நான் என்ன படித்துக் கொண்டிருக்கிறேன், எது போன்ற புத்தகங்களில் விருப்பம் அதிகம் என்று விக்ரமாதித்யன் கேட்டார்.

நான் ரஷ்ய இலக்கிய புத்தகங்களைப் பற்றிச் சொன்னவுடன் 'முதல்ல நீ கெஸ்டா பெர்லிங் சாகாபடி. சல்மா லாகெர்லெவ்வோட நாவல். மதகுருங்கிற பேர்ல க.நா.சு தமிழ்ல மொழிபெயர்த்திருக்கிறார். அது கிடைக்கலேன்னா தேவமலர் படி. கோணங்கி, உன்கிட்டே ஒளிச்சிவச்சிருப்பியே. அதுல இருந்து எடுத்து படிக்கக் குடுறா' என்று உரிமையோடு சொன்னார்.

கோணங்கியிடம் அப்படியொரு ரகசிய சேமிப்பு அறையிருந்தது. அதில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட முக்கியமான நாவல்கள் அத்தனையும் இருந்தன. மதகுருவைப் படிக்கத் தருவதாக உறுதியாகச் சொன்னார் கோணங்கி. பின்பு மூவரும் குற்றாலம் புறப்பட்டுச் சென்றோம். நல்ல சீசன். வழி முழுவதும் தண்ணீர் வழிந்து ஓடிக் கொண்டிருந்தது. அருவியின் பெரும்சப்தம் ஊரை மூழ்கடித்துக் கொண்டிருந்தது. மங்குஸ்தான் பழம் விற்பவர்களின் குரல்கள் கடந்து சென்றோம்.

சித்திரசபைக்குப் போய்விட்டுப் பிறகு அருவியில் குளிக்கலாம் என்றார். சித்திரசபை சிவனின் ஐந்து சபைகளில் மிக முக்கியமானது. அங்கே நாங்கள் சென்றபோது அதிகம் ஆட்கள் இல்லை. அங்கிருந்த ஒவ்வொரு ஓவியமாக விளக்கிச் சொல்லிக்கொண்டே வந்த போது மரபு இலக்கியங்கள் குறிப்பாக சைவ சித்தாந்த இலக்கியங்களில் அவருக்கு உள்ள புலமையை அறிந்துகொள்ள முடிந்தது.

அருவிக்குச் சென்று குளித்து விட்டு குற்றாலநாதர் கோவிலுக்கு வந்தபோது நடை சாத்தியிருந்தது. கல்தூண்கள் உள்ள பிரகாரத்தில் நின்றபடியே ஈரத்தலையுடன் அவர் திரிகூட ராசப்ப கவிராயர் எழுதிய குற்றாலக்குறவஞ்சியைப் பற்றிச் சொல்லத் துவங்கினார். உணர்ச்சி வேகத்தில் ஒரு கவிதையைச் சொல்லி முடித்து ஆழ்ந்த பெரு மூச்சுடன் அங்கிருந்த சிவனை நோக்கி வணங்கிவிட்டு மௌனமாகிவிட்டார்.

ஈரஉடைகளுடன் பெண்கள் கடந்து போய்க் கொண்டிருந்தார்கள். குரங்குகள் இரண்டு மரக்கிளையில் ஊசலாடிக் கொண்டிருந்தன. செண்பகப்பூவைக் கையில் வைத்துக் கொண்டு சுற்றிக்கொண்டிருந்தாள் ஒரு சிறுமி. அருவியின் மீது ஒளிர்ந்துகொண்டிருந்தது சூரியன். யாரும் யாருடனும் பேசிக் கொள்ளவில்லை. திரும்பி வருவதற்காகப் பேருந்தில் ஏறிய போது விக்ரமாதித்யன் இரண்டு வரிக் கவிதை சொல்லி அதைக் குறித்துக் கொள்ளும்படியாகச் சொன்னார்.

விக்ரமாதித்யனின் பெரும்பான்மைக் கவிதைகள் அவர் அவ்வப்போது நண்பர்களிடம் சொன்னவை. அவர் சொல்லி இளம் வாசகர்களால் எழுதப்பட்டவை. பயண நேரங்களில் டயரிகளில் குறிக்கப்பட்டவை. நாலைந்து இளம் கவிஞர்களுடன் ஒன்று சேர்ந்து நீள் கவிதைகள் படைப்பது வரையிலான தடையற்ற மனச்சுதந்திரம் அவருக்கு இருந்தது.

விக்ரமாதித்யன் கவிதைகளில் நான்கு குரல்கள் தொடர்ந்து எதிரொலிக்கின்றன. ஒன்று கவிஞனாக தான் வாழ்வதின் இடர்ப்பாடுகள் குறித்த ஆதங்கம். மற்றது, பெண்கள் மற்றும் பாலுணர்வு குறித்து அடக்கி வைக்கப்பட்ட மனநிலை. மூன்றாவது, மரபான தமிழ் இலக்கியம் குறித்த அவரது உயர்வெண்ணம் மற்றும் அது கவனிப்பாரற்றுப் போய்விட்டதே என்ற கோபம். நான்காவது, தன்னைச் சுற்றிய உலகின் துவேசங்கள். அதிகார நெருக்கடிகள், எதிலும் சார்பு கொள்ள முடியாது தவிக்கும் மனப்பாங்கின் வெளிப்பாடு. இந்த நான்கும் பல நேரம் ஒரே கவிதையிலும் வெளிப்படும். கவிதை குறித்து அதிகக் கவிதைகள் எழுதியவர் இவரே.

இவரது கவிதையில் அதிகம் உருவகங்கள், கவித்துவப்படிமங்கள் இடம்பெறுவதில்லை. மாறாக இயல்பான அன்றாட மொழியைக் கவிதையின் மொழியாக உயர்த்துவதே இவரது வெற்றி. அத்தோடு நேரடியான சொல்லும் தன்மை அவர் கவிதைகளில் தொடர்ந்து வெளிப்படுகிறது. இது மரபான தமிழ்க் கவிதையின் குரல். அத்தோடு தான் ஒரு நவீனக் கவிஞன் அல்லன். மாறாக, தமிழ்மரபின் பாணன் என்று சொல்லிக் கொள்ளும் கவித்துவ வெளிப்பாடு . இவையே விக்ரமாதித்யன் கவிதைகளைத் திரும்பவும் வாசிக்க வைக்கின்றன.

இவரது கவிதைகள் குறித்துப் பொதுவான குறையும் அதன் நேரடியான எளிமையான கூறலே. பல கவிதைகள் வெறும் ஸ்டேட்மெண்ட்டுகளாக முடிந்துவிடுகின்றன. சில கவிதைகள் அது உருவாக்கப்படும் அதிர்ச்சிக்காக மட்டுமே எழுதப்பட்டிருக்கின்றது. போதும் என்ற அளவை மீறிய சுய ஆதங்கம். கவிதையின் ஊடாடும் மௌனமின்மை என்பது போன்ற குறைகளைத் தாண்டி இவரது கவிதைகள் தனித்த வகையாக அடையாளம் காணப்பட்டு தொடர்ந்து முக்கியக் கவிதைகளாகக் கவனம்பெறுகின்றன.

முறையாகத் தமிழ் கற்றுக் கொண்டவர் விக்ராமதித்யன். சங்க இலக்கியம் துவங்கி காப்பியங்கள், தனிப்பாடல்கள் வரை தேர்ந்து கற்றவர். அதே நேரம் தமிழின் முக்கிய படைப்பாளிகளின் நாவல்கள், சிறுகதைகள், மொழிபெயர்ப்புகள் எனத் தேடித்தேடிப் படிக்கும் இயல்பும் அவருக்கு உண்டு. எனது நாவல்கள் அத்தனைக்கும் வெளியான சில வாரங்களில் படித்து விட்டு விரிவான விமர்சனம் செய்தவர் விக்ரமாதித்யன். ஜெயமோகனும் கோணங்கியும் இதை நினைவுகூர்ந்திருக்கிறார்கள்.

25 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து எழுதிவரும் விக்ரமாதித்யனின் கவிதைகள் மொத்தத் தொகுப்பாகவும் வெளிவந்திருக்கின்றன. சிறுகதைகள், கவிதைகள் குறித்த கட்டுரைகள் தனி நூல்களாக வெளியாகியிருக்கின்றன. விக்ரமாதித்யன் கவிதைகள் குறித்து இன்னும் விரிவாகவும் ஆழமாகவும் விவாதிக்கவும் விமர்சிக்கவும் தேவையுள்ளது.

*

விக்ரமாதித்யனோடு உள்ள என்னுடைய உறவு எண்ணிக்கையற்ற நினைவுகளால் நிரம்பியது. யோசிக்கையில் கடந்து செல்லும் ஒவ்வொரு பயணத்தில் ஏதாவது ஒரு ஊரில் அவரைச் சந்திக்காமல் இருந்ததேயில்லை என்றே தோன்றுகிறது. திருப்புவனத்தில் உள்ள நண்பர் வீட்டிற்கு நான் போய் இறங்கும் போது உள்ளிருந்து ஈரத்தலையும் சிரிப்பாக வெளியே வந்துநின்றார் விக்ரமாதித்யன். அந்த அளவு இலக்கியமே வாழ்வு என்றலையும் சஞ்சாரி அவர்.

ஒரு முறை பத்தமடையில் உள்ள எழுத்தாளர் தமிழ்ச்செல்வன் வீட்டில் நான், கோணங்கி, ஜோதிவிநாயகம், விக்ரமாதித்யன் நால்வரும் தங்கியிருந்தோம். கோடை விடுமுறைக்கு ஊருக்குப் போயிருந்தார்கள் என்பதால் தமிழ்ச்செல்வன் மட்டுமே தனியாக இருந்தார். நாங்கள் சென்றபோது அவரும் தன் வேலைக்காகக் கிளம்பி திருநெல்வேலி சென்றுவிட்டார்.

நாங்களாக சமையல் செய்து சாப்பிட்டபடியே இரண்டு நாட்கள் பகலிரவு பாராமல் பேசிக் கொண்டிருந்தோம். தமிழ்ச்செல்வனின் வீடு அருகே ஆற்றின் படித்துறை உள்ளது. குளிப்பதற்கு மிக அழகான இடம். குளிப்பதும் வீடு திரும்பி பேசுவதுமாக நீண்டது பகல். அன்றிரவு விக்ரமாதித்யன் மிக அதிகமாகக் குடித்திருந்தார். வீட்டில் இருந்த மாவடு உள்ள ஜாடியை அருகில் எடுத்து வைத்துக்கொண்டு போதையுடன் தான் ஒரு கதை எழுத விரும்புவதாகச் சொல்லி என்னை எழுதும்படியாகச் சொன்னார்.

நான் உடனே ஒரு பேடும் பேப்பரும் பேனாவும் எடுத்துக்கொண்டு உட்கார்ந்துகொண்டேன். மணி பத்தரையிருக்கும். கதையைச் சொல்லத் துவங்கினார். இரண்டு வரிகள் எழுதியிருப்பேன். அதற்குள் திரும்பப் படித்துக் காட்டச் சொல்வார். கதை ஒரு டாக்சி

டிரைவரைப் பற்றியது. கதையின் துவக்கத்தில் அவன் திருநெல்வேலியில் இருந்து சங்கரன்கோவிலுக்குக் கிளம்புகிறான். திருநெல்வேலிக்குள்ளாகவே ஒவ்வொரு இடமாக நின்று நின்று டாக்சி போகின்றதே அன்றி, கதை ஒரு துளிகூட நகரவேயில்லை.

இடையில் அவராக மறைவில் போய்க் குடித்துவிட்டு வருவார். வந்தவுடன் ஊறுகாய் சாப்பிடுவார். பின்பு கதையைத் தொடரச் சொல்வார். இப்படியாக கதையில் டாக்சி திருநெல்வேலியை விட்டுத் தாண்டுவதற்குள் விடிகாலை மூன்று மணியாகிவிட்டது. அதற்குள் பதினைந்து பக்கங்களுக்கும் மேலாக ஆகிவிட்டது. எனக்கோ தூக்கம் தாங்க முடியவில்லை. அவரும் தூக்கமும் கதைசொல்லும் உற்சாகமும் ஒன்று சேர்ந்திருந்தார்.

முடிவில் பேனாவின் ரீபில் தீர்ந்துபோனது. நல்லவேளை தப்பிவிட்டேன் என்பது போல நினைத்து நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்றேன். ஆனால் அதுவரை உறங்கிக்கொண்டிருந்த கோணங்கி எழுந்து வந்து பேனா இல்லேன்னா என்ன பென்சில் தர்றேன் என்று புதிதாக ஒரு பென்சிலைச் சீவி எடுத்து வந்து தந்தார். விடிய விடிய அந்தக் கதையை எழுதினோம். கதை முடியும்போது தமிழ்ச்செல்வன் வீட்டிலிருந்த ஒரு ஜாடி மாவடு ஊறுகாய்களும் ஒரே இரவில் காலியாகிப் போயிருந்தது.

மறுநாள் காலை கதையைத் திருத்தம் செய்து தன்னிடம் வாங்கி வைத்துக்கொண்டார். பின்பு அதை எடிட் செய்து காலம் என்னும் தலைப்பிட்டு வெளியிட்டதோடு அதை எனக்கே சமர்ப்பணமும் செய்திருந்தார். ஒருவகையில் அந்த நிகழ்வு வேடிக்கையாக இருந்தாலும் மறுபக்கம் அவருக்குள் இருந்த கதை சொல்லும் உத்வேகத்தைக் காட்டுகிறது. இதைப் போலவே கலாப்ரியா நடத்திய கவிதைப் பட்டறைகள், முன்றில் கருத்தரங்கு. பிரமீளுடன் ஆன விக்ரமாதித்யனின் நட்பு, கழுகு மலையில் நடந்த இலக்கிய விவாதம் என்று மனம் ததும்பும் அளவு அவரோடு சந்தோஷமான நட்பும் நினைவும் சாத்தியமாகியிருக்கின்றன.

*

விக்ரமாதித்யனின் கவிதைகள் எளிய மனிதர்கள் பால் மிகுந்த அக்கறை கொண்டவை. நடுத்தர வயதில் வேலையற்றுப்போன ஒரு மனிதன் வேலை தேடி, குடும்பத்தைப் பிரிந்து செல்லும் ஒரு அதிகாலையைப் பற்றிய அவரது கவிதை வலி நிரம்பியது. அந்தக் கவிதை பல நேரங்களில் என் வாழ்வில் நடந்த நிஜமான சம்பவமாக இருந்திருக்கிறது. அந்த வகையில் ஊரிலிருந்து கிளம்பும் ஒவ்வொரு பயணத்திலும் அந்தக் கவிதையை நினைத்துக்கொள்வேன்.

அன்றைக்கு
அதிகாலை இருள்

பிரிந்திருக்கவில்லை
நிசப்தம் காடாக விரிந்துகிடந்தது
சாரல் மழை பெய்து
சுகமான குளிர்வியாபித்திருந்தது
அயர்ந்து தூங்கிக்
கொண்டிருந்தான் பெரியவன்
அரவம் கேட்டு விழித்த சின்னவன்
சிரித்து விளையாடிக்கொண்டிருந்தது
சித்திரமாக இருக்கிறது
கண்ணுக்குள் . . .

பொருள்வயின் பிரிவு கவிதையிலிருந்து

*

கோபி கிருஷ்ணன் : வலி தரும் பரிகாசம்

இலக்கியச் சிந்தனை 1986ம் ஆண்டு சிறந்த சிறுகதை ஒன்றைத் தேர்வு செய்யும்படியாக கோபி கிருஷ்ணனைக் கேட்டுக்கொண்டபோது அவர் எனது சிறுகதையான தெருவின் சுபாவத்தைத் தேர்வு செய்திருந்தார். அந்தக் கதையைப் பற்றி தபால் கார்டு ஒன்றில் பாராட்டுக் கடிதம் ஒன்றும் எனக்கு எழுதியிருந்தார். அப்படித்தான் கோபி கிருஷ்ணனுக்கும் எனக்குமான உறவு துவங்கியது.

அதன் முன்னதாக கோபியின் கதையொன்றை கணையாழியில் வாசித்திருக்கிறேன். அவரது குறு நாவல் ஒன்றும் என்னுடைய குறுநாவல் ஒன்றோடு தி.ஜானகிராமன் குறுநாவல் போட்டியில் தேர்வாகியிருந்தது. கோபியின் குறுநாவலை வாசித்தபோது அதன் பரிகாசமான குரலும், அன்றாட வாழ்வை அவர் காணும் விதமும் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆனால் யார் கோபிகிருஷ்ணன், எங்கேயிருக்கிறார் என்று நான் அதிகம் அறிந்து கொள்ள ஆர்வம் காட்டவில்லை.

பின்னர் இனி இதழில் புயல் என்றொரு கோபியின் கதை வெளியாகியிருந்தது. அந்தக் கதையைப் பலமுறை படித்திருப்பேன். எதிர்பாராத ஒரு மழை நாளைப் பற்றியது கதை. கதையின் மையமாகபுயல் இருந்தபோதும் கதை மத்தியதர வர்க்கக் குடும்பம் ஒன்றில் நிகழ்கிறது. கதையை கோபி எழுதியுள்ள விதம் அற்புதமானது. குரலை உயர்த்தாமல் கதையின் வேகம் அதிகமாகிக்கொண்டே போகும். கதை முடியும்போது கதையின் மையம் புயல் அல்ல நமது அன்றாட வாழ்வின் நிலைகுலைவு என்பது புரியத்துவங்கும்.

அந்தக் கதையை வாசித்த நாளில் இருந்து கோபி கிருஷ்ணனைச் சந்திக்க வேண்டும் என்று ஆசை கொண்டிருந்தேன். அவர் சென்னையில் வசிக்கிறார் என்ற விபரத்தைத் தவிர வேறு எதையும் அப்போது அறிந்துகொள்ள முடியவில்லை. பிறகு அவரது ஒவ்வாத உணர்வுகள் சிறுகதைத் தொகுப்பு வெளியானது. அதிலிருந்த கதைகளும் எனக்குப் பிடித்திருந்தன.

கோபி கிருஷ்ணனின் கதைகள் நகரவாழ்வின் நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் மனிதர்களைப் பற்றியவை. குறிப்பாக வாழ்விடத்தில் அவர்கள் கொள்ளும் சிக்கல்கள், பிரச்சினைகள் அதன் ஊடாக வெளிப்படும் அதீத மனவோட்டங்கள் இவை அவரது கதைகளின் அடிநாதம். கோபி கதைகளை மிகச் சிறியதாகவே எழுதக்கூடியவர். நான்கு பக்க அளவிற்குள் பெரும்பான்மைக் கதைகள் முடிந்துவிடுகின்றன. ஆனால் இந்தக் கதைகள் நம்மைச் சுற்றிய சமூகவாழ்வைப் பிரதிபலிக்கக்கூடியவை. சினிமா, அரசியல், அதிகாரம், நகரவாழ்வின் வேகம் என்று பெருநகரின் பிரிக்கமுடியாத அம்சங்கள் அவரது கதைகளில் திரும்பத் திரும்ப எழுதப்பட்டுள்ளன.

கோபியின் கதாபாத்திரங்கள் எதிர்பாராத நிலைகுலைவைச் சந்திப்பவர்கள். அல்லது ஏதோவொரு குற்றபோதத்திற்குத் தன்னை ஒப்புக் கொடுத்துக்கொண்டவர்கள். எல்லாப் பிரச்சினைகளுக்குப் பிறகும் உலகின் மீது நம்பிக்கை கொண்டவர்கள். மனச்சிதைவு கொண்டவர்கள் என்று அறியப்பட்டு ஒதுக்கப்படுகின்றவர்கள் மீது அவரது பெரும்பான்மை கவனம் குவிகிறது. மனச்சிதைவின் பின்னால் உள்ள காரணங்களும் மனச்சிக்கல்களுக்கு, குடும்பம் என்ற அமைப்பு எவ்வளவு ஆதாரமாக உள்ளது என்பதையும் அவரது கதைகள் விவரிக்கின்றன.

1990களின் துவக்கத்தில் சென்னையில் சுற்றியலைந்த போது ஒருநாள் மதிய நேரத்தில் தி.நகர் கிருஷ்ணவேணி திரையரங்கம் அருகில் தற்செயலாக கோபி கிருஷ்ணன் கடந்து போவதைக் கண்டேன். அது கோபி கிருஷ்ணன்தானா என்று நிச்சயமாகத் தெரியாது. ஆனால் அவரது புகைப்படம் ஒன்றைக் கண்டிருக்கிறேன். ஆகவே அது கோபியாகத்தான் இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தில் பின்னாடியே சென்றேன். அவர் பேருந்து நிலையத்தின் எதிரிலிருந்த டீக்கடையில் நின்று கொண்டு தேநீர் அருந்தினார்.

அருகில் சென்று நீங்கள் கோபி கிருஷ்ணன்தானே என்று கேட்டேன். ஆமாம் என்று தலையசைத்தார். நான் எஸ். ராமகிருஷ்ணன், கணையாழியில் எனது கதை வெளி வந்திருக்கிறது என்றதும் உடனே என் கைகளைப் பற்றிக் கொண்டு உற்சாகமாக நல்லா எழுதிட்டு வர்றீங்க நான் உங்க சிறுகதையை இலக்கியச் சிந்தனைக்காகத் தேர்ந்தெடுத்தேன். ஞாபகமிருக்கா என்று கேட்டார். பின்னர் இருவருமாகத் தேநீர் குடித்துவிட்டு அங்கேயே பேசிக் கொண்டிருந்தோம். பேருந்தின் இரைச்சல்களை மீறி எங்கள் பேச்சு தொடர்ந்தது.

கோபியின் பார்வை இடையிடையே என் பேச்சைக் கடந்து அருகில் இருந்த கடையின் ஓரமாக உட்கார்ந்திருந்த ஒரு மனிதன் மீது குவிந்து இருந்தது. அந்த மனிதன் கசக்கி எறியப்பட்ட காகிதம் ஒன்றைக் கிழித்து வீசியபடியே உட்கார்ந்திருந்தான். அவன் தலை செம்பட்டை படிந்து பற்கள் காவியேறிப் போயிருந்தன. அழுக்கேறிய பேண்டும் சட்டையும் போட்டிருந்தான். அவனது வலது கையில் பெரிய தழும்பு தெரிந்தது. வயது நாற்பதைக் கடந்திருக்கும். முகத்தில் இறுக்கம் படிந்து போயிருந்தது. தன் கைகளை வேகமாகக் காற்றில் வீசி அவன் ஏதோ பேசிக்கொண்டிருந்தான்.

கோபி அவனை கையைக் காட்டி அவன் எவ்வளவு உற்சாகமாக இருக்கிறான் பாருங்கள் என்று சொன்னார். இருவருமாக அவனைப் பார்த்துக்கொண்டிருந்தோம். அவன் செய்கைகள் ஒருபோதும் ஒன்றாக இருப்பதில்லை, அதில் ஒவ்வொரு முறையும் புதிதாக ஒருவிதம்

உருவாகிறது. அவன் மிக உற்சாகமாக இருக்கிறான் என்று சொல்லியபடியே பார்த்துக்கொண்டிருந்தார். பின்னர் தான் புகை பிடிக்கலாமா என்று என்னிடம் கேட்டார். நடந்து சென்று சிகரெட் வாங்கிக்கொண்டு வந்து பற்றவைத்த படியே திரும்பவும் அந்த மனிதனைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

பிறகு என்னிடம் நீங்கள் முன்றிலுக்கு வந்தீர்களா என்று கேட்டார். ஆமாம் என்றதும் அருகில் ஆத்மன் ஆலோசனை மையம் என்ற ஒன்றை, தானும் நண்பர் சபியும் சேர்ந்து திறந்திருப்பதாகவும் அதற்காகத் தான் மாலை வேளைகளில் அங்கே வந்து போவதாகவும் அந்த மையம் புகை மற்றும் மதுப் பழக்கங்களில் இருந்து மீண்டுவர நினைப்பவர்களுக்கான ஆலோசனையைத் தருகிறது என்றார். நான் தலையசைத்துக்கொண்டேன். பிறகு அவராகவே அந்தப் பழக்கங்கள் என்னிடமே இருக்கிறது. ஆனாலும் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. அதை மீறிச் செல்லும்போதுதான் ஆலோசனைகள் தேவை. தன்னால் அதை ஒரு மருத்துவச் சேவையாக எடுத்துச் சொல்லவும் மாற்றவும் முடியும் என்று சொல்லிவிட்டு சிரித்தார்.

கோபி கிருஷ்ணனின் சிரிப்பு மிக அலாதியானது. இயல்பாகவும் அடக்க முடியாததாகவும் சில வேளைகளில் வெளிப்படும். கோபி எதையும் எளிதாக எடுத்துக் கொள்ளக்கூடியவர் என்பதை அருகில் இருந்து சில முறைகள் கண்டிருக்கிறேன். முதல் சந்திப்பிலே என்னிடம் கோபி, உங்களுக்குக் கடவுள் நம்பிக்கை இருக்கிறதா என்று கேட்டார். எதற்காகக் கேட்கிறீர்கள் என்று கேட்டேன்.

இல்லை தஸ்தாயெவ்ஸ்கியிடம் இப்படியொரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். “My friends, God is necessary to me, because he is the only being that I can love eternally.” என்ற அவரது பதில் குழப்பமாக இருக்கிறது, திடீரென அது நினைவிற்கு வந்தது. எனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை. ஆனால் நிறைய நேரங்களில் கடவுள் இருந்தால் நன்றாக இருக்கக்கூடும் என்றும் தோன்றுகிறது என்றபடியே நீங்கள் தஸ்தாயெவ்ஸ்கியைப் படித்திருக்கிறீர்களா என்று கேட்டார்.

இருவரும் அந்தத் தேநீர்க்கடையில் இன்னொரு தேநீர் குடித்தபடியே தஸ்தாயெவ்ஸ்கி பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். தனக்கு தஸ்தாயெவ்ஸ்கியின் படைப்புகளை ரொம்பவும் பிடிக்கும். குறிப்பாக இடியட் என்னும் நூலைப் பலமுறை வாசித்திருப்பதாகச் சொல்லியபடியே   குற்றமும் தண்டனையும் நாவலில் இடம்பெற்றுள்ளதாக Talking nonsense is man's only privilege that distinguishes him from all other organisms என்ற வரியைச் சொல்லியபடியே இது மிக நன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்று அவராகச் சிரித்துக்கொண்டார்.

இருவருமாகப் படியேறி ஆத்மன் ஆலோசனை மையமிருந்த வளாகத்திற்குள் சென்றோம். நான் முன்றில் புத்தகக் கடைக்கும் அவர் ஆலோசனை மையத்திற்குள்ளமாகப் பிரிந்துவிட்டோம். முன்றில் கடையில் இருந்த எழுத்தாளர் மா. அரங்கநாதன் அவர்கள் கோபி உங்க கூட வந்த மாதிரி இருந்தது. இருக்கானா என்று கேட்டார். ஆமாம் என்றதும் அவர் தன்னிடம் படிக்கக் கேட்டதாகச் சொல்லி ஒரு புத்தகத்தை எடுத்துக் காட்டினார். அது டி.ஹெச்.லாரன்ஸின் யீஷீஜ் என்ற புத்தகம். சில நிமிசங்களுக்குப் பிறகு கோபி வந்து அந்தப் புத்தகத்தை வாங்கிக்கொண்டு சென்றார்.

அரைமணி நேரத்திற்கு ஒருமுறை புகைபிடிப்பதற்காக கோபி முன்றிலைக் கடந்து அருகில் இருந்த வெற்று வெளிக்குச் செல்வார். அப்போது குனிந்த தலையோடு மிக மெதுவாகவே கடந்து செல்வார். தனியே புகைபிடித்துவிட்டு வேகமாகக் கடந்து போய்விடுவார்.

ஆத்மன் ஆலோசனை மையத்திற்கு யார் வருகிறார்கள் என்று தெரிந்துகொள்ள நான் ஆவல் கொண்டதில்லை. ஆனால் அங்கே வரும் கோபி கிருஷ்ணனோடு பல நாட்கள் பேசிக்கொண்டிருந்திருக்கிறேன்.

ஒரு முறை அவர் சூளைமேட்டுப் பகுதியில் ஒரு வெள்ளைக்காரருடன் பேசிக்கொண்டு நடந்து வந்து கொண்டிருந்ததைக் கண்டேன். அந்தப் பக்கமிருந்த பொன்விஜயன் அச்சகத்தில் கல்குதிரை ஓடிக் கொண்டிருந்தது. ஆகவே அதைப் பார்த்துவிட்டு வெளியே வந்தபோது எதிரே வந்தார் கோபி. வெள்ளைக்காரனை எனக்கு அறிமுகம் செய்து வைத்துவிட்டு மூவருமாகத் தேநீர் அருந்தச் சென்றோம். அவர் பேசிய மிக அழகான ஆங்கிலம் என்னை வியப்பூட்டியது.

அதன் மறுநாள் பேருந்தில் இருவரையும் மறுபடி பார்த்தேன். அந்த வெள்ளைக்காரன் ஒரு அமெரிக்கன் என்று சொல்லி ஆய்வுப் பணிக்காக வந்திருக்கிறான் என்றார். அவருக்கு நிறைய வெளிநாட்டு நண்பர்கள் இருந்தார்கள்.

கோபி அவ்வப்போது சிறுகதைகள் எழுதக்கூடியவர். தனது கதைகளைப் பற்றி அவர் அதிகம் பேசிக் கொண்டதில்லை. கதைகள் நன்றாக உள்ளது என்று பாராட்டும்போது கூட அவர் சிரித்துக்கொள்வார். அதுபோலவே வேறு எந்த எழுத்தாளரையும் பற்றி அவர் கடுமையாகப் பேசியது கிடையாது. கோணங்கியின் ‘பட்டுப்பூச்சிகள் உறங்கும் மூன்றாம் ஜாமம்’ கதையைப் படித்து விட்டு மிக நன்றாக வந்திருக்கிறது. அதுபோல தானும் ஒரு கதையை எழுதிப் பார்த்ததாகச் சொன்னார். தன்னைப் பற்றியோ தனது மன உளைச்சல்கள் பற்றியோ அவர் அதிகம் சொல்லியதில்லை.

ஒரு முறை அவரைத் தற்செயலாக அம்பத்தூர்ப் பகுதியில் பார்த்தேன். தன் வீடு அருகில்தான் இருக்கிறது என்று சொல்லி அழைத்துச் சென்றார். மிகச் சிறிய குடியிருப்பு. எளிமையான குடும்பம். தன் மனைவியைத் தான் காதலிப்பதாகவும் மனைவியைக் காதலிப்பதில் ஒரு சௌகரியமிருக்கிறது, அதற்கு அதிகம் செலவு செய்யத் தேவையில்லை என்றும் சொல்லிச் சிரித்தார்.

அவரது கதைகளில் அவரது வசிப்பிடமும் அதன் நெருக்கடியும் அதிகமாகப் பதிவாகியிருக்கின்றன. அப்படிப் பதிவான கதைகளில் ஒன்றில் அண்டை வீட்டுக்காரன் ஒருவனின் காயப்போட்ட ஜட்டி ஒன்று காணாமல் போய்விடுகிறது. உடனே அந்தக் குடித்தனத்தில் இருந்த ஆண்கள் அத்தனை பேரையும் ஜட்டியைக் காட்டச் சொல்லி அந்த நபரின் மனைவி வலம் வருவாள். இந்த சம்பவம் உண்மையில் நடந்ததா என்று கோபியிடம் கேட்டேன்.

அவர் சிரித்தபடியே அந்தப் பெண்மணி முரட்டுத்தனமானவள். தன் கணவனின் ஜட்டியை எடுத்தவர்கள் திருப்பிக் கொடுக்காவிட்டால் அப்படி நடந்து கொள்ளப் போவதாக உரத்துக் கத்திக் கொண்டிருப்பதைக் கேட்டேன். உள்ளுக்குள் ஒரே நேரத்தில் அப்படி நடந்தால் நன்றாக இருக்குமே என்ற ஆவலும், அதே நேரம் அவமதிப்பாகிவிடுமே என்ற உணர்ச்சியும் ஒன்றாகத் தோன்றியது. வீட்டில் இருக்கவே முடியவில்லை. அவளுக்கு பயந்து வீட்டிற்குப் போகாமல் இரவு வரை வெளியே சுற்றிக் கொண்டிருந்தேன் என்றார்.

கோபி மதுரையில் பிறந்தவர். தன் பால்ய வயதில் கண்ட மதுரையைப் பற்றிய நினைவுகள் அதிகம் அவருக்குள் இருந்தன. அதை எழுத வேண்டும் என்று சொல்லிக் கொண்டேயிருந்தார். கடைசி வரை எழுதவேயில்லை.

உளவியல், சமூக சேவை இரண்டிலும் அவர் முதுகலைப் பட்டம் பெற்றவர். சென்னையில் உள்ள பிரபலமான சில உளவியல் மையங்களில் பணிபுரிந்திருக்கிறார். சிகிட்சை மையங்களில் செயல்படும் அதிகாரமும் நோயாளிகளிடம் அவர்கள் நடந்துகொள்ளும் முறையும் அவரை இணைந்து செயல்படவிடாமல் தடுத்திருக்கிறது.

தான் வேலை செய்த இடம் ஒன்றில் கையூட்டு அதிகம் நடை பெறுகிறது என்று சொல்லி வேலையை விட்டதாகச் சொன்னார். இன்னொரு அலுவலகத்தில் வெளிநாட்டுப் பணத்தை வாங்கி மக்களை ஏமாற்றுகிறார்கள் என்று குற்றம் சொன்னதால் வேலையை விடும்படி ஆனது என்றும் அப்படி வேலை நீக்க உத்தரவு தந்த போது, தான் அந்த உத்தரவில்

நாலைந்து ஆங்கிலச் சொற்கள் தவறாகப் பிரயோகப்படுத்தப்பட்டிருப்பதோடு எழுத்துப் பிழையும் இலக்கணப் பிழையும் இருப்பதைக் கண்டு பிடித்து உயரதிகாரிக்குத் தெரிவித்தபோது அவர் மிகுந்த ஆத்திரத்துடன் கோபப்பட்டுத் துரத்தியதாகவும் பரிகாசத்துடன் சொன்னார்.

ஒரு மனிதன் தனக்கு வேலை பறிபோன விஷயத்தைக்கூட இப்படிப் பரிகாசமும் எள்ளலுமாகச் சொல்ல முடியுமா என்று தோணியது. வாழ்க்கை நெருக்கடி அவரை தினசரி படுத்தி எடுத்தபோது அவரிடமிருந்த எள்ளல் மற்றும் இயல்பான நகைச்சுவை உணர்வு குறையவேயில்லை. அவரது மனைவி ஒரு அச்சகத்தில் பணியாற்றுகிறார் என்றும் அங்கே வேலை கடினம் என்றும் அவராகச் சில வேளைகளில் சொல்லியிருக்கிறார். அபூர்வமாகத் தன் மகளைப் பற்றி உணர்ச்சி பூர்வமான நெகிழ்வுடன் பேசுவார்.

கோபியின் கதைகள் மனித அவலங்களை, கீழான செயல்களை, ஒடுக்கப்படும் உணர்வுகளை, மறுக்கப்படும் பாலியலை, அடங்க மறுக்கும் மனச்சிதைவுகளைப் பேசுகின்றவை. அந்த வகையில் அவரது எழுத்திற்கான முன்னோடியாக நகுலனைக் குறிப்பிடலாம். ஆனால் நகுலனிடம் உள்ள தத்துவ சார்பு கோபியிடம் இல்லை. அது போலவே கோபியிடம் உள்ள அன்றாட உலகமும் அதன் மீதான எள்ளலான விமர்சனமும் நகுலனிடம் கிடையாது. இருவருமே தஸ்தாயெவ்ஸ்கியைக் கொண்டாடுபவர்கள்.

தன் சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்வதற்காக எந்த வேலையும் செய்வதற்கு அவர் தயாராக இருந்தார். சில மாதங்கள் அவர் நக்கீரன் பத்திரிகையில் பிழை திருத்துபவராக வேலை செய்தார். சில மாதங்கள் ரோஜா முத்தையா ஆய்வு நூலகத்தில் வேலை செய்தார். கொஞ்ச நாட்கள் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார்.

சென்னையில் அம்பலம் என்றொரு அமைப்பின் கலை இலக்கியப் பணிகளை நான் சில மாதங்கள் ஒருங்கிணைப்புச் செய்து கொண்டிருந்தேன். அவர்கள் தங்களது நிகழ்ச்சி குறித்த பதிவுகளைத் தமிழ் ஆங்கிலம் இரண்டிலுமாக வெளியிடுவார்கள். இதற்கான மொழிபெயர்ப்பு வேலையை கோபி கிருஷ்ணனிடம் ஒப்படைத்திருந்தேன்.

அடிக்கடி என்னைப் பார்க்க திருவான்மியூர் வருவார். பேருந்தில் பயணம் செய்து வந்து இறங்கி நடந்து சீனிவாசபுரத்திலிருந்த அம்பலம் அலுவலகத்தில் தன் மொழியாக்கத்தைத் தந்துவிட்டு அதற்கான சொற்ப ஊதியத்தை வாங்கிக்கொண்டு போவார். அப்போது சில மணிநேரங்கள் எங்காவது நடந்து சென்று மனதில் பட்டதைப் பேசிக்கொண்டிருப்போம்

திருநெல்வேலியில் உள்ள சேவியர் கல்லூரியில் நடைபெற்ற நாட்டுப்புறவியல் கருத்தரங்கம் ஒன்றில் வாசிக்கப்படும் கட்டுரைகளை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்ய கோபி கிருஷ்ணன் நெல்லை வந்திருந்தார். அந்த நிகழ்வில் நானும் கலந்துகொண்டிருந்தேன். அதனால் அவர் அறையும் என்னுடைய அறையும் அருகாமையில் இருந்தன.

ஒரு நாள் இரவு அவர் தனக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டுள்ளதால் சில மருந்துகள் தேவைப்படுகின்றன. தன்னோடு பாளையங்கோட்டை வரை வரமுடியுமா என்று கேட்டார். இருவருமாகக் கிளம்பி பாளையங்கோட்டை வரை சென்றோம். அவர் கேட்ட மருந்தை கடைக்காரர் இல்லை என்று சொன்னதால் வேறு ஒரு மருந்தை கோபி கேட்டார்.

மருந்துச் சீட்டு இல்லாமல் அதைத் தன்னால் தர இயலாது என்று கடைக்காரர் சொன்னதும் தனக்கு அந்த மருந்து கிடைக்காவிட்டால் நிச்சயம் உறங்க இயலாது எப்படியாவது கொடுக்கும்படியாகக் கெஞ்சும் குரலில் கேட்டார். கடைக்காரர் மறுத்துவிடவே அங்கிருந்த ஒவ்வொரு கடையாக ஏறி இறங்கினார். அது தூக்க மாத்திரை என்றும் அதன் அளவு முன்பு தான் சாப்பிடுவதைவிடவும் தற்போது அதிகமாகி உள்ளதாகவும் அதற்கான மருந்துச் சீட்டை, தான் எடுத்துவரவில்லை என்பதால் இப்போது என்ன செய்வது என்று தெரியாமல் இருப்பதாகத் தடுமாற்றத்துடன் சொன்னார்.

அப்போது நெல்லையில் இருந்த லேனாகுமார் மருத்துவத்துறை தொடர்பானவர் என்பதால் அவரை அழைத்து விபரம் சொன்னதும் அவர் எங்கிருந்தோ அந்த மாத்திரைகளை வாங்கி வந்து தந்து இந்த அளவு தூக்கமாத்திரையா சாப்பிடுகிறீர்கள் என்று கேட்டதும், கோபி அது தனக்குப் பழகிப்போய் விட்டது, இதைப் போட்டால் கூட பின்னிரவில் எழுந்துவிடுவேன். பிறகு விடியும் வரை விழித்தபடியே இருக்க வேண்டியதுதான் என்று அதே சிரிப்போடு சொன்னார்.

அப்போது அவரது கைகள் நடுங்கிக்கொண்டிருந்தன. அதை மறைக்க அவர் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டார். பின்னர் அறைக்குத் திரும்பிய சில நிமிசங்களில் அவர் மாத்திரையைப் போட்டுக்கொண்டு படுத்துக் கொண்டார். ஆனால் அவருக்கு உறக்கம் வரவில்லை பாதித் தூக்கமும் விழிப்புமாக அவர் வராந்தாவில் நடந்து கொண்டிருந்தார். என் அறைக்கு வந்து தண்ணீர் இருக்கிறதா என்று கேட்டார். டம்ளரில் தந்தபோது அப்படியே பிளாஸ்டிக் ஜக்கை எடுத்துக் கடகடவெனக் குடித்தார்.

அன்றிரவு அவரால் இயல்பாக உறங்கமுடியவில்லை என்றதும் திரும்பவும் குமாரை அழைத்துச் சொன்னதால் மாற்று மருந்து ஒன்றை வாங்கி வந்து சாப்பிடச் சொன்னார்.

விடிகாலை வரை இந்த அவஸ்தையில் இருந்த கோபி உறங்கி, காலை ஒன்பது மணி அளவில் கண்விழித்து குளித்துவிட்டு வழக்கம் போலக் கருத்தரங்கில் கலந்து கொண்டு தன் மொழியாக்க வேலையைச் செய்யத் துவங்கினார்.

அசதியும் சோர்வும் அவரது முகத்தில் பீடித்திருந்தன. சாப்பாட்டை வெகுவாகக் குறைத்திருந்தார். சிகரெட் மற்றும் தேநீர்தான் அவரது பிரதான உணவாக இருந்தன. அவரது உடல் நலத்திற்கு என்ன பிரச்சினை. ஏன் இப்படி தன்னை வருத்திக்கொண்டு வேலை செய்கிறார் என்று வருத்தமாக இருந்தது. அவர் தொடர்ந்து மாத்திரைகளை உட்கொண்டு வருகிறார் என்பதும் அப்படியிருந்தும் நோய்மை கட்டுக்குள் அடங்கவில்லை என்பதும் நேரடியாகப் புரிந்தது.

அதன் பிறகு சில மாதங்கள் நான் கோபியைச் சந்திக்கவில்லை. ஒரேயொரு முறை இலக்கியக் கூட்டமொன்றில் சந்தித்துப் பேசிக்கொண்டோம். கோபி ரொம்பவும் தளர்ந்து போயிருந்தார். பிறகு அவரது புத்தகம் வெளியான சமயத்தில் தற்செயலாக நண்பர் ராஜன்குறையின் வீட்டில் சந்தித்துக்கொண்டு உரையாடினோம். கோபியின் அன்றாட வாழ்வு மிக நெருக்கடியாக உள்ளது என்று பலமுறை நண்பர் வெளிரங்கராஜன் சொல்லியிருக்கிறார். ஆனால் கோபி இதை எவரிடமும் சொல்லிக்கொண்டது கிடையாது. ஒருமுறை அவர் பொங்கல் வாழ்த்து அட்டைகள் அனுப்பி வைத்திருந்தார்.

அட்சரம் இதழுக்காக அவரிடமிருந்து பிராய்டு பற்றிய கட்டுரை ஒன்றைக் கேட்டேன். தன்னால் முடிந்தால் எழுதித் தருவதாகச் சொன்னார். ஒவ்வொரு முறை பார்க்கும்போதும் அதைத் தன்னால் எழுத முடியவில்லை என்பதற்காக வருத்தம் தெரிவித்துக்கொள்வார்.

கோபியின் கதைகள் மனித வலிகளை மிக ஆழமாகப் பதிவு செய்திருக்கின்றன. குறிப்பாக சகமனித துவேசங்கள் அவமதிப்புகள் அதிகாரத்தின் பெயரால் நடைபெறும் கீழ்மைகள், பாலியல் வேஷங்கள், சமூக வாழ்வில் காணப்படும் இரட்டைத்தன்மை. வெகுமக்களின் ரசனை சார்ந்த வெளிப்பாடுகள் என்று அவர் நகரவாழ்வின் இருண்ட பகுதியைத் தன் படைப்பில் தொடர்ந்து வெளிப்படுத்தி வந்தார். இன்னொரு பக்கம் மன நலச்சேவைகள். இன்று எந்த அளவு மனிதாபிமானமற்று நடத்தப்படுகின்றன என்பதைப் பற்றியும் கடுமையான எதிர்ப்புக்குரல் கொண்டிருந்தார். இதை வெளிப்படுத்த அவரும் சபியும் இணைந்து சிறிய நூல் ஒன்றை வெளியிட்டார்கள்.

தூயோன், மானுட வாழ்வு தரும் ஆனந்தம் போன்ற அவரது சிறுகதைத் தொகுப்புகளும் உள்ளிருந்து சில குரல்கள் என்ற அவரது நாவலும் குறிப்பிடத்தக்க படைப்புகள்.

டேபிள்டென்னிஸ் என்ற அவரது குறுநாவல் பாலியல் சிக்கல் குறித்த பகடியை மிக அழகாக வெளிப்படுத்துகிறது.

தன் மகளின் திருமணத்திற்கு கோபி என்னை அழைத்திருந்தார். ஆனால் கலந்து கொள்ளவில்லை. பிறகு தற்செயலாக ரங்கராஜனுடன் சந்தித்தபோது தன் மருமகனைப் பற்றி மிகப் பெருமையாகச் சொல்லிக்கொண்டிருந்தார். அவரது குடும்பச் சூழல் மிகவும் நெருக்கடியாகிவிட்டிருப்பதை அவரது பேச்சின் ஊடாகப் புரிந்துகொள்ள முடிந்தது. புதிதாகத் தான் எழுத விரும்பும் கதை பற்றிப் பேசிக்கொண்டிருந்தது வியப்பாக இருந்தது.

ஒரு கதையை நிம்மதியாக அமர்ந்து எழுதுமளவுகூட வீட்டின் சூழல் இல்லை என்று அவர் சொன்னவிதம் வலி தருவதாக இருந்தது. அன்று லதா ராமகிருஷ்ணனைப் பார்க்கச் செல்வதாகச் சொல்லியபடியே நடந்து செல்லத் துவங்கினார்.

2003ல் கோபி மரணமடைந்த நாளில் நான் விருதுநகரில் இருந்தேன். செய்தி கேள்விப்பட்டவுடன் மனதில் கோபியின் சிரிப்புதான் முதலில் தோன்றியது. கோபியோடு அதிகம் நட்பு கொண்டிருக்கவில்லை என்றபோதும் நான் அறிந்த தமிழ் எழுத்தாளர்களில் கோபி மிகவும் தனித்துவமானவர். அத்தோடு தமிழ்ச் சிறுகதைகளில் அவரது பங்களிப்பு சிறப்பானது. அவரது கதை உலகிற்கு நிகரான பகடியும் ஆழ்ந்த துக்கமும் கொண்ட கதைகள் இன்று வரை வேறு எவராலும் எழுதப்படவில்லை.

தஸ்தாயெவ்ஸ்கியைப் போல வாழ்வின் கருணையற்ற நெருக்கடியை எதிர்கொண்டபடியே திரும்பத் திரும்ப வாழ்வு தரும் ஆனந்தத்தைப் பேசியவர் கோபி கிருஷ்ணன். இன்று வாசிக்கையில் அந்த ஆனந்தமும் பரிகாசமும் தீர்க்க முடியாத வலியை உருவாக்குகிறது என்பதே நிஜம்.

*

ஏ.கே.ராமானுஜன் : நாட்டார் கதைகளின் நாயகன்

இசக்கியேல், கெய்கி தாருவாலா என இங்கிலத்தில் எழுதும் இந்திய கவிஞர்களின் கவிதைகள் ஏன் கல்லூரிப் பாடமாக இருந்தது. அதில் தான் ஏ.கே.ராமானுஜத்தின் பெயரை முதன்முறையாகக் கேள்விப்பட்டேன். அவரது கவிதை மதுரையின் வைகை ஆற்றைப்பற்றியது. வைகையைப் பற்றிய மதுரைகாஞ்சியின் பாடல்களை வாசித்திருந்த எனக்கு ராமானுஜம் காட்டிய ஆற்றின் படிமம் முற்றிலும் புதிய அனுபவம் தருவதாக இருந்தது.

நான் மதுரையின் வீதிவீதியாகச் சுற்றியலைந்து திரிந்த நாட்கள் அவை என்பதால் அந்தக் கவிதை தரும் அனுபவத்தின் பெரும்பகுதி நான் கண்ணால் கண்டதாகவே இருந்தது. அது ராமானுஜத்தின் மீதான என் விருப்பத்தினை அதிகப்படுத்தியது. யார் ஏ.கே.ராமானுஜன் அவர் எப்படி வைகை பற்றி எழுதியிருக்கிறார். ஒருவேளை அவர் மதுரைக்காரர் என்று விசாரிக்க ஆரம்பித்தேன்.

ஆங்கிலப் பேராசிரியர்களில் பலருக்கும் இந்திய ஆங்கில கவிகளைப் பிடிக்காது. சாசர், ஸ்பென்சர், ஸ்காட், டிக்கன்ஸ், ஷேக்ஸ்பியர், விட்மன் என்று அவரவருக்கு ஒரு வட்டம் உண்டு. ஆங்கில இலக்கியப் பாடத்திட்டத்தில் சமகால நவீனப் படைப்புகளைப் பற்றிய அறிமுகங்கள் மிகக் குறைவே.

நான் ஆங்கில இலக்கியம் கற்றபோது சாமுவேல் பெக்கட்டின் நாடகம் பாடமாக இருந்தது. அதை வகுப்பு எடுப்பதற்கு எந்தப் பேராசிரியருக்கும் விருப்பமிருக்காது. ஒரேயொரு கட்டுரையைத் தயாரித்து பல வருடமாக அதைப்பிரதி எடுக்கச் சொல்லித் தந்துவிட்டு கடந்து போய் விடுவார்கள். நானோ பெக்கட்டின் நாவல்களைப் படித்திருந்தேன். பெக் கட்டை அவ்வளவு எளிதாகக் கடந்து போய்விடுவதை மனம் ஒப்பாமல் சண்டை போட்டிருக்கிறேன்.

நவீனத் தமிழ் இலக்கியம் வகுப்பறைகளுக்கு அறிமுகமானதில் பாதியளவுகூட நவீன ஆங்கில இலக்கியம் வகுப்பறைகளுக்கு இன்னும் வரவில்லை. ஆகவே ராமானுஜத்தைப் பற்றிய நாலு வரிக் குறிப்புகளைத் தவிர வேறு எதையும் அறிந்து கொள்ள முடியவில்லை. அந்தக் குறிப்பில் ராமானுஜம் அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் பேராசிரியராகப் பணியாற்றுகிறார் என்ற விபரம் மட்டுமே பேராசிரியர்களுக்கு முக்கியமானதாக இருந்தது.

நான் நூலகத்தில் ராமானுஜத்தின் புத்தகங்களைத் தேடியபோது The Interior Landscape: Love Poems from a Classical Tamil Anthology, Speaking of Siva, Hymns for the Drowning, A Flowering Tree and Other Oral Tales from India , Poems of Love and War. போன்ற தமிழ் செவ்வியல் இலக்கியம் மற்றும்

நாட்டார்கதைகளின் ஆங்கில மொழி பெயர்ப்பையும் Relations என்ற அவரது கவிதைத் தொகுப்பையும் எடுத்து வந்து வாசிக்கத் துவங்கினேன்.
தனித்துவமிக்க கவிதைகளும் கவனப்படுத்தும் விஷயமும் ராமானுஜன் மிக முக்கியமான சமகாலக் கவிஞர் என்ற உள்ளுணர்வை உருவாக்கியது. இன்னொரு பக்கம் சங்க இலக்கியத்தை ஆங்கிலத்தில் வாசித்த போது அவர் மொழிபெயர்த்துள்ள விதம் அந்தக் கவிதைகளின் மூலத்திற்கு மிக நெருக்கமாக இருந்தன.

அன்றிலிருந்து ராமானுஜன் எழுதியதைத் தேடித்தேடிப் படிக்க ஆரம்பித்தேன். அவரைப்பற்றி ஆங்கிலப் பேராசிரியர்கள் அறிந்திராத பல தகவல்களை நவீனத் தமிழ் இலக்கியம் கற்பிக்கும் பேராசிரியர்கள் அறிந்திருந்தார்கள். ராமானுஜன் சில வருசம் மதுரை தியாகராஜா கல்லூரியில் வேலை செய்திருக்கிறார். அவரது குடும்பம் கர்நாடகத்தில் வசிக்கின்ற தமிழ்க் குடும்பம் என்றதோடு ராமானுஜன் ஆண்டு தோறும் இந்தியாவிற்கு வருகை தருகிறார். நண்பர்களைச் சந்திக்கிறார் என்ற விபரங்களையும் சொன்னார்கள்.

எனக்கு அவரை ஒருமுறையாவது சந்திக்க வேண்டும் என்ற ஆசை உண்டானது. ஆனால் அவரை எப்படித் தொடர்பு கொள்வது என்று தெரியவில்லை. ராமானுஜன் தொகுத்த நாட்டுப்புறக் கதைகளின் ஆங்கில மொழியாக்கம் வெளியான காலத்தில் அதைப் பாடப்புத்தகம் போல ஒவ்வொரு நாளும் படித்தேன். கதை சொல்லும் முறையைப் பற்றிய அவரது அவதானிப்புகளும் ஆர்வமும் என் ஊரைச்சுற்றிய கதைகளை நோக்கிய தேடுதலுக்குப் பெரிய உந்துதலாக இருந்தது. தமிழுக்கு என்றே தனித்துவமாக உள்ள கதை சொல்லும் முறைகளை நோக்கி என் கவனம் குவியத் துவங்கியது.

எண்ணிக்கையற்ற நாட்டார் கதைகளை வாசித்தும் தேடிக் கண்டு பிடித்து அறிந்து கொள்வதுமாகச் சுற்றிக் கொண்டிருந்தேன். ராமானுஜத்தைத் தொடர்ந்து வாசித்த காரணம் எனக்குள் தமிழ்க்கதைகளில் இடம்பெறும் மாயப்பொருட்கள், கதாபாத்திரங்கள். விலங்குகள். தாவரங்கள், நகரங்கள், நிலக்காட்சிகள், நம்பிக்கைகள் பற்றிய பெரிய கதைக்களஞ்சியம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற முனைப்பை உருவாக்கியது. அதற்காக சில முயற்சிகளை மேற்கொண்டேன். ஆனால் அந்தத் திட்டம் தனிநபர் சார்ந்த செயல்பாடு இல்லை என்று உணர்ந்து அதைக் கைவிட்டேன். அந்த நாட்களில் தொடர்ந்து சிறுகதைகள் எழுதி வெளியாகிக் கொண்டிருந்தது.

அப்போது ஒருநாள் என் முகவரிக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. காலட்படை பற்றிய குற்றப்பத்திரம் என்ற என்னுடைய சிறுகதை ஒன்றை தான் வாசித்திருப்பதாகவும் அந்தக் கதை தனக்குப் பிடித்துள்ளதால் அதைத் தான் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்ய

விரும்புவதாக சொல்லி அதற்கான அனுமதியைக் கேட்டிருந்தார். என்னால் நம்பவே முடியவில்லை.

அந்தக் கடிதத்தை எழுதியவர் ஏ.கே.ராமானுஜன். நான் யாரைச் சந்திக்க வேண்டும் என்று தேடிக் கொண்டிருந்தேனோ அவர் என்னுடைய சிறுகதை ஒன்றை வாசித்திருக்கிறார். அதை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்ய விரும்புகிறார் என்பது எனக்குப் பெருமையாக இருந்தது. ராமானுஜத்திற்கு என் கதை எப்படிக் கிடைத்தது. அவர் கதையைப் பற்றி என்ன சொல்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ள ஆர்வமாக இருந்தது.

அந்தக் கடிதம் மைசூரில் உள்ள ஒரு முகவரியில் இருந்து வந்திருந்தது. பதில் எழுதும் நேரத்திற்குள் மைசூர் போய்வந்துவிடலாமே என்று தோன்றி அன்றிரவே ஏ.கே. ராமானுஜன் எழுதிய கடிதத்தைப் பையில் வைத்துக் கொண்டு இரவோடு மதுரையில் இருந்து கர்நாடக பேருந்து ஒன்றில் ஏறி மைசூர் போய் இறங்கினேன். நல்ல குளிர்காலமது. அதைப் பற்றிய பிரக்ஞையே எனக்கிருக்கவில்லை. ஒரு மப்ளர் கூட என்னிடமில்லை. மைசூரில் அதிகாலையில் இறங்கிய போது குளிர் தாங்க முடியவில்லை. நானோ குளிராடை அணிந்திருக்கவில்லை.

பேருந்து நிலையத்தை விட்டு இறங்கி நடக்கும் போது காதின் மடல்கள் நடுங்குகின்றன. நுரையீரலில் குளிர் நிரம்புகிறது. கைகள் என்னை அறியாமல் முகத்தைத் தடவியபடியே வருகின்றன. எங்காவது ஒரு தலைக்குல்லா மட்டுமாவது கிடைக்காதா என்று சாலையோரம் பார்த்தபடியே பெருமூச்சிட்டபடியே நடந்து கொண்டிருந்தேன். பனியில் நகரம் நனைந்து கிடந்தது. பெரிய சாலைகளில் அதிக வாகன நெருக்கடியில்லை. சிலைகள்கூட குளிரில் ஒடுங்கிப்போயிருந்தன. யானைகளும் குதிரைகளும் பரிவாரமாக சென்ற ராஜபாட்டைகள் கால மாற்றத்தில் நவீனச் சாலைகளாகி அதிகாலைப் பனியில் வாகன நெருக்கடியின்றிக் காலியாக நீண்டு கிடந்தன.

அவரது வீட்டின் முகவரியைத் தேடிப்போன போது ஆரஞ்சு நிற ஸ்வெட்டர் அணிந்திருந்த நடுத்தர வயது நபர், ராமானுஜன் பெங்களூர் சென்றிருப்பதாகவும் வருவதற்கு ஒரு வாரகாலம் ஆகும் என்றார். இவ்வளவு தூரம் தேடி வந்தும் அவரைப் பார்க்க முடியவில்லையே என்ற வருத்தத்துடன் மைசூரின் அரண்மனைப் பூங்காவில் பகல் முழுவதும் அந்த கடிதத்தைத் திரும்பத் திரும்பப் படித்துக் கொண்டிருந்தேன். அங்கிருந்த தபால் நிலையம் ஒன்றில் போஸ்ட் கார்ட் வாங்கி அவரைச் சந்திக்க வந்த விபரத்தை எழுதி நான் சென்று பார்த்த வீட்டு முகவரிக்கே அனுப்பி வைத்தேன். அது அவர் கைக்குக் கிடைத்ததா அவர் பார்த்தாரா என்று அதன் பிறகு தெரிந்து கொள்ள முடியவில்லை.

ஆனால் அவரது கடிதம் தந்த உத்வேகம் என் வாசிப்பையும் எழுத்தையும் தீவிரப்படுத்தியது. சங்கக் கவிதைகளைத் தமிழில் படிப்பது தரும் அனுபவத்திலிருந்து ஆங்கிலத்தில் படிக்கும் போது ஏற்படும் அனுபவம் முற்றிலும் புதியதாக இருந்தது. முக்கியமாக நாம் நிலப்பகுதி சார்ந்த கலாச்சாரக் கூறுகளை முதன்மைபடுத்தியே அந்தக் கவிதைகளை வாசித்திருக்கிறோம். ஆங்கிலத்தில் வாசிக்கின்ற ஒருவர் அதன் கலாச்சாரப் பதிவுகளை விட பிரதான உணர்ச்சிகளை மட்டுமே முன்வைத்து வாசிக்கிறார். ஆகவே அவரது அனுபவம் புதியதாக அமைந்திருந்தது.

இன்னொரு பக்கம் கிரேக்கக் கவிதைகளோடு ஒப்பிடும் போது தமிழ்க் கவிதையின் தரமும் பாடு பொருள்களும் கவித்துவ நுட்பமும் பன்மடங்கு உயர்வாக இருந்தது. கிரேக்கக் கவிதைகளின் அடிநாதமாக சூப்பர்நேச்சரல் எனப்படும் மீமாயக்கூறுகள் அமைந்துள்ளன. ஆனால் சங்கக் கவிதைகளோ மீமாயத்தை அதிகம் முன்வைக்கவில்லை. அத்தோடு அன்றாட நிகழ்வுகளையே மாயத்தன்மை கொண்டதாக உருவாக்கிக் காட்டுகிறது. குறிப்பாக தமிழ்க்கவிதையின் குரல் அதுவரை நான் வாசித்திருந்த ஆங்கில கவிதைகளில் இல்லாத நெருக்கத்தைக் கொண்டிருந்தது. அதற்காக ராமானுஜத்தின் மொழிபெயர்ப்புகளையும் தமிழ்ச் சங்கக் கவிதைகளையும் அருகருகே வைத்துப் பார்ப்பேன்.

இந்தியக்கதை மரபு குறித்து ராமானுஜம் அளவிற்கு நுட்பமாக அறிந்தவர்கள் இல்லை. கதைகேட்பது அவரது பால்யநாட்களில் குடும்பத்திலிருந்து துவங்கியிருந்தது. அத்திபட்டு கிருஷ்ணசாமி ராமானுஜன் எனப்படும் ஏ.கே. ராமானுஜத்தின் குடும்பம் மைசூரில் வசித்த தமிழ்க் குடும்பம். அவரது அப்பா அத்திபட்டு அரசூரி கிருஷ்ணசாமி மைசூர்ப் பல்கலைக்கழகத்தில் கணிதப் பேராசிரியராக வேலை பார்த்து வந்தார். வானவியலில் ஈடுபாடு கொண்டவர். தமிழ், சமஸ்கிருதம், கன்னடம், ஆங்கிலம் நான்கிலும் புலமை பெற்றவர். அவர்களது வீடு நிறைய புத்தகங்கள் இருந்தன.

வீட்டின் சமையல் அறையில் தமிழும் வரவேற்பு அறையில் கன்னடமும் பூஜை அறையில் சமஸ்கிருதமும் சிந்தனையில்ல ஆங்கிலமும் இருந்தன என்று ராமானுஜமே ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறார். வைதீகமான பிராமணக் குடும்பம் என்ற போதும் அவர் வீட்டில் மாறி வரும் கலாச்சாரச் சூழல்கள் குறித்தும் புதிய சமூக மாற்றங்கள் குறித்தும் விழிப்புணர்வு இருந்தது.

ராமானுஜத்தின் அம்மா தமிழிலும் கன்னடத்திலும் நிறைய புத்தகங்களை வாசித்திருக்கிறார். அதைக் கதையாக தன் பிள்ளைகளுக்கு அவர் சொல்வது வழக்கம். இருபத்தைந்து வயதில் ராமானுஜத்தின் அப்பா இறந்து போகவே குடும்பச்சுமைகளை ஏற்று வேலைக்குப் போக வேண்டிய நிலை உண்டானது.

மைசூர்ப் பல்கலைக் கழகத்தில் ஆங்கில இலக்கியம் படித்த ராமானுஜன் கேரளாவில் ஆங்கில ஆசிரியராக வேலைக்குச் சென்றார். அதன் பிறகு கர்நாடகாவில் உள்ள தார்வாரில் சில ஆண்டுகள் வேலை செய்தார். அங்கிருந்து பூனா சென்று டெக்கான் கல்லூரியில் ராக்பெல்லர் ஆய்வுத் திட்டத்தின் உதவியோடு ஆய்வுகளை மேற்கொண்டார். 1958இல் அமெரிக்கா சென்ற ராமானுஜன் அங்கே கன்னடத்துறையிலும், தென்கிழக்கு ஆசியத்துறையிலும் பேராசிரியராகப் பணியாற்றினார்.

1967இல் அவரது சங்கக் கவிதைகளின் ஆங்கில மொழியாக்கம் வெளியானது. அது தமிழ்க் கவிதைகள் குறித்து அது வரையிருந்த மேலைப் பார்வையை முற்றிலுமாக மாற்றியமைத்தது. தமிழ்க் கவிதையின் தொன்மை குறித்து அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் அப்போதுதான் கவனம் கொள்ளத் துவங்கின. சங்கத்தமிழ்க் கவிதைகள் மட்டுமின்றி கன்னட பக்திப் பாடல்களையும், ஆழ்வார் பாசுரங்களையும், யு.ஆர். அனந்த மூர்த்தியின் கன்னட நாவலான சமஸ்காராவையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார்.

ராமானுஜத்தின் முன்முயற்சிகள் காரணமாகவே தமிழின் செவ்வியல் இலக்கியங்கள் ஆங்கிலத்தில் பெரிதாகக் கவனம் கொள்ளப்பட்டன.

ராமாயணப் பாடபேதங்கள் கதைமரபுகள் குறித்தும், நாட்டார் கதைகளின் வகைப்படுத்துதல் குறித்தும் வெளியான ராமானுஜத்தின் கட்டுரைகளைத் தீவிரமாக வாசித்து உள்வாங்கியிருந்தேன்.

அதில் அஸ்ஸாமில் உள்ள ராமாயணத்தில் சீதையும் சூர்ப்பநகையும் தேர்ந்த நெசவாளிகள். அவர்கள் மிக நுட்பமாக நெசவு நெய்யக்கூடியவர்கள் என்ற தகவல் இருப்பதைச் சுட்டிக்காட்டி இன்றும் அஸ்ஸாமியப் பெண்களுக்கு நெசவு நெய்யும் நுட்பம் இருப்பதைச் சான்றாகக் காட்டியதும் தமிழகத்தில் காணப்படும் ராமாயண நாட்டார்கதைகளில் தசரதன் மனைவியர் மசக்கையாக இருந்த நாட்களில் முறுக்கு இட்லி வடை தோசை சாப்பிட ஏங்கினார்கள் என்றும் அதை அரசன் தீர்த்து வைத்ததாகவும் வரும் குறிப்புகளை வேடிக்கையாக அடையாளம் காட்டியதும் முக்கியமான பதிவுகளாகும்

ஏ.கே. ராமானுஜத்தின் அன்னய்யாவின் மானுடவியல் என்றொரு சிறுகதை மிக முக்கியமானது. இந்தக்கதை அமெரிக்கப் பல்கலைக் கழக ஆய்வுகளைக் கேலி செய்யக்கூடியது. மைசூரில் உள்ள பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்த அன்னய்யா குடும்ப ஒழுங்குகள் எதற்கும் கட்டுப்படாமல் தன்னிச்சையாக இருந்து வருபவன். அவனது ஒரே ஆசை அமெரிக்கா போக வேண்டும் என்பதே. ஆங்கில இலக்கியத்தில் ஆய்வு செய்வதற்காக அமெரிக்கா போக நினைக்கிறான். இன்னொரு பக்கம் அமெரிக்கா போய்வந்த பிறகு தான்

விவேகானந்தர் உலகம் அறியும் மனிதர் ஆனார். காந்தி லண்டன் போனது தான் அவரது வாழ்வின் முக்கிய திருப்பு முனை. ஆகவே தானும் இந்தியாவை விட்டு வெளியே போய் தனது அடையாளத்தை உருவாக்க ஆசைப்படுகிறான். அப்படியே போராடி அமெரிக்கா போய் சிகாகோ பல்கலைக் கழகத்தில் ஆய்வுமாணவராகச் சேர்கிறான்.

அமெரிக்கா போகும் வரை ஆங்கில மோகம் கொண்டிருந்த அவன் அங்கே சென்றதும் சமஸ்கிருத மோகம் கொள்ளத் துவங்குகிறான். இங்கிருந்த வரை அமெரிக்கா பற்றியே வாய் ஓயாமல் பேசிக் கொண்டிருந்தவன் அங்கே போனதும் இந்தியாவை பற்றியே பேசிக் கொண்டிருந்தான். அப்பா சொல்லி கீதை படிக்க மறுத்த அவன் சகமாணவிக்குப் புரிய வைக்க கீதையை ஆழ்ந்து படிக்கிறான். மானுடவியல் துறை ஆய்வு மாணவராக தீவிரமாகப் படிக்கிறான். அப்போது ஒரு நாள் இந்தியக் குடும்பங்களின் சடங்குகள் பற்றிய ஒரு ஆய்வு நூலைப் படிக்கிறான். அதில் பிறப்பு, இறப்பு, வளைகாப்பு, திருமண, சடங்குகள் குறித்து விரிவாகப் பதிவுகள் உள்ளன. ஆச்சரியத்துடன் அதை வாசிக்கிறான். அதில் ஒரு புகைப்படம் இருப்பதைக் காண்கிறான்.

அவனுக்கு ஆச்சரியமாக உள்ளது. அது அவனது மாமாவின் புகைப்படம். அவசரமாக அடிக்குறிப்பைப் படித்துப் பார்த்தால் அவன் அக்ரஹாரத்தைச் சேர்ந்த மாமா ஒருவர் உதவி செய்த குறிப்பு இருக்கிறது. அடுத்த சில அத்யாயங்களை வாசித்துப் பார்த்தால் அவன் அப்பா இறந்து போன போது நடந்த சடங்குகள் புகைப்படங்களுடன் காணப்படுகின்றன. தானே அப்பா செத்ததிற்கு ஊருக்குப் போகவில்லை ஆனால் எங்கோ ஒரு ஆய்வாளன் அதைப் படமாக்கித் தன் புத்தகத்தில் போட்டிருக்கிறானே என்ற ஆதங்கத்துடன், விதவை என்ற பிரிவைத் தேடிப் பார்க்க அங்கே அவனது அம்மாவின் விதவைக் கோலம் புகைப்படமாக உள்ளது.

தனது குடும்பம் தான் மானுடவியல் ஆய்வின் காட்சிப்பொருளாக மாறியிருக்கிறது என்பதை அன்னய்யா உணர்வதோடு கதை முடிகிறது. அங்கதமும் ஆழமான விமர்சனமும் கொண்ட கதையது. ஏன் ராமானுஜம் அதிகம் சிறுகதைகள் எழுதமால் போனார் என்ற ஏக்கம் என்னைப் போன்றவர்களுக்கு இன்றுமிருக்கிறது.

அதன் ஒரு வருசத்தின் பிறகு எனது நண்பரும் ஆங்கிலப் பத்திரிகையாளருமான அனந்த சங்கரைப் பார்ப்பதற்காக பெங்களூர் சென்றிருந்த போது அவர் வீட்டில் இல்லை. அவரது துணைவியார் அனந்த் நண்பர் வீட்டில் நடைபெறும் பார்ட்டிக்கு சென்றிருக்கிறார். அங்கே உங்களை இறக்கிவிடட்டுமா என்று கேட்டார். சரி என்றதும் தன்னுடைய காரில் பெங்களூரின் ரேஸ் கோர்ஸ் சாலை அருகில் உள்ள ஒரு வீட்டின் முன்னால் இறக்கிவிட்டார்.

அழைப்பு மணியை அழுத்தி உள்ளே போனபோது உள்ளே ஆறேழு பேர் இருந்தார்கள். அனந்தசங்கர் என்னை அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார். அப்போது ஒரு சோபாவில் சாய்ந்த படியே கையில் ஒரு புத்தகத்தைப்பாதி பிரித்தபடியே விஸ்கி அருந்திக் கொண்ருந்த ஒருவரிடம் என்னை அறிமுகப்படுத்திவிட்டு என்னிடம் இவர்தான் ஏ.கே.ராமானுஜன் கேள்விப் பட்டிருக்கிறீர்களா என்று நண்பர் கேட்டார்.

என்னால் நம்பவே முடியவில்லை. நான் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்த ராமானுஜன் இவர்தானா என்ற வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தேன். தோற்றத்திலே அவர் அமெரிக்காவிலிருந்து வந்திருப்பவர் என்பது தெரிந்தது. அவரது பேசும் முறை மற்றும் ஆங்கில உச்சரிப்பில் அதிகப்பட்ட அமெரிக்கத்தன்மையிருந்தது. அறுபது வயதை ஒத்த தோற்றம். தடித்த புருவங்கள், மீசையில்லாத முகம், ஆடைகளில் அதிக கவனம் கொண்டவரில்லை என்பது உடையில் தெரிந்தது. அவர் விஸ்கி கிளாஸைக் கையில் வைத்தபடியே தமிழா என்று கேட்டார். ஆமாம் என்றேன். எந்த ஊர் என்றபடியே அருகில் வந்து உட்காரச் சொன்னார். நான் மதுரை என்றதும் அவர் முகத்தில் சிறிய வெளிச்சம் தோன்றி மறைந்தது. அவர் என் கதையொன்றை வாசித்திருப்பதைப் பற்றி நினைவுபடுத்தினேன்.

ராமானுஜன் என்ன கதை என்று சில நிமிசம் யோசித்துக் கொண்டிருந்தார். கதையை நினைவுபடுத்திச் சொன்னதும், ஆங்கிலத்தில் சமகாலத் தமிழ்ச் சிறுகதைகளின் தொகுப்பு ஒன்றைக் கொண்டுவரலாம் என்று தனக்கு ஒரு யோசனை உண்டானது என்றும் அதற்காக நண்பர்களிடம் சிபாரிசு செய்யச் சொன்ன போது உங்கள் கதை என் கண்ணில் பட்டது. அந்தக் கதையில் சொல் முறை எனக்குப் பிடித்திருந்தது. தமிழில் நிறைய புதிய சிறுகதையாசிரியர்கள் வந்திருக்கிறார்கள் என்று பாராட்டிய படியே, தொடர்ந்த பல்கலைக்கழக வேலைகள், ஆய்வுகள். அந்தத் தொகை நூலைத் தொடர முடியவில்லை என்றார்.

நான் ராமானுஜத்திடம் அவர் தொகுத்த நாட்டார் கதைகளைப் பற்றி வியந்து சொல்லிக் கொண்டிருந்தேன். அவர் சிரித்தபடியே ஆயிரத்தொரு இரவு கதைகளை விடவும் நம்மிடமே அதிக கதைகள் உள்ளன. அவை தொகுக்கப்பட்டால் மிகப் பெரிய கதைத்தொகுதியாக இருக்கக் கூடும் என்றபடியே நீங்கள் அப்படி ஏதாவது கதை வைத்திருக்கிறீர்களா என்று கேட்டார். நான் ஒரு ஊர்ல ஒரு நரி அத்தோடு கதை சரி என்று தமிழில் ஒரு கதையிருக்கிறது என்று சொன்னேன்.

புன்சிரிப்புடன் அதைத் தானும் கேட்டிருப்பதாகச் சொல்லி, இப்படி வாசகனை கதை சொல்லத் தூண்டும் கதைகள் பிறமரபுகளில் அதிகமில்லை என்று வியந்தபடியே தான் மதுரையில்

ஒரு முறை மல்லிகைப் பெண் என்ற கதையைக் கேட்டதாகவும் அந்தக் கதையில் ஒரு பெண் சிரிக்கும் போது மல்லிக்கைப் பூ வாசனை அடிக்கும் என்று சொன்னார். அத்தோடு அதே கதை வேறு வடிவத்தில் மல்லிகைப் பூ வாசனையுள்ள சிரிக்கும் இளவரசி பற்றி கர்நாடகாவில் கதையிருக்கிறது என்று அதன் மாற்றுவடிவத்தைச் சொன்னார்.

அவரிடம் சொல்லித் தீராத கதைகள் மனதில் இருந்ததை அந்தச் சந்திப்பு உறுதி செய்தது. தன்னுடைய வீட்டுக்கு வேலைக்கு வந்த பெண் சொல்லியகதைகளுக்கும். அம்மா சொன்ன கதைகளுக்கும் அடிப்படையிலே வேறுபாடு இருந்ததை உணர முடிவதாகக் கூறினார். ஒரே கதையை சில நேரம் இருவரும் சொல்லியிருக்கிறார்கள். வேலைக்காரப் பெண் சொல்லிய கதைதான் இன்றும் நினைவில் இருக்கிறது. உலகிலே சிறந்த கதை சொல்லிகள் பெண்களே என்றார்.

சில நிமிசங்களில் பேச்சு இலக்கியத்திலிருந்து திரும்பி தினசரி நாளிதழ்களில் வரும் கொலைச் செய்திகளைப் பற்றியதாக மாறியது. தனக்கு அது போன்ற செய்திகளில் ஆர்வம் உண்டு. அந்தச் செய்திகளும்கூட கதை சொல்லும் முறைகளே.

ஒரு செய்தியைப் படித்துப் பாருங்கள் என்று அங்கிருந்த கன்னட நாளிதழ் ஒன்றில் வெளியான செய்தியொன்றை வாசித்துக் காட்டினார். அங்கிருந்தவர்கள் சிரித்தார்கள். பேச்சு அதிலிருந்து மாறி அக்கமகாதேவியின் கவிதைகள் பற்றியதாக மாறியது. இரண்டு மணிநேரம் அந்த அறையில் அவர் பேசுவதும் குடிப்பதுமாக இருந்தார். அவரது நுண்மையான பார்வைகள் எனக்குள் வியப்பை அதிகப்படுத்தியபடியே இருந்தன.

அந்த விருந்து மாலையே துவங்கியிருந்தது. எனவே நான் சென்ற இரண்டுமணி நேரத்தில் அனைவரும் விடைபெற்றுக் கொள்ளத் துவங்கினார்கள். ஏ.கே.ராமானுஜம் கூடவே போய்விடமாட்டோமா என்று நான் ஏங்கிக் கொண்டிருந்தேன். அவர் தன்னுடைய நண்பர் காரில் அழைத்து கொண்டு விடுவதாகச் சொல்லியதை மறுத்து, தான் நடந்து போவதில் எப்போதுமே ஆர்வம் கொண்டவன் என்று தனியாக நடந்து செல்லத் துவங்கினார். இன்னொரு நாள் அவரைச் சந்திக்கலாம் என்று நண்பர் சொன்னார். ஆனால் அதன் பிறகு அவரைச் சந்திக்க முடியவில்லை.

சில ஆண்டுகளுக்குப் பின்னர் அமெரிக்காவில் ஏ.கே. ராமானுஜன் இறந்து போய்விட்டதாகச் செய்தியைப் படித்த போது கலங்கிப் போய் விட்டேன். என்ன உறவு அது. ஒரேயொரு முறை அவரை பார்த்திருக்கிறேன். அவரது கட்டுரைகளை, கவிதைகளை படித்திருக்கிறேன். மற்றபடி அவரோடு நெருக்கமாகப் பழகியதில்லை. ஆனால் அந்த இழப்பு நெருக்கமான ஒரு நண்பரின் இழப்பைப் போலவே மனதில் நெடுநாள் வலியோடு இருந்தது.

உண்மையில் ராமானுஜத்தின் மறைவிற்குப் பிறகு அவரது அத்தனை படைப்புகளையும் வாசித்து விட வேண்டும் என்ற உத்வேகம் அதிகமானது. ஆக்ஸ்போர்டு பல் கலைக்கழகம் வெளியிட்டுள்ள அவரது மொத்தக் கட்டுரைகளின் தொகுப்பு. கவிதைத் தொகுப்பு. மொழியாக்கங்கள் என்று தொடர்ச்சியாக வாங்கிப் படித்தேன்.

ராமானுஜம் தமிழ் இலக்கியத்தின் மீது கொண்டிருந்த விருப்பமும் பங்களிப்பும் அளப்பறியது. அவர் தமிழின் தொன்மையை மிகச் சரியாகப் புரிந்து கொண்டிருந்தார். தமிழின் கவித்துவமரபானது உலகின் முன்னோடி மரபு என்பதில் அவருக்கு நம்பிக்கையிருந்தது. அது போலவே நாட்டார்கதைகளின் வழியே நமது மரபான மனதின் கற்பனைகளும் நம் நினைவுகளும் பதிவாகி உள்ளன என்பதை அவர் உணர்ந்திருந்தார். அவர் சுட்டிக்காட்டிய தொகுத்த கதைகள் அத்தனையும் முக்கியமானவை. அந்தக் கதைகளின் ஊடாக வெளிப்படும் நவீன உளவியல் தன்மைகளை அவரே ஆராய்ந்திருக்கிறார்.

உதாரணத்திற்கு ஓடிபஸ் காம்ப்ளெக்ஸ் எனப்படும் தாய் மகனுக்குமான பாலிச்சை தொடர்பான உளச்சிக்கல் கொண்ட கதை தமிழிலும் கன்னடத்திலும் என்ன விதமான மாறுபாடுகளுடன் உள்ளது என்பதைப் பற்றிய அவரது கட்டுரை மிக முக்கியமானது. அது இந்திய மனதில் பால் உணர்ச்சிகள் எது போன்ற பிம்பங்களை உருவாக்குகின்றன. எப்படியானதொரு வெளிப்பாட்டை அவர்கள் முன்வைக்கிறார்கள் என்பதை நுட்பமாக விவரிக்கின்றன.

இது போலவே ராமாயணம் மகாபாரதம் போன்ற இதிகாசங்கள் குறித்த நாட்டார்கதைகளையும், கதை எப்படிச் சொல்லப்படுகின்றன என்பதைப் பற்றிய கதைகளையும், முட்டாள்கள் திருடர்கள் அரசர்கள் பற்றிய கதைகளையும் அவர் சிறப்பாக ஆராய்ந்து தொகுத்திருக்கிறார்.

எழுத்தின் வழியாக மக்கள் வாழ்க்கை பதிவு செய்யப்பட்டதை விடவும் சொல்கதைகள், பாடல்கள் வழியாகப் பதிவு செய்யப்பட்டவை ஏராளம். அதை முறையாக நாம் பதிவு செய்யத் தவறிவிட்டோம் என்பதே ராமானுஜத்தின் ஆதாரக் குரல்.

தமிழில் நாட்டார்கதைகள் பலராலும் தொகுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை முழுமையாக ஒன்று சேர்க்கப்படவில்லை. கல்விப்புல ஆய்வுகளுக்கு வெளியே நாட்டார்கதை மரபுகள் குறித்த கவனம் இன்னமும் உருவாக வில்லை. ராமானுஜம் அதைச் செய்யத் தீவிரமாக முயற்சி செய்தார். அழிந்து வரும் மரபுசார் அறிவை சேமிக்க வேண் டும் என்ற ஆசை அவருக்கு அதிகமாக இருந்தது.

அவரது பெருமுயற்சி ஒன்று இன்று தமிழகத்தில் சிறந்த ஆய்வு நிறுவனமாக உருவாகி உள்ளது. அது கோட்டையூரில் வசித்த ரோஜா முத்தையா சேகரித்து வைத்திருந்த ஆயிரக்கணக்கான புத்தகங்கள் அடங்கிய பெரிய நூலகத்தை சிகாகோ பல்கலைக்கழகம் விலைக்கு வாங்கி அதை டிஜிட்டல் முறையில் பதிவு செய்து இன்று சென்னையில் நவீன ஆய்வு நூலகமாக மாற்றியுள்ளது. ரோஜா முத்தையா ஆய்வு நிறுவனம் என்ற ஆவணக்காப்பகம் இன்று பலருக்கும் பயன்படுகிறது என்றால் அதற்கான முன்னோடி கர்த்தா ஏ.கே. ராமானுஜமே.

ஏ.கே. ராமானுஜத்தின் முக்கிய கட்டுரைகள் பல தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. ஆனால் அவை முழுமையாகத் தொகுக்கப்பட்டு இதுவரை தனிநூலாக வெளி வரவில்லை. அதன் தேவை இன்று அதிகமாக உள்ளது. ராமானுஜத்தின் அக்கறையை முன்னெடுத்துச் செல்வதற்கு இதுவே முதல்படி.

அசோகமித்திரன் அன்றாட வாழ்வின் சரித்திரம்

அசோகமித்திரனை நீண்ட நாட்களுக்குப் பிறகு திண்ணை இணைய இதழை நடத்திவரும் கோ.ராஜாராம் மகளின் திருமண வரவேற்பில் சந்தித்தேன். வீட்டிற்குக் கிளம்பிக் கொண்டிருந்தார். சம்பிரதாயமான நல விசாரிப்புகளுக்குப் பிறகு ஆட்டோவில் போக வேண்டியதுதானே என்று சொல்லி வழியில் சென்ற ஒரு ஆட்டோவை நிறுத்தினேன். அவரோ இல்லை நான் பேருந்தில் போவதற்குத்தான் விரும்புகிறேன். பேருந்து நிலையம் வரை துணைக்கு வாருங்கள் என்றார்.

இருவரும் சாலையைக் கடந்து செல்வதற்காக நின்று கொண்டேயிருந்தோம். அவர் செல்ல வேண்டிய பேருந்து எங்கே நிற்கும் என்று விசாரிப்பதற்காக விடுவிடுவென அருகில் இருந்த பெட்டிக்கடைக்குச் சென்று அங்கிருந்த விற்பனையாளனைக் கேட்டார். அவரது கேள்வியை அவன் கண்டுகொள்ளவேயில்லை. ஆனால் அருகில் சைக்கிளில் சாய்ந்து கொண்டிருந்த இன்னொரு ஆள் தூரத்தில் தெரியும் பேருந்து நிறுத்தத்தைக் காட்டினார்.

இரவு எட்டரை மணியைத் தாண்டியிருந்தது என்பதால் பேருந்து எளிதில் வரவில்லை. அவர் பிடிவாதமாக பேருந்தில்தான் போவேன் என்று சொல்லிக் கொண்டிருந்தார். மழைநாளின் இருள் அடைந்து போயிருந்த புரசைவாக்கம் சாலையில் எங்களைத் தவிர ஒரு பெண்மணியும் இரண்டு நடுத்தரவயது ஆண்களும் நின்றிருந்தார்கள்.

பேருந்து வரும்வரை அவர் பேசிக் கொண்டிருந்தார். பேருந்தில் அதிகமான கூட்டமிருந்தது. அதைப் பற்றிய எந்தச் சலிப்புமின்றி பேருந்தில் ஏறி நின்று கொண்டார். பேருந்து கிளம்பியதும் உள்ளேயிருந்து குனிந்து எனக்கு கையசைத்து விடை தந்தார். நான் சாலையில் நின்றபடியே அவரைக் கவனித்துக் கொண்டிருந்தேன்.

அசோகமித்திரனை முதன்முதலாகப் பார்த்தபோது ஒரு பழைய சைக்கிளை உருட்டிக் கொண்டு சாலையைக் கடப்பதற்காக தி.நகர் பேருந்து நிலையத்தின் எதிரில் நின்று கொண்டிருந்தார். இவ்வளவுக்கும் இப்போது இருப்பதுபோல அதிக வாகன நெருக்கடி இல்லாத நாட்களது. இந்தியா காபி ஹவுஸ் முன்பாக நான் நின்றிருந்தேன் .

அவர்தான் அசோகமித்திரனா என்று சந்தேகமாக இருந்தது. அவரது புகைப்படம் ஒன்றை புத்தகத்தின் பின்அட்டையில் பார்த்திருக்கிறேன். அதில் இருந்ததை விடவும் மிகவும் மெலிந்து போனவராக நேரில் காணப்பட்டார்.

அந்த மாத கணையாழியில் எனது குறுநாவல் ஒன்று ஜானகிராமன் குறுநாவல் போட்டியில் தேர்வு செய்யப்பட்டு வெளியாகி இருந்தது. அசோகமித்திரன்தான் தேர்வு செய்திருந்தார். முன்னதாக நான் கணையாழியில் இரண்டு மூன்று கதைகள் எழுதியிருக்கிறேன். அத்தோடு அசோகமித்திரன் கணையாழியின் கௌரவ ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவ்வளவு தொடர்பிருக்கிறது போதாதா என்று அவர் அருகில் போய் வணக்கம் என்று சொன்னேன்.

அவர் சற்றே பதட்டத்துடன் உங்களுக்கு என்ன வேணும் என்று கேட்டார். நீங்க அசோகமித்திரன் தானே என்று கேட்டேன். ஆமா நீங்க யாரு என்றார். உங்க வாசகன், கணையாழியில் கதை எழுதியிருக்கிறேன் என்று என் தோள் பையிலிருந்த கணையாழியை எடுத்து நீட்டினேன். அவர் அதைக் கண்டு கொள்ளவில்லை.

'பாருங்க சார். வாசகனா இருக்கிறது நல்லதுதான். ஆனா இப்படி வழியில் சந்தித்துப்பேசினா எப்படி? இங்கே ரோட்டை கிராஸ் பண்றதே பெரிய பிராப்ளம். இதுல நேத்து மழை பெஞ்சு வழியெல்லாம் தண்ணி கட்டியிருக்கு.. நிறைய கொசுவேற. நீங்க எந்த ஊருன்னு சொன்னீங்க' என்று கேட்டார்.

பெயரையும் ஊரையும் சொன்னதும் 'படிச்சிருக்கேன்' என்றபடியே அவரசமாக அங்குமிங்கும் பார்த்த படியே சைக்கிளை சாலையைக் கடந்து உருட்டிச் சென்றார். நானும் பின்தொடர்ந்தேன். பீரங்கி ஒன்றை யுத்தமுனைக்கு பாதுகாப்பாகக் கொண்டு சென்று சேர்த்துவிட்ட ராணுவ வீரனைப் போல சைக் கிளை பாதுகாப்பாகக் கொண்டு விட்ட சந்தோஷம் அவரது முகத்தில் தெரிந்தது.

வாழைப்பழம் விற்கும் தள்ளு வண்டிக்காரன் அருகில் தன்னுடைய சைக்கிளை நிறுத்திவிட்டு ஏதாவது 'வேலை பாக்குறீங்களா' என்று கேட்டார். 'இல்லை சார். கதை எழுதுறேன். காலேஜ் படிச்சி முடிச்சிட்டேன்' என்று சொன்னேன். வாழைப் பழ வண்டி அருகில் யானைக்கால் வந்து வீங்கியிருந்த ஒரு பிச்சைகாரன் அலுமினியத் தட்டில் ஊற்றி டீ குடித்துக் கொண்டிருந்தான். அவனைச் சுட்டிக்காட்டி 'இவன் வீடு கண்ணமாப் பேட்டை சுடு காடுகிட்டே இருக்கு. ஒருநாள் இவன் ரிக்ஷாவில் வீட்டுக்குப் போறதை பாத்திருக்கேன்' என்றார்.

அந்த ஆள் டீயை தன் நாவால் நக்கிக்கொண்டிருந்தான். அது அசோகமித்திரனுக்குப் பிடிக்கவில்லை என்பது அவரது முகச் சுழிப்பிலே தெரிந்தது. 'மாம்பலத்தில் நிறைய யானைக்கால் வியாதி உள்ள வங்க இருக்காங்க. அதுக்கு காரணம் கொசுதான்' என்றார். எனக்கு அவரது பேச்சும் அவதானிப்பும் உள்ளூர சிரிப்பை வரவழைத்தபடி இருந்தது.

பிறகு ஏதோ யோசனைக்குப் பிறகு, 'கதை கட்டுரை எழுதுறது எல்லாம் நல்ல விஷயம் தான். ஆனா அதை நம்பி மட்டும் இருக்காதீங்க. ஏதாவது வேலை பாருங்க. இங்கே அறை

கிடைக்கிறது கஷ்டம். நல்ல தண்ணீர் கிடைக்காது. நீங்க கிராமம்னு வேற சொல்றீங்க. கதை எழுதுறது எல்லாம் ஒண்ணும் பெரிய விஷயமில்லை. பழக்கம்தான். காரணமே இல்லாம இங்கே வந்து நிறைய பேர் சிரமப்பட்டு இருக்கிறாங்க' என்றார்.

அந்த நாட்களில் என் மீது உண்மையான அக்கறை கொண்டு எவராவது வேலைக்குப் போகும் படியாகச் சொன்னால்கூட நான் ஆத்திரப்படக்கூடியவனாக இருந்தேன். வேறு யாராவது பேசி இருந்தால் நான் கத்தியிருப்பேன். ஆனால் அவர் எனக்கு விருப்பமான எழுத்தாளர் அசோகமித்திரன் என்பதால் மௌனமாக நின்று கொண்டிருந்தேன். சில நிமிஷங்கள் இவரும் பேசிக் கொள்ளவேயில்லை. பிறகு அவர் சைக்கிளை உருட்டிக் கொண்டு நடந்துபோகத் துவங்கினார்.

எதற்காக இவருக்கு சைக்கிள். ஒருவேளை துணைக்கு ஒரு ஆள் வருவது போல கூட வைத்திருக்கிறாரோ என்று பார்த்தபடியே இருந்தேன்.
அருகில் தாமோதரரெட்டி தெருவில்தான் அவர் வீடு இருக்கிறது என்று அப்போது தெரியாது. அதன் சில வாரங்களுக்குப் பிறகு அவரை அமெரிக்கன் சென்டர் நூலகத்தில் மறுமுறை சந்தித்தபோது முந்தைய சந்திப்பின் சுவடு ஏதும் இன்றி மிக நெருக்கமாக அருகில் அமர்ந்து ஒன்றாக காபியைப் பகிர்ந்து கொண்டு என்ன புத்தகங்கள் படித்துக் கொண்டிருக்கிறேன், அமெரிக்கன் சென்டர் நூலகத்திற்கு அடிக்கடி வருவேனா என்று விசாரிக்கத் துவங்கினார். அதன் பிறகு ஒருமுறைகூட வேலை பற்றி எதையும் கேட்கவோ சொல்லவோயில்லை.

அன்றிலிருந்து இந்தப் பதினெட்டு ஆண்டுகளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவரது வீடு தேடிச் சென்றிருக்கிறேன். இலக்கிய விவாதம் செய்திருக்கிறேன். மிகச் சிறிய வீடு. முன்அறையில் நாற்காலி ஒன்றிற்குள் ஒடுங்கியபடியே மிக மெதுவான குரலில் தீர்க்கமாக தன் அபிப்ராயங்களைச் சொல்வார். அவர் கலந்து கொள்ளும் இலக்கிய நிகழ்வுகளில் அவரைப் பார்த்திருக்கிறேன். இணக்கமான சிரிப்பும் பழகுவதற்கு எளிமையும், கைகளைப் பற்றிக் கொண்டு உரிமையோடு பேசும் நெருக்கமும் தனிக்குணமாக இருந்தன.

குங்குமம் இதழில் உதவி ஆசிரியராக சில மாதங்கள் வேலை பார்த்தபோது எந்த சிறப்பிதழ் என்றாலும் உடனடியாக சிறு கட்டுரை ஒன்றை எழுதித் தரும்படியாக அசோகமித்திரனைத் தான் தொடர்பு கொள்வேன். ஒருமுறை கூட அதை அவர் தொல்லையாகக் கருதியதில்லை. மாறாக ஒரு நாள் அல்லது இரண்டுநாள் இடை வெளியில் கட்டுரையை முடித்து விட்டு கொடுத்து அனுப்பி வைப்பார். இதழின் பக்கங்களுக்கு மிகக் கச்சிதமான அளவில் அது பொருந்தியிருக்கும். ஒரு முறைகூட அவரது எழுத்தை எடிட் செய்ய வேண்டிய அவசியமே இருக்காது. மற்றக் கட்டுரைகளில் இருந்து தனித்துத் தெரியும்படியாக அவரது பார்வைகளும் அமைந்திருக்கும்.

ஒருமுறை அமெரிக்கன் சென்டர் நூலகத்தில் பிளேடு ரன்னர் என்ற ரிட்லி ஸ்காட்டின் படத்தைக் காண்பதற்காக கவிஞர் பிரமீளுடன் சென்றிருந்தேன். படம் துவங்கிய ஐந்து நிமிஷங்களில் இருளுக்குள் அசோகமித்திரன் நடந்து வருவது தெரிந்தது. நான் அவரை அழைத்து அருகில் உட்காரச் சொன்னேன். அவரும் உட்கார்ந்து கொண்டார். படம் முடிந்து விளக்குகள் ஒளிரத் துவங்கியபோதுதான் அருகில் பிரமீள் உட்கார்ந்திருந்ததை அவர் கவனித்திருக்கக்கூடும்.

அசோகமித்திரனின் முகம் அப்படியே வெளிறிப்போனது. விடுவிடுவென அங்கிருந்து விலகி வெளியே போகத் துவங்கினார். உடனே பிரமீள் என்ன உங்க பிரண்டு என்னைப் பாத்துட்டு பேய் அடிச்ச மாதிரி போறார் என்று கேலி செய்தார். அந்த கேலிக்குள்ளாகவே அவர்களுக்குள் இணக்கமில்லை என்பது தெரியவந்தது. நான் எதையும் கேட்டுக் கொள்ளவில்லை.

ஆனால் வெளியே வந்த பிரமீள் எதையோ நினைத்து நினைத்து சிரித்துக் கொண்டிருந்தார். என்ன நடந்தது என்று சொல்லுங்கள் என்றபோதும் அவரால் சிரிப்பை அடக்க முடியவில்லை. பிறகு என்னிடம் ரகசியமான குரலில் தப்பா ஒண்ணும் நடக்கலை. அவர் ஒரு தடவை என்னை வேலைக்குப் போகச் சொல்லி ஆலோசனை சொன்னார். நான் கோபப்பட்டுட்டேன் அவ்வளவுதான் என்றார்.

வாழ்க்கையை மிக வறுமையான சூழலில் எதிர்கொண்டு நெருக்கடிகளுக்குள்ளாகவே குடும்பம் எழுத்து என்று அறிந்திருந்த அசோகமித்திரனுக்கு தன்னைப் போல இன்னொருவர் ஆகிவிடக்கூடாது என்ற அக்கறை இருந்தது நிஜமே. ஆனால் தோற்பதற்காகவே சூதாடலாம் என்று முடிவு செய்து கிளம்பிய எங்களைப் போன்றவர்களை அவரால் திருத்த முடியவில்லை என்பதுதான் நிஜம்.

தமிழின் பெரும்பான்மை எழுத்தாளர்கள் சிறு நகரங்களிலிருந்தும் கிராமங்களில் இருந்தும் எழுதத் துவங்கியவர்கள். அதனால் அவர்கள் படைப்பில் கிராமத்து மனிதர்களும் நிலம் சார்ந்த நினைவுகளும், சிறுநகர வாழ்க்கையும் , குடும்பஉறவு சார்ந்த பிரச்சினைகளும், வீழ்ச்சியடைந்த மனிதர்களின் கதைகளும் திரும்ப திரும்ப எழுதப்பட்டன. நகரம் அவர்களுக்கு தீவினையின் குறியீடு. அல்லது சீரழிவின் அடையாளம். ஆகவே நகரம் சார்ந்த வெறுப்புணர்வு இயல்பாகவே பலருக்குள்ளும் இருந்தது.

தமிழ்க் கதைகளில் மாநகர வாழ்வு சார்ந்த பதிவுகள் அதிகமில்லை. ஜெயகாந்தன் ஒருவகையில் மாநகரின் நடைபாதையோரம் வசிக்கும் மனிதர்களை, சேரி வாழ்க்கையை, அறியப்படாத உதிரிமனிதர்களை , தன் கதைகளை முன்னிலைப் படுத்தினார். ஆனால்

மத்திய தர வர்க்கத்து மனிதர்கள் தங்கள் வேலைக்காக, பிழைப்பிற்காக மாநகரத்திற்கு வந்து கிடைத்த இடத்தில் ஒண்டிக் கொண்டு நெருக்கடிகளுக்குள் அன்றாட வாழ்வைக் கொண்டு செல்லும் நிகழ்வுகளை முழுமையாக இலக்கியமாக்கியவர் அசோகமித்திரன். இதே மத்தியதர உலகின் வேறுமுகங்களை கோபி கிருஷ்ணன், விமலாதித்த மாமல்லன், திலீப்குமார் கதைகளில் காணமுடியும்.

சென்னையின் ஐம்பதாண்டுக் கால மாற்றங்களுக்கு உள்ள ஒரே இலக்கிய சாட்சி அசோகமித்ரனின் கதைகளே. சென்னையின் சமூக கலாச்சார நிலவியல் மாறுதல் குறித்து தன் நினைவுகளை அவர் தனிநூலாகப் பதிவு செய்திருக்கிறார். அத்தோடு அவரது பெரும்பான்மைக் கதைகளின் பின்புலமாகச் சென்னையும் அதன் அன்றாட நிகழ்வுகளும் அதை எதிர்கொண்ட மக்களின் எதிர்வினைகளும் பதிவாகி உள்ளன. ஒருவகையில் அவர் ஒருவரே முழுமையான சென்னை எழுத்தாளர். அவரது கதைகளே முழுமையான மாநகரக் கதைகள்.

புதுமைபித்தன் துவங்கி இன்றுவரை எத்தனையோ எழுத்தாளர்கள் சென்னைக்கு ஏதோ காரணங்களுக்காக இடம் மாறி வந்திருக்கிறார்கள். வசித்திருக்கிறார்கள். அவர்கள் படைப்புகளில் சென்னை அங்கும் இங்குமாகப் பதிவாகியிருக்கிறது. ஆனால் அராபியக்கதைகளில் வரும் பாக்தாத் நகரம் போல அசோகமித்ரனின் பெரும்பான்மைக் கதைகளில் சென்னை நகரம் முக்கிய பாத்திரமாக இடம் பெறுகிறது.

இன்னொரு பக்கம் பால்ய காலமும் செகந்தராபாத் நகரமும் அவர் மனதின் தாழ்வாரத்தில் ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன. இது பதினெட்டாவது அட்சக்கோடு நாவலில் மிக வலிமையாக வெளிப்பட்டுள்ளது. இந்தியப் பிரிவினை சார்ந்த முக்கிய இலக்கியப் பதிவு அது. ஒரு நகரம் வன்முறையின் கையில் சிக்கி எப்படி வதைபடுகிறது என்பதை அவர் விவரிக்கும் விதம் அற்புதமானது.

அசோகமித்திரன் பன்முகப் பட்ட கலைஞர், தமிழ்சினிமா, இலக்கியப் பத்திரிகை, பத்தி எழுத்து. சிறுகதை, நாவல், நவீன நாடகம், இலக்கியப் பயிலரங்கம் என்று அவர் செயல்பட்ட தளங்கள் விரிவானவை. இந்திய அளவில் தமிழ் எழுத்தாளர்களில் ஒரு சிலர்கூட அறிமுகமாகியிராத சூழலில் இவரது படைப்புகள் ஆங்கிலத்தில் பிரபல பதிப்பகங்களால் வெளியிடப்பட்டு தனித்து அறியப்பட்டார்.

சாகித்ய அகாதமி விருது பெற்றவர். அமெரிக்காவில் உள்ள அயோவா பல்கலைக்கழகத்தில் சென்று உலக எழுத்தாளர்களுக்கான சிறப்பு முகாமில் கலந்து கொண்டவர். ஆங்கிலத்திலும் எழுதும் திறன் கொண்டவர், பிர்லா விருது, டால்மியா விருது அட்சரா விருது உள்ளிட்ட பல

முக்கிய இந்திய விருதுகளைப் பெற்றவர். ஜெர்மன், சிங்கப்பூர், பாங்காங் என்று பல்வேறு உலக இலக்கிய நிகழ்வுகளில் பங்கு பெற்றவர். கடந்த நாற்பது ஆண்டுகாலமாக எழுதி வருகின்றவர் என்று எத்தனையோ சிறப்பு கொண்டவர்.

எனக்கு இவரது நாவல்களில் மிகவும் பிடித்தது ஒற்றன். அதை இதுவரை ஐம்பது முறைகளுக்கும் மேலாகப் படித்திருப்பேன். நான் அறிந்தவரை தமிழில் அது போல வேறு நாவல்களே இல்லை. இன்றைய பின்நவீனத்துவ நாவல்கள் பேசுகின்ற ஒன்றுக்கு மேற்பட்ட கதையாடல்கள் அவரிடம் அது பற்றிய எவ்விதமான பிரக்ஞையும் இன்றி படைப்பின் உத்வேகத்தில் இயல்பாக எழுதப்பட்டிருக்கின்றன.

ஒற்றன் நாவல் எதைப் பற்றியது என்று எளிதில் வகைப்படுத்திவிட முடியாது. அது நாவல் எழுதுவதைப் பற்றிய நாவல். அல்லது எழுத்தாளர்களைப் பற்றிய நாவல். அல்லது புனைவு சார்ந்த கனவுகள் ஒன்று சேர்க்கபட்ட நாவல் என்று சொல்லலாம்.

ஒற்றன், அமெரிக்காவின் அயோவா நகரில் ஏழு மாத காலம் உலகம் எங்குமிருந்தும் வந்திருந்த எழுத்தாளர்களுடன் ஒருவராக அசோகமித்திரன் கலந்து கொண்ட எழுத்தாளர்களுக்கான சிறப்புப் பயிலரங்கு நாட்களைப் பற்றியது. நாவல் என்ற வடிவம் குறித்து எழுத்தாளர்கள் கொண்டிருக்கும் கற்பனையும், ஒரு நாவல் எழுதப் படுவதற்கான சாத்தியங்களும் சாத்தியமின்மையும், கதைகளில் வரும் கதாபாத்திரங்களை விடவும் வியப்பாக அறியப்படும் எழுத்தாளர்களின் ஆளுமையையும் ஒற்றனைக் கொண்டாட வைக்கின்றது.

தமிழ் நாவல் பரப்பில் ஒற்றன் மிக முக்கியமான பங்களிப்பு. அசோகமித்ரனின் கரைந்த நிழல்களோ, தண்ணீரோ வாசகர்களின் முக்கிய கவனம் பெற்ற அளவு இந்த நாவல் முக்கியம் பெறவில்லை. ஆனால் என்வரையில் இது தமிழில் வெளியான உலகின் சிறந்த நாவல் என்றே சொல்வேன்.

அசோகமித்திரனின் எழுத்துலகம் தினசரி வாழ்க்கையின் நிகழ்வுகளால் நிரம்பியது. பேருந்திற்காகக் காத்திருப்பவர்கள், அலுவலகம் செல்கின்றவர்கள், வங்கியில். மருத்துவமனையில் காத்திருப்பவர்கள், கடன் வாங்க அலைபவர்கள், ரிக்ஷாக்காரர்கள், சாலையோர வணிகர்கள், பொருட்காட்சி, கடற்கரை என்று தன்னை ஆறுதல் படுத்திக் கொள்பவர்கள், வீட்டிற்குள் அடைபட்டுக் கிடக்கும் வெவ்வேறு வயதுப் பெண்கள், விளையாட இடமில்லாத சிறுவர்கள். தனித்துவிடப்பட்ட முதியவர்கள் என, சென்னையின் அன்றாட வாழ்வின் சரித்திரமே அவரது கதைகளின் மொத்த உலகம்.

இவர்கள் பெரிதும் அடித்தட்டு, மத்தியதர மனிதர்கள். அவர்களின் உலகில் அசோகமித்திரனும் ஒருவ ராக வாழ்ந்திருக்கிறார். தண்ணீர் பிடிப்பதற்காக அவர் வீட்டு வாசலில் வரிசை காத்திருந்திருப்பதை நானே கண்டிருக்கிறேன், கொசுவும் இடைவிடாத இரைச்சலும், கிருஷ்ணவேணி சினிமா தியேட்டரின் ஆரவாரத்திற்கும் இடையில் தன்னுடைய சிறிய ஓட்டு வீட்டினுள் நாற்காலியில் ஒடுங்கிக் கொண்டு அவர் உலக இலக்கியம் வாசித்துக் கொண்டிருப்பார்.

எழுதுவதற்கான சூழல் வீட்டில் இல்லை என்பதால் அசோகமித்திரன் நடேசன் பூங்காவிற்குச் சென்று அங்கிருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்து பல ஆண்டுக் காலம் எழுதி வந்திருக்கிறார். நானே சிலமுறை கண்டிருக்கிறேன். வெயில் அவர் காகிதத்தில் ஊர்வதையோ, கண்களில், தலையில் விரல்களால் துழாவுவதையோ அவர் கண்டுகொள்வதேயில்லை. எழுதும் காகிதம் கூட பாதியாகத் துண்டிக்கப்பட்ட ஒரு பக்க வெள்ளைக் காகிதங்களே.
வாழ்வின் நெருக்கடியிலிருந்தே அவரது எழுத்து பிறந்திருக்கிறது. ஆனால் அந்த நெருக்கடிகள் குறித்த புலம்பல்கள் அவரிடம் ஒரு போதும் கிடையாது. எவ்விதமான சலிப்பும் இல்லை. மாறாக தொடர்ந்த உற் சாகத்துடன் தன் வலியை அவ தானித்துக் கொண்டிருக்கும் ஒரு நோயாளியைப் போல அவர் செயல்பட்டிருக்கும் விதமே அவர் மிகச் சிறந்த எழுத்தாளர் என்பதற்கான சான்று.

அசோகமித்திரனின் எழுத்தின் தனிச்சிறப்பு அவரது நகைச்சுவை உணர்வு. மிகுந்த நெருக்கடியான மனநிலைகளுக்கு ஊடேயும் அவரால் நகைச்சுவையான சில அவதானிப்புகளை எழுத முடிந்திருக்கிறது. அது அபூர்வமானது. வாழ்க்கையின் கசப்பு தன்மீது படிந்து விடுவதை தன் நகைச்சுவை உணர்வின் வழியே கலைஞன் துடைத்தெறியும் செயல்பாடு அது. வைக்கம் முகமது பஷீரிடம் இப்படியொரு தன்மையிருப்பதை வாசிப்பில் காணமுடிந்திருக்கிறது. அதே பரிமாணம் அசோகமித்திரனிடம் இன்னொரு விதத்தில் வெளிப்படுகிறது.

அசோகமித்திரனுக்குள் கடந்த கால அனுபவங்கள் எழுதித் தீராமல் இன்றும் கொந்தளித்தபடியே உள்ளன. உண்மையில் அவர் கண்டடைந்த அனுபவத்திலிருந்து கையளவே நமக்குப் பருகத் தந்திருக்கிறார். இன்னும் கடலளவு அவருக்குள் அலைகள் இல்லாமல் நிரம்பியே இருக்கிறது.

நான் அசோகமித்திரனை, கல்லூரி நாட்களின்போது கணையாழியின் வழியாகவே அறிந்து கொள்ள ஆரம்பித்தேன். கணையாழி படிப்பது என்பது அன்று ஒரு இலக்கிய அடையாளம். ஒரு ஊரில் கணையாழி படிப்பவர்கள் என்று விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே

இருந்தார்கள். ஒன்றிரண்டு கடைகளைத் தவிர வேறு எங்கும் கிடைக்காது. இவர் கணையாழி எல்லாம் படிப்பார் என்று ஒரு வரைப் பற்றி அறிமுகம் செய்து வைத்தால் அவர் பெரிய அறிவுஜீவி என்று அர்த்தம். அப்படியான ஒரு அந்தஸ்தில் கணையாழி இதழ் வெளியாகி கவனத்தைப் பெற்றிருந்தது. நான் கணையாழி வாசகனாக மாறிய நாட்களில் அதன் கௌரவ ஆசிரியராக அசோகமித்திரன் இருந்தார்.

முன்னதாக அவரது வாழ்விலே ஒருமுறை என்ற சிறுகதைத் தொகுப்பை மட்டுமே வாசித்திருந்தேன். பெரிய திருப்பங்களோ, அதிர்ச்சிகளோ இல்லாமல் அன்றாட வாழ்வின் நிகழ்வுகளிலிருந்தே அவர் கதைகளை உருவாக்குவது என்னை வசீகரித்திருந்தது. திராவிடத் தமிழின் பாதிப்பு முற்றிலும் இல்லாத எழுத்தாளர் அவர். ஹெமிங்வே போல சின்னச் சின்ன வரிகள். துல்லியமான சித்தரிப்பு என்ற நடை அவருடையது.

தொடர்ச்சியாக ஒரு ஆண்டு கணையாழி வாசித்தபோது அசோகமித்திரன் எழுதிய சிறு கட்டுரைகள், குறிப்புகள் எனக்குப் பிடித்திருந்தன. இலக்கியம், அரசியல், சமூக நிகழ்வு, சினிமா, கலைகள் என்று அவர் வேறுவேறு துறை சார்ந்து தன் மனப்பதிவுகளை எழுதி வந்தார். அந்த எழுத்தின் ஊடாக அபத்தமான சமகாலச் சூழலின் மீது அவருக்குள் புதையுண்டிருந்த கோபமே நகைச்சுவையாக மாறுவதைக் கண்டேன்.

அதன்பிறகு, அசோகமித்திரனைத் தேடிப்படிக்கத் துவங்கினேன். கரைந்த நிழல்கள் வாசிப்பதற்கு முன்வரை சினிமாவைப் பற்றி ஒருவர் நாவல் எழுத முடியும் என்ற எண்ணம்கூட எனக்கிருந்ததில்லை. ஆனால் நாவலை வாசித்து முடிந்தபோது அது வெறுமனாக தமிழ் சினிமாவை மட்டும் பேசும் நாவல் இல்லை மாறாக சினிமா என்ற மாயலோகத்தின் உள்ளே எத்தனை வலிகள், எவ்வளவு கண்ணீர், இழப்புகள், சோகங்கள், மறைந்திருக்கின்றன. முகம் தெரியாத மனிதர்களின் பகலிரவான உழைப்பு அர்த்த மற்று, அடையாளமற்றுப் போய்விடுகின்றது என்பதைப் பற்றியதாக உணரச் செய்தது.

கரைந்த நிழல்களில் எட்டே முக்கிய கதாபாத்திரங்கள். பத்து அத்யாயங்கள் அவ்வளவே. ஆனால் அதற்குள் ஐம்பது ஆண்டுக்கால சினிமா சரித்திரத்தின் இருண்ட உலகம் அடங்கிவிடுகிறது. வீழ்ச்சி ஒருமனிதனை என்ன செய்கிறது. ஊழின் கைகள் எப்படி மனிதர்களைச் சுழற்றியடிக்கிறது என்பதை கரைந்த நிழல்கள் துல்லியமாக விவரிக்கின்றது. நாவலில் கதை வளர்ந்து செல்வதில்லை. மாறாக துண்டிக்கப்பட்ட பல நிகழ்வுகளுக்குள் கதை முன்பின்னாக நகர்கிறது. எந்த முக்கிய நிகழ்வுகளுக்கும் முறையான காரணங்கள் சொல்லப்படுவதில்லை. அது வாசிப்பவனால் உணர்ந்து கொள்ளும்படியாக விடுபடப்படுகிறது.

அது போலவே நாவலில் வரும் நடிகைகள், தயாரிப்பாளர்கள், தயாரிப்பு நிர்வாகிகள், ஊழியர்கள் யாவரும் சினிமா என்ற அடையாளத்தைத் தாண்டிய அகச்சிக்கல் கொண்ட மனிதர்கள். காரணமற்ற ஆசைகளும் நிராகரிப்பும் துவேஷமும் புறக்கணிப்பும் கொண்டவர்கள். ஒவ்வொருவருக்கும் அவரளவில் ஆன ஒரு நியாயமிருக்கிறது. உண்மையில் அப்படித்தானிருக்கிறது வாழ்க்கை.

ஜெமினி ஸ்டுடியோவில் தான் பணியாற்றிய நாட்களின் அனுபவத்திலிருந்து அவர் இந்த நாவலை எழுதியிருக்கிறார். தீபத்தில் இது தொடராக வெளிவந்திருக்கிறது. கச்சிதமான வடிவம் கொண்ட நாவல் என்றே சொல்வேன்.

அசோகமித்திரனின் பங்களிப்பு மூன்று தளங்களில் மிக முக்கியமானது என்று நான் பார்க்கிறேன். 1) சினிமா குறித்த அவரது பார்வைகள் மற்றும் அனுபவங்கள். 2) உலக இலக்கியம், குறிப்பாக அமெரிக்க இலக்கியவாதிகளைப் பற்றிய அவரது அறிமுகமும் வாசிப்பு பகிர்தலும் 3) அவரது இலக்கியப் பங்களிப்புகளான சிறுகதைகள் குறு நாவல்கள், நாவல்கள். கட்டுரைகள். இந்த மூன்றிலும் அவரது பார்வைகளும் பங்களிப்பும் சிறப்பானவை.

அசோகமித்திரனைத் தொடர்ந்து வாசித்தபோது அவரது எழுத்து எதில் மையம் கொண்டிருக்கிறது என்பதை ஓரளவு அறிந்து கொள்ள முடிந்தது. அசோகமித்திரன் படைப்புகளின் அடியோட்டமாக உள்ள இழை வாழ்க்கையின் சந்தோஷங்கள், நெருக்கடிகள் யாவும் தற்காலிகமானவை. மனிதர்களை ஒன்று சேர்க்கவும் பிரிக்கவும், துவேஷம் கொள்ளவும் நிம்மதியற்று அலைக் கழிக்கவும் அவர்களது மனப்போக்குகளே காரணமாக இருக்கின்றன. பொருளாதார காரணங்கள் ஒரு அளவில் மட்டுமே வாழ்க்கையை திடப்படுத்த உதவக்கூடும். ஆனால் மனித மனம் ஓயாமல் ஊசலாடிக் கொண்டேயிருக்கிறது. அதன் இயல்பே அதுதான். அதன் விசித்திரமே வாழ்க்கையை முன்கொண்டு செல்கிறது என்ற எண்ணங்களே அவரது சிறுகதைகள், நாவல், கட்டுரைகள் என யாவிலும் காணமுடிகிறது.

பாவம் டல்பதடோ, மானசரோவர், இன்று, ஆகாயத்தாமரை, விடுதலை, பதினெட்டாவது அட்சக்கோடு, புலிக்கலைஞன், மணல், காலமும் ஐந்து குழந்தைகளும், ஒரு பார்வையில் சென்னை நகரம் என்று எனக்குப் பிடித்தமான அவரது படைப்புகளின் பட்டியல் மிக நீண்டது.

கடந்து செல்லும் காலம் தன் நினைவுகளைப் பதிவு செய்யும் பொறுப்பை எப்போதும் எழுத்தாளர்கள் கலைஞர்களிடமே ஒப்படைக்கிறது. அந்த வகையில் அசோகமித்திரனின் செயல்பாடுகள் யாவும் சமகாலத்தின் சாட்சியாக இருப்பது தானில்லையா?

ப. சிங்காரம் : அடங்க மறுக்கும் நினைவு

ப.சிங்காரம் என்ற பெயர் புது யுகம் பிறக்கிறது இதழில் சி. மோகன் எழுதிய நாவல் பற்றிய கட்டுரையில்தான் எனக்கு முதன் முதலாக அறிமுகமானது. மோகன் தமிழின் சிறந்த நாவலாசிரியர் வரி சையில் சிங்காரத்திற்குத் தனியி டம் அளித்திருந்தார். அந்த நாட் களில் ஜானகிராமன், ஜெயகாந் தன், கி.ராஜநாராயணன், சுந்தர ராமசாமி என்று தேடித்தேடி வாசித்துக்கொண்டிருந்த எனக்கு சிங்காரம் யார் என்ன எழுதியிருக் கிறார் என்ற குழப்பம் உண்டா னது. எனது சேமிப்பிலிருந்த சிறு பத்திரிகைகளைப் புரட்டிப்புரட் டிப் பார்த்தபோது சிங்காரத்தைப் பற்றிய சிறுகுறிப்பு கூடத் தென்பட வில்லை.

மறுநாளே பொதுநூலகத்திற்குச் சென்று சிங்காரத்தின் நாவலைத் தேடத் துவங்கினேன். இரண்டு நாட்கள் தேடிச்சலித்த போதும் நாவலைக் கண்டுபிடிக்க முடிய வில்லை. திடீரென ஒரு சந்தேகம் வந்தது. நூலகங்களில் உள்ள பொருள்பகுப்பு முறை மிக விசித் திரமானது. அங்கே ஜானகி ராம னின் சக்தி வைத்தியம் சிறுகதைத் தொகுப்பு சித்த வைத்திய பிரிவில் வைக்கப்பட்டிருந்தது. அது போலவே சுந்தர ராமசாமியின் ஒரு புளிய மரத்தின் கதை இயற்கைநூல் பிரிவிலிருந்தது.

இப்படியான வகைப்பாட்டியிய லில் சிங்காரம் மாட்டிக்கொண்டி ருக்கக்கூடும் என்ற யோசனை யோடு கடல் தொடர்பாகப் புத்த கங்கள் உள்ள விஞ்ஞானப் பிரி வில் தேடியபோது அதில் கட லுக்கு அப்பால் என்ற சிங்காரத் தின் நாவலிருந்தது. அந்தப் புத்த கத்தை அதுவரை மொத்தமே நான்கு பேர்தான் படித்திருக் கிறார்கள் என்பது முன்பக்க நூல கப் பதிவில் தெரிந்தது. உடனே வீட்டிற்கு எடுத்துச் சென்று மாலைக்குள்ளாகவே படித்து முடித்தேன்.

கதை சொல்லும் முறையும், பின்புலமும் தமிழ் நாவலைத்தான் படிக்கிறேனா என்று வியப்பூட்டும் படியாக இருந்தன. குறிப்பாக பர் மீய தமிழ்வாழ்வும் யுத்தகாலப் பின்புலமும் நாவலுக்குப் புதிய தொரு தளத்தினை உருவாக்கியிருந் தது. அதே சமயம் நாவலின் ஊடா கவே வெளிப்படும் பழந்தமிழ் இலக்கியப் பரிச்சயமும், பிரயோக மும் இதை எழுதியவர் தேர்ந்த இலக்கியப் பரிச்சயம் உள்ளவர் என்பதையும் புரிந்து கொள்ளச் செய்தது.
அராபியக் கதைகளில் வரும் பாக்தாத்தைவிடவும் மதுரை மாநகரம் அதிகக் கதைகள் கொண் டது என்று எனக்கு எப்போதுமே ஒரு எண்ணமுண்டு. குறிப்பாக மதுரையின் சிறுசந்துகள், தினசரி வாழ்வு சார்ந்த மனிதர்கள். நகரின் புதிரான சரித்திரம் மற்றும் மதுரை யின் மைய வாழ்வைச் சுற்றி நடை பெறும் நூற்றுக்கணக்கான நிகழ்வு களின் பின்னால் அறியப்படாத

ஓராயிரம் கதைகள் புதைந்திருக் கின்றன. மதுரையின் இரவும் பக லும் இன்று வரை முழுமையாகக் கதையுலகில் பதிவு செய்யப்படவே யில்லை.

சிங்காரம் காட்டும் மதுரையும் அதன் மனிதர்களும் மிக நெருக்க மானவர்களாகயிருந்தார்கள். ஒரு வேளை சிங்காரத்தைப் பிடித்திருப் பதற்கான காரணமாக அதுகூட இருந்திருக்கக்கூடும். புத்தகத்தில் சிங்காரத்தைப் பற்றிய சிறுகுறிப்பு கூடக் கிடையாது. கலைமகள் பரி சுப் போட்டியில் தேர்வு பெற்றது என்பதைத் தவிர வேறு தகவல்கள் இல்லை.

அன்றிரவு கோணங்கியைச் சந்திப்பதற்காகக் கோவில்பட்டியி லிருந்த அவரது வீட்டிற்குச் சென் றேன். ரயில்வே தண்டவாளத்தை யட்டியது கோணங்கியின் வீடு. இரவு பூச்சிகளின் சப்தமும் மின் மினி வெளிச்சமுமாக உள்ள அந்த ரயில்பாதை நினைவில் என்றும் ஒளிர்ந்துகொண்டிருக்கக் கூடியது. நள்ளிரவில் செல்லும் கூட்ஸ் ரயில் கள் நமது பேச்சை நிறுத்தியபடியே கடந்து செல்வதை வேடிக்கை பார்ப்பது தனி அனுபவம்.
அன்று மழை பெய்து வெறித்த இரவு. திட்டுத் திட்டாக இருள் பதுங்கியிருந்தது. கோணங்கி வீட் டின் மொட்டைமாடிச் சுவரில் அமர்ந்தபடியே சிங்காரத்தின் எழுத்து பற்றிப் பேசத் துவங்கிய தும் அவர் ரொம்பவும் சிலாகித் துச் சொல்லத் துவங்கினார். கோணங்கிக்கு ஐம்பது ஆண்டு களுக்கு முற்பட்ட மதுரையைப் பற்றிய விவரிப்பு மற்றும் ஜனரஞ்சக நிகழ்வுகள் அவரை வசீகரித் திருந்தது.

நான் அதன் சில மாதங்களுக்கு முன்புதான் எரிக் மரியா ரிமார்க் கின் கிறீறீ னிuவீtமீs வீஸீ tலீமீ ஷ்மீstமீக்ஷீஸீ யீக்ஷீஷீஸீt நாவலை வாசித்திருந்தேன். அது தந்த நெருக்கம் மனதில் அப்ப டியே நின்றிருந்தது. அந்த நாவலை யும் சிங்காரத்தின் எழுத்தும் பற்றிப் பேசத் துவங்கிய போது கோணங்கி சிங்காரத்தினை மறுநாள் பார்க்க லாமா என்று கேட்டார். சிங்காரம் எங்கே வசிக்கிறார் என்ற போது அவர் மதுரையில் இருப்பதாகவும், தான் இரண்டு முறை அவரைச் சந்தித்துள்ளதாகவும் தெரிவித்தார். மறுநாள் ஏழு மணிக்கே மதுரைக் குப் புறப்படலாம் என்று முடிவு செய்தோம்.

அதுவே தாமதம் என்று உள் மனது சொன்னது. காரணம் யாரா வது ஒரு எழுத்தாளரைப் படித்து முடித்தவுடன் அவரைப் பார்க்க வேண்டும் என்று விரும்பினால் எந்த நள்ளிரவு என்பதைப் பற்றிக் கூடப் பொருட்படுத்தாமல் நானும் கோணங்கியும் உடனே கிளம்பி விடுவோம்.

சில எழுத்தாளர்களின் வீட்டில் அதிகாலை வாசற்கதவு திறக்கும் போது எதிரில் நாங்கள் நின்று கொண்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்திருக்கிறார்கள். சில நேரம் எழுத்தாளரே இல்லாத போதும்கூட அவரது வீட்டில் உள்ளவர்களிடம் பேசிக்கொண்டு வீட்டு விருந்தாளிபோலச் சாப் பிட்டு தூங்கி எழுந்து வந்ததும் நடந்தேறியிருக்கிறது.

காலை மதுரையில் போய் இறங்கியதும் கோணங்கி நேரடி யாக அன்னம் புத்தகக்கடைக்கு அழைத்து சென்றார். அந்த நாட் களில் மதுரையின் இலக்கிய மைய மாக இருந்தது அன்னம் புத்தகக் கடை. அநேகமாக மதுரைக்குள் வரும் எழுத்தாளர்கள் தவறாமல் அங்கே வருவதைக் காணமுடியும். அத்துடன் நண்பர்கள் சந்திப்பிற் கும் உரையாடலுக்குமான கலாச் சாரவெளியாக உருவாகியிருந்தது. மதுரைக்கு வந்து இறங்கியதி லிருந்து சிங்காரத்தைச் சந்திப் பதைப் பற்றிக் கோணங்கி எதுவும் பேசவேயில்லை. பழைய புத்தகக் கடைகளுக்குச் சென்று சுற்றிவிட்டு மீனாட்சி மெஸ்ஸில் சாப்பிட்டு விட்டு வெயிலேற நடந்து திரிந்த போதும் சிங்காரம் எங்கேயிருக் கிறார் என்று சொல்லவேயில்லை.

முடிவில் நான்கு மணிக்கு நேதாஜி சாலையிலிருந்த ஒய்எம்சி ஏவின் தங்குமிடத்திற்கு அழைத் துக்கொண்டு போனார். சிங்காரம் அங்கேதானிருக்கிறார் என்ற தகவ லுடன் படியேறும்போது மனதில் இந்திய தேசியத்தைச் சேர்ந்த ராணுவ வீரரைப் போன்ற தோற் றத்தில் சிங்காரம் உருவானார்.

சிங்காரத்தின் அறைக்கதவு சாத் தப்பட்டிருந்தது. கீழே உள்ள ஆவின் கடை அருகே நின்று கொண்டிருப்பார் என்று சொல் லியபடியே அவரது தினப்படி அலுவல் அறிந்தவரைப் போல விடுவிடுவெனக் கீழே இறங்கினார் கோணங்கி. இருவரும் வீதிக்கு வந்தபோது நகைக்கடை வீதியிலி ருந்து தலைகவிழ்ந்தபடியே நடந்து வந்து கொண்டிருந்த பெரியவரி டம் கோணங்கி சென்று ஏதோ பேசியதும் அவர் தலையசைத்த படியே உடன் வந்தார்.

அவர்தான் ப.சிங்காரம் என் பதை மனது ஏற்றுக்கொள்ள மறுத் தது. சிங்காரம் அருகில் வந்ததும் சிரிப்பான தொனியில் உங்களைப் பார்க்க வந்திருக்கான் என்று கோணங்கி சொன்னார். தன்னைப் பார்ப்பதற்காக எதற்காக வந்திருக் கிறார்கள் என்ற பாவனை அவரது முகத்திலே இருந்தது. எந்தூரு என்று சுத்தமான மதுரைத் தமிழில் சிங்காரம் கேட்டார். பதில் சொன் னதும் தலையாட்டிக் கொண்டார்.
சிங்காரம் முகத்தில் வெளிப் படாத சிரிப்பு ஒன்று ஒளிந்திருப் பதை அறியமுடிந்தது. அறுபது வயதைத் தொட்ட தோற்றம். வழுக் கையேறிய நெற்றியும் பெரிய காது களும் தடித்த புருவங்களும் மீசை யில்லாத முகமும் கொண்டிருந் தார். காது ரோமங்கள் நீண்டிருந் தன. ஒற்றைத்தட்டு வேஷ்டியும் கதர்சட்டையும் அணிந்திருந்தார். தோற்றத்தை வைத்துப்

பார்த்தால் மதுரையில் பலசரக்குக் கடை வைத்திருக்கும் அண்ணாச்சிகளில் ஒருவரைப் போன்ற ஜாடையே இருந்தது.

தனது சட்டைப் பையிலிருந்த சாவியால் அறைக்கதவைத் திறந்து உள்ளே அழைத்து அங்கிருந்த கட் டிலில் உட்காரும்படியாகச் சொன் னார். கோணங்கி முன்னதாகவே அறிமுகமாகியிருந்த காரணத்தால் சற்றே உரிமையுடன் சிங்காரத்து டன் பேசிக்கொண்டிருந்தார். என்ன பேசுவது என்று புரியமால் சில நிமிசங்கள் அமைதியாக இருந் தேன். உங்க நாவலைப் படிச்சிருக் கான். அதைப் பத்தி உங்ககிட்டே பேசணும்னு சொன்னான். காலேஜ்ல இங்கிலீஷ் லிட்ரேசர் படிக்கிறான் என்று என்னை அறி முகம் செய்து வைத்தார்.

சிங்காரம் தன் நாவலைப் பற்றிய கருத்தை அறிய விருப்ப மற்றவரைப் போல உங்க ஊரு மல்லாங்கிணர்ல மஞ்சள் காமா லைக்கு மருந்து கட்டுற ஒரு பொம் பளை இருக்குல்லே என்று விசா ரிக்கத் துவங்கினார். ஆமாம் என்ற போது தனக்குத் தெரிந்தவரின் மகளுக்குக் காமலைக்குப் பச்சிலை கட்டுவதற்காக அங்கே ஒரு முறை வந்திருப்பதாகச் சொன்னார். அவ ரது பேச்சு காமாலை, காலரா என்று முன்நாட்களின் தீராத வியாதிகளைப் பற்றியதாக நீண் டது. ஆனால் பேச்சு வளராமல் சில நிமிசத்தில் தானே அறுபட்டு நின்றது. சிங்காரம் திருமணம் செய்து கொள்ளாமல் தனியே வசிக்கிறார், அதுவும் இதுபோன்ற ஒற்றையறை யில் மாதவாடகைக்குத் தங்கிக் கொண்டு ஹோட்டலில் சாப்பிட் டுக்கொண்டு மௌனமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார் என்று முன்னதாகவே கோணங்கி சொல்லியிருந்ததை மெய்யாக்கு வது போன்றிருந்தது அவரது அறை.

அந்த அறையில் இரண்டு ரங் கூன் பெட்டிகள் இருந்தன, மர மேஜையின் மீது வாடிப்போன வாழைப்பழம் ஒன்றிருந்தது. சிகரெட்டு அட்டை ஒன்றில் ஏதோ சில கணக்குகள் குறித்து வைக்கபட்டிருந்தன. ஜன்னல் அருகே ஈர வேஷ்டி ஒன்று காய்ந்து கொண்டிருந்தது. அறையின் மூலையில் சிவப்பு நிற மண் பானையன்று காணப்பட்டது. கட்டிலின் அருகில் பழைய தினந் தந்தி பேப்பர்கள் தூசியடைந்து கிடந்தன.

அறைக் கதவைக்கூடப் பாதியே திறந்து அவர் பயன்படுத்தி வரு கிறார் என்பது திறக்கப்படாத மறு பாதியில் படிந்திருந்த நூலம்படை யிலிருந்து தெரிந்தது. மின்சார மில்லாவிட்டால் அந்த அறையில் ஒரு நிமிசம்கூட இருக்க முடியாது என்பதை அங்கிருந்த வெக்கை யால் உணர முடிந்தது. சிங்காரம் தன் சட்டையைக் கழட்டிக் கட்டி லின் மீது போட்டுவிட்டு வெறும் மேலோடு உட்கார்ந்து கொண்டார்.

கோணங்கி வேடிக்கையாக இந்தப் பெட்டிக்குள் ரங்கூனை அடைத்துக்கொண்டு வந்துவிட்டீர் கள் போலிருக்கிறது என்றபடியே அதைத் திறந்து பார்க்கலாமா என்று கேட்டார். சிங்காரம் அதுல என்ன இருக்கு சும்மா பாருங்க என்றார்.

கோணங்கி பெட்டியைத் திறந்த போது உள்ளே பழைய உடுப்பு களும், ஓடாத அலாரம் கடிகாரம் ஒன்றும் ஒரு பிளாஸ்டிக் கவரும் மட்டுமேயிருந்தது. அவர் ஒரு எழுத்தாளர் என்று அங்கிருந்தவர் களுக்குத் தெரியுமா என்று கோணங்கி கேட்டதும் அதெல் லாம் ஒரு ஆளுக்கும் தெரியாது. அப்படி நான் சொல்றதும் இல்லை. சொல்ற மாதிரி என்ன எழுதியிருக்கேன் என்று கேட்டார்.
பேச்சு ஐம்பது வருடத்திற்கு முந்திய மதுரையைப் பற்றியதாகத் திரும்பியது. அதிகம் மின்சார வசதி இல்லாத மதுரையின் தெருக் களும் அருகாமை கிராமங்களில் இருந்து மதுரைக்கு வந்துபோகும் மக்களின் பழக்க வழக்கங்களைப் பற்றியும் சிங்காரம் சொல்லிக் கொண்டிருந்தார்.

கோணங்கி, இரவில் துணிகளை ஏலம் போடுகின்றவர்கள் மதுரை யின் அந்த நாட்களில் வருவார்கள் தானே என்று கேட்டார். ஆர்வத் துடன் சிங்காரம் அந்த மதுரையே வேற. அப்போ மேலூரில் இருந்து நாங்க மதுரைக்கு வந்து இங்கேயே சுத்துவோம். கோவிலை விட்டா வேற என்ன இருக்கு மதுரையில். ஏலத்தில போர்வை துண்டு எல் லாம் நானே எடுத்திருக்கிறேன் என்றார்.

என்னால் அதன்பிறகும் பொறு மையாக இருக்க இயலாது என் பதைப் போல கடலுக்கு அப்பால் நாவல் மிகவும் நன்றாக இருக்கிறது. ஏதோவொரு விதத்தில் அது எரிக் மரியா ரிமார்க்கின் நாவலைப் போன்றிருக்கிறது என்று சொன் னேன். அவர் சிரித்துக்கொண்டே தனக்கு அதிக வாசிப்பு அனுபவம் கிடையாது. நாவலில் உள்ள பெரும்பான்மை விஷயங்கள் தனது சொந்த வாழ்க்கை, சில சம்பவங்கள் தான் நேரில் கண்டது என்றார்.

கடலுக்கு அப்பால் முழுமை பெறாத நாவல் போன்றிருக்கின் றது என்றதும் ஒரு அளவுக்குத் தான் சொல்லியிருக்கிறேன். எதை எழுதாம விடணும்னு தெரிஞ்சி கிடுறது தானே எழுத்தில முக்கியம் என்றார். சிங்காரம் எழுத்தாளர் என்பது அந்த நிமிசத்தில் உறுதியா னது. தனது நாவல் உரிய முறை யில் வெளியிடப்படவில்லை. அங்கீகரிக்கப்படவில்லை என்ற ஆதங்கம் அவரது பேச்சில் வெளிப்பட்டது.

நாவல் வெளிவந்து பலவரு டங்களுக்குப் பிறகு தந்தி பேப்ப ரில் மட்டும் சிறிய விமர்சனம் வந்துள்ளதாகவும் வேறு எதிலும் யாரும் கண்டு கொள்ளவே யில்லை என்றார். அத்துடன்

இந்த நாவல் எழுதப்பட்டு பல மாத காலம் பெட்டி யிலே சீந்துவாரற்றுக் கிடந்தது. யாரும் அதை வெளியிட முன்வர வில்லை. தனக்கும் அதை என்ன செய்வது என்று தெரியவில்லை.

கடைசியில் கலை மகள் நாவல் போட்டி யின் தேர்வுக்கு அனுப்பி வைத்தேன். புத்தகமாக நாவல் வெளியிடப்பட்டபோது சில வாசகங்கள். பத்தி கள் நீக்கப்பட்டிருக் கின்றன. இப்போகூட யாரோ மோகன்னு மதுரைக்காரர் ஏதோ எழுதினதுக்கு அப்புறம் தான் உங்களை மாதிரி ஒன்றிரண்டு பேர் பார்க்க வருகிறார் கள் என்று சொன்னார்.

எது உங்களை இப்படியரு நாவலை எழுத வைத்தது என்று கேட்டவுடன் சிங்காரம் தனக்கு ஹெமிங்வேயின் நாவல்கள் பிடிக் கும் என்றும் அதைத் தான் தொடர்ந்து வாசித்திருப்பதாகச் சொன்னார். வியப்பாக இருந்தது. ஹெமிங்வே எனது ஆதர்ச எழுத் தாளர்களில் ஒருவர், உடனே நான் அவரிடம் ஹெமிங்வேயைப் பற் றிப் பேசத் துவங்கினேன். அவரது எந்த நாவல் உங்களுக்கு ரொம்ப வும் பிடித்தது என்றவுடன் அவர் பேர்வெல் டு ஆர்ம்ஸ் என்று சொன்னார்.

சில வருடங்களுக்குப் பிறகு சிங்காரத்தின் நாவல்களை ஒருசேர வாசித்தபோது ஹெமிங்வேயின் நுட்பமான பாதிப்பு அவரிடமிருப் பதை உணர்ந்து கொள்ள முடிந் தது. குறிப்பாக சலூன்களில் சென்று நண்பர்கள் சந்திப்பது. மது அருந்திவிட்டு உணர்ச்சிபூர்வ மாக உரையாடுவது, பேச்சின் இடையில் பழைய சம்பவங்கள் குறுக்கிடுவது போன்றவற்றில் ஹெமிங்வே சாயல் தெளிவாகவே தெரிந்தது.

ஹெமிங்வேயை எங்கே படித் தீர்கள் என்று கேட்டேன். தான் ஒரு கடைப்பையனாக வேலை செய்வதற்காக பர்மா போனதாக வும் அதற்காக நாகப்பட்டினத்திலி ருந்து கப்பலில் சென்று ரங்கூனில் உள்ள ஒரு செட்டியிடம் கடைப் பையன் போல வேலை செய்யத் துவங்கி பிறகு அங்கேயே வேறுசில வேலை பார்த்தாகவும், தங்கியிருந்த இடத்தின் அருகாமையில் உள்ள நூலகத்திற்குச் சென்று படித்து வரு வது தனக்குப் பழக்கம் என்றும் அதிகம் வாசிப்பதற்கு நேரம் கிடைக்காது என்றும் சொன்னார்.

அந்த நாட்களில் பர்மா வாழ்க்கை எப்படியிருந்தது என்று கேட்டவுடன், தான் வேலைக்குச் சென்ற நாட்களில் பெரிய கொந்த ளிப்புகள் இல்லை. ஆனால் இரண் டாவது உலக யுத்தம் துவங்கிய பிறகு பர்மாவில் ஏற்பட்ட மாற்றங் கள் மறக்க முடியாதவை. குறிப் பாக ஜப்பானிய ஆக்ரமிப்பு மற் றும் இந்திய தேசிய ராணுவத்தின் எழுச்சி போன்றவற்றைத் தான் கண் எதிரில் பார்த்திருப்பதாகச் சொன்னார்.

பிறகு அவர் தன் நினைவில் மூழ்கிவிட்டதைப் போன்று அமைதியாக இருந்தார். நானும் கோணங்கியும் ஏதேதோ பேசிய போதும் அவரது கவனம் எங் களிடமில்லை. அது நழுவி எங்கோ போய்க்கொண்டிருந்தது அவரது முகபாவத்தில் தெரிந்தது.

சிங்காரத்திடமிருந்து விடை பெற்றுக்கொண்டு வந்து மாப் பிள்ளை விநாயகர் அருகில் உள்ள தேநீர்க் கடையன்றில் நின்ற படியே சிங்காரத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தோம். அவரது நாவலைத் திரும்ப வாசிக்க வேண்டும் போலிருந்தது.

அன்றிரவு என் னைத் தனித்து அனுப் பிவிட்டு கோணங்கி சிவகங்கை புறப்பட் டுச் சென்றார். எனக் குத் திரும்பவும் சிங் காரத்தைச் சந்திக்க வேண்டும் போலிருந் தது. மறுநாளும் பார்க் கலாமே என்ற ஆசை யோடு இரவெல்லாம் மதுரை வீதிகளில் சுற்றியலைந்துவிட்டு விராட்டிபத்திலிருந்த நண்பன் அறைக்குச் சென்று தங்கிவிட்டு மறுநாள் காலை சிங்காரம் அறைக் குச் சென்றேன். சிங்காரம் தனியே உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். நேற்று பார்த்த தைவிட அன்று உற்சாகமாக இருந் தார். தான் இன்னும் சாப்பிடப் போகவில்லை என்று சொல்லிய படியே மார்டன் கபே வரை போய் வரலாமா என்று கேட்டார். இரு வரும் இறங்கி சாலைக்கு வந்தோம்.

சிங்காரம் வழியில் இருந்த ஒவ் வொரு கடையையும் சுட்டிக் காட்டி எவ்வளவு தூரம் கால மாற்றத்தில் மாறியிருக்கிறது என்று சொல்லிக்கொண்டே வந்தார். சாப்பிட்டுத் திரும்பும்போது அரு காமையில் உள்ள சலூன் ஒன்றில் தெரிந்த ஆள் இருக்கிறார். அவ ரைப் பார்க்கலாம் என்று அழைத் துக்கொண்டு போனார். அந்த சலூ னில் வேலைக்கு இருந்த நபர் பர் மாவில் இந்திய தேசிய ராணுவத்தி லிருந்தவர் என்றும் அவரும் சிங் காரமும் பலவருட பழக்கம் உள்ள வர்கள் என்பது அவர்கள் பேச்சிலி ருந்து அறிந்துகொள்ள முடிந்தது.

சிங்காரத்தின் நண்பர் இந்திய தேசிய ராணுவம் பற்றிச் சொல்லச் சொல்ல இடைமறித்து சிங்காரம் தகவல்களைச் சரி செய்தபடியே இருந்தார். இந்திய தேசிய ராணு வத்திற்குள் வடக்கத்தியார்களின் அதிகாரம் மேலோங்கியிருந்தது எல்லாம் அந்த மோகன்சிங்கின் வேலை என்று நேற்று நடந்த விஷயம் போல சிங்காரத்தின் நண் பர் குறைபட்டுக்கொண்டார்.

நேதாஜியைப் பார்த்து இருக் கிறீர்களா என்று கேட்டேன். நண் பர், இந்தக் கையாலேதேன் அவ ருக்கு சல்யூட் அடித்தேன் என்று வீரவணக்கம் செய்து காட்டினார். சலூன்

கண்ணாடியில் அவரது முகத்தில் இருந்த பெருமிதம் துல்லி யமாகத் தெரிந்தது. நேதாஜியைப் பத்தி ஒரு கதை சொல்வியே அதை இவர்கிட்டே சொல்லு என்றார் சிங்காரம். அந்த நண்பர் சிரித்துக் கொண்டே இது சிங்கப்பூர்ல நடந்ததுனு சொல்றாங்க நிஜமானு தெரியாது.

ஒரு பொதுக் கூட்டத்திற்கு நேதாஜி வர்றப்போ சர்க்கஸில இருக்கிற கோமாளி ஒருத்தன் நேதாஜியைப் பார்க்கக் கூடவே ஓடி வந்திருக்கிறான். அவன் ஒரு குள்ளன், ஜனங்க அவனை இடிச் சித் தள்ளுறதை நேதாஜி கவனித்தி ருக்கிறார். உடனே அவனை அரு கில் வரச்சொல்லி தன்னோடு ஒரு போட்டோ எடுத்துக்கொள்ளும் படியாகச் சொன்னார். குள்ளன் தன்னை நேதாஜி தூக்கி வைத்துக் கொள்வது போல போட்டோ எடுத்தால் நன்றாக இருக்கும் என்று சொன்னதும் நேதாஜி வேடிக்கையாக அதற்கென்ன என்று குள்ளனைக் குனிந்து தூக்க முயற்சித்தால் அவனைத் தூக்க முடியவேயில்லை.

தன் பலங்கொண்ட மட்டும் முயற்சித்தும் முடியவில்லை. குள் ளன் சிரித்தபடியே இப்போது தூக் குங்கள் என்று சொன்னதும் உடனே நேதாஜி அவனைச் சுலப மாகத் தூக்கிவிட்டார். அது எப்ப டிச் சாத்தியமானது என்று குள்ள னிடம் கேட்டதும் அவர் உடலின் எடையைத் தன்னால் எப்போது வேண்டுமானாலும் கூட்டவும் குறைக்கவும் முடியும். அது ஒரு பயிற்சி என்று சொன்னான். அதைக் குள்ளனிடமிருந்து நேதாஜி கற்றுக்கொண்டார். பல நேரங்களில் ராணுவத்தில் அதை நேதாஜி செய்து காட்டியிருக்கிறார் என்றார்.

சிங்காரம் சிரித்தபடியே இப்படி நூறு கதைகளை தினம் ரங் கூன்ல கேட்டிருக்கேன். அந்த ஊரை நாசம் பண்ணினது கெம் பித்தாய்ங்கிற ஜப்பானிய ராணுவ போலீஸ். அவங்க பண்ணுகிற இம்சை சகிக்க முடியாதது. இந்தக் கெம்பித்தாய்களோட வேலை பட் டாளத்துகாரனுக்குப் பொம் பளையை ஏற்பாடு பண்ணித் தர் றது. அதுக்காக மலாய் சீனாக்காரி களை ஏற்பாடு பண்ணி அதைப் பராமரிப்பு பண்ணி வச்சிக்கிட்டு வருவாங்க. இதுல அடிதடி வேற வரும் என்றார். சிங்காரத்தின் நண் பர் ஒரு சீனப்பெண்ணின் பெயரைச் சொல்லி அவளுக்குப் பெரிய கிராக்கி என்று நினைவுபடுத்தினார்.

சிங்காரம் வாழ்க்கையில் காதல் அரும்பியிருக்கிறது. ஆனால் அது நிறைவேறவில்லை. அது ஒரு செட்டிவீட்டுப் பெண் என்று சொன்னார். நீண்ட நாட்களுக்குப் பிறகு அவளை ஒரு நாள் புது மண்டபம் அருகே பார்த்தாகவும் அந்தப் பெண்ணிற்குத் தன்னை அடையாளமே தெரியவில்லை என்றபடியே எனக்கு அவ முகம் அப்படியே மனசில இருக்கு என் றார். அவரது நாவலில் இடம் பெற்ற சம்பவங்கள் அவரது வாழ் வின் பகுதிகள் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. அன்று மதியம் வரை சிங்காரத்துடன் பேசிக் கொண்டிருந்தேன்.

அவரது மனதில் எழுத வேண் டும் என்ற உத்வேகமில்லை. அவ ருக்குப் பிடித்த புத்தகம் எது என்று கேட்டவுடன் சிங்காரம் மணி மேகலை என்று சொல்லி அதற்கும் தன்னுடைய நாவலுக்கும் உள் ளார்ந்த தொடர்பு இருக்கிறது என் றார். அவர் மணிமேகலையை ஆழ்ந்து வாசித்திருப்பது புரிந்தது. அவரிடமிருந்து விடைபெற்று வந்த சில நாட்களுக்கு சிங்காரத்தை மட்டுமே வாசித்துக் கொண்டிருந் தேன். சரளமும் நுட்பமும் கலந்த எழுத்து.

அதன் பிறகு சிங்காரத்தை ஒரு வருடத்தின் பிறகு திரும்பச் சந் தித்தேன். இப்போது முன்பு இருந் ததைவிடவும் ஒடுங்கிப் போயிருந் தார். தன்னைப் பார்த்து எதுவும் ஆகப்போவதில்லை என்று சொல் லியதோடு தன்னை இலக்கியக் கூட்டத்திற்காக ஒரு நண்பர் அழைத்ததாகவும் அது தன்னால் முடியாது என்றும் சொன்னார். சிங்காரத்தோடான மூன்றாவது சந்திப்பு வெறுமையில்தான் முடிந் தது. அதன்பிறகு சில முறை கோணங்கி, லோகு, முருகேச பாண்டியன் போன்றவர்கள் அவரைப் பார்த்ததைப் பற்றிச் சொல்வார்கள். ஒரு முறை அய்ய னார் அவரைச் சந்தித்த சம்பவத் தைப் பகிர்ந்துகொண்டார்.

என் மனதில் சிங்காரத்தின் சித்திரம் அவரது நாவலில் வரும் பாண்டியன் கதாபாத்திரமாகவே பதிந்து போயிருக்கிறது. சிங்காரத் தின் எழுத்து தனித்துவமானது. பர்மீய தமிழ்வாழ்வின் உண்மை யான சித்தரிப்பு அவரிடமிருந்தே துவங்குகிறது. யுத்தகால வாழ்வைப் பற்றியும் நெருக்கடியான அந்த நாட்களில் ஏற்படும் மனித அவ லங்கள் குறித்தும் அவர்தான் முதன்முறையாக அடையாளம் காட்டுகிறார். அவரது புயலிலே ஒரு தோணி, கடலுக்கு அப்பால் இரண்டும் தமிழின் முக்கிய நாவல் கள் என்றே சொல்வேன்.

சிங்காரத்தின் வாழ்க்கை அவரை எப்போதுமே நினைவிலே அமிழ்ந்து போக வைத்திருக்கிறது. மனதில் கொளுந்துவிட்டெறியும் கடந்தகாலத்தின் சுவாலைகளுடன் மௌனமாக வாழ்ந்துகொண்டிருந் தார் சிங்காரம். அவருக்கு யாரோ டும் உறவில்லை. தினந்தந்தி நாளி தழில் வேலை செய்திருக்கிறார். அங்கே அவரை யாரும் எழுத்தாள ராக அறியவேயில்லை. நெருக்க மான நட்புமில்லை. எதையும் அவர் விரும்பவில்லை என்பது தான் நிஜம்.

ஒருவேளை அவர் மனதில் நீள் கடலும் துரத்தியடிக்கபட்டு நாடி ழந்து புகலிடம் திரும்பும் மனிதர் களை ஏற்றுக்கொண்டு காற்றின் திசையில் அலைபடும் தோணியும் எப்போதுமிருந்திருக்க கூடும். தனிமை பலரையும் எழுத வைத் திருக்கிறது. சிங்காரத்தின் எழுத்தை அவரது தனிமை கவ்விக்கொண்டு விட்டது. தன் வெளிப்பாட்டிற்கு எழுத்து மட்டுமே சிலருக்குப் போதுமானதில்லை போலும் என் பதை சிங்காரம் நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கிறார்.

ந.முத்துசாமி உடல் மொழியின் நாடகம்

கல்லூரியில் ஆங்கில இலக்கியம் படிக்கும் போது சாமுவேல் பெக்கட்டின் வெயிட்டிங் பார் கோதோ வாசித்தேன். அதுவரை நவீன நாடகம் என்பதைப் பற்றி அறிந்திருக்கவில்லை. அந்த நாடகம் வாசிப்பதற்கு மிகுந்த ஆர்வமுடையதாக இருந்தது. அதை எப்படி மேடையேற்றியிருப்பார்கள் என்பதைப் பற்றி எனது பேராசிரியர்களில் ஒரு வரிடம் பேசிக்கொண்டிருந்தபோது அவர் லண்டனில் நடந்த நாடகவிழா ஒன்றில் நிகழ்த்தப்பட்ட கோதோ நாடகத்தின் வீடியோவைக் காண்பதற்குத் தந்தார்.

நான் வாசித்த பிரதிக்கும் நிகழ்த்தபட்ட நாடகத்திற்கும் இடையில் மிகப்பெரிய இடைவெளி இருந்தது. நிகழ்த்தப்படும் வெளி மற்றும் நடிகர்களின் உடல்மொழி மற்றும் காட்சிகளின் பின்புல இசை யாவும் அந்த நாடகத்தை ஒரு கனவு நிலைப்பட்டதாக மாற்றியிருந்தது. பிரதியை அப்படியே மேடையேற்றுவது அல்ல நாடக இயக்குனரின் வேலை. பிரதியிலிருந்து தனக்கான நாடகமொழியை உருவாக்கிக் கொள்வதுதான் நவீன நாடகத்தின் பிரதான பணி என்று பேராசிரியர் சொன்னபோது எனக்கு அது புரியவில்லை.

அந்நாள்வரை நான் கண்டிருந்த மேடை நாடக வடிவம் முற்றிலும் கலைந்து போய் நடிகர்களின் உடல் மொழியும் நவீன நிகழ்த்து வெளியும் உரையாடும் பாங்கும் தீவிரமாகப் பற்றிக் கொண்டது. என்ன வகை நிகழ்த்துதல் இது. ஏன் தமிழில் இப்படியான நாடகங்கள் நடத்தப்படுவதில்லை. கோதோவை மொழியாக்கம் செய்து இதே போல நிகழ்த்தினால் என்னவென்று அதன் பிந்தைய நாட்களில் தோன்றிக்கொண்டிருந்தது. பத்து நாட்களுக்குள் கோதோவை மொழியாக்கம் செய்துவிட்டேன். ஆனால் அதை எப்படி நிகழ்த்தவது என்பதைப் பற்றி நான் அறிந்திருக்கவில்லை.

நான் அறிந்த இலக்கிய நண்பர்கள் எவரும் அன்று நவீன நாடகம் பற்றி எதையும் அறிந்திருக்கவில்லை. சில மாதங்களுக்கு அதைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்துவிட்டு பெக் கெட்டை மறந்து வழக்கம் போல நாவல், அபுனைவுக் கட்டுரைகள் என்று வாசிப்பதை நோக்கி நகர ஆரம்பித்தேன். ஆனால் மனதில் பெக்கெட்டின் வரிகள் மற்றும் நிகழ்காட்சிகள் இருந்து கொண்டேயிருந்தது.

அதன் சில ஆண்டுகளுக்கு பின்பு மதுரையில் தற்செயலாக பேராசிரியர் மு.ராமசாமி ஏற்பாடு செய்திருந்த எட்வர்ட் ஆல்பியின் ஜர் ஸ்டோரி என்ற நாடகத்தைப் பார்க்க நேர்ந்தது. என் மனதிலிருந்த பெக்கெட் திரும்பவும் விழித்துக் கொண்டுவிட்டார். அந்த நாட்களில் மதுரையில் சுதேசிகள் என்ற பெயரில் தமிழ்த் துறையில் பயின்ற சுந்தர்காளி ஒரு குழுவை

உருவாக்கியிருந்தார். அவர்களுடன் சேர்ந்து நவீன நாடகம் பற்றிப் பேசவும் விவாதிக்கவும் துவங்கினேன்.

விஜய் டெண்டுல்கர், ஹெரால்ட் பைண்டர், ஐயனெஸ்கோ, டென்னஸி வில்லியம்ஸ், லூயி பிராண்டலோ, ஆர்தர் மில்லர், ஒநில், பிரெக்ட், செகாவ், ஜெனே, லோர்க்கா, இப்சன் எட்வர்ட் பாண்ட், வோலே சோயிங்கா என்று நூலகத்தில் கையில் கிடைத்த நாடகப்பிரதிகளை மிகுந்த தீவிரத்தோடு வாசிக்க ஆரம்பித்தேன்.

தமிழில் அப்படி யாருடைய நாடகமாவது இருக்கிறதா என்று தேடியலைந்த போது பழைய ஷேக்ஸ்பியர் பிரதிகள், மற்றும் சங்கரதாஸ் சுவாமிகளின் மரபு நாடகப்பிரதிகள் இருந்தனவேயன்றி நவீன நாடகப்பிரதிகள் எதுவும் காணப்படவில்லை.

அறிந்த நண்பர்களிடம் கேட்டபோது அவர்களும் அப்படி நவீன நாடகப்பிரதி எதுவும் வெளியாகி இருப்பது போல அறியவில்லை என்றார்கள். அந்த நாட்களில்தான் ந. முத்துசாமியின் பெயரைக் கேள்விபட்டேன். நடை இதழில் முத்துசாமியின் காலம் காலமாக வெளி வந்து மிகுந்த கவனத்தைப் பெற்றது என்பதையும் அவரது நாற்காலிக்காரர், சுவரொட்டி நாடகங்களையும் பற்றி நண்பர்கள் விரிவாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

நீர்மை எழுதிய முத்துசாமியா நவீன நாடங்கங்கள் போடுகின்றவர் என்று வியப்புடன் கேட்டேன். ஆமாம் அவரேதான் என்றபடியே கூத்துப்பட்டறை என்ற நவீன நாடகக் குழுவைச் சென்னையில் உருவாக்கியிருக்கிறார் என்றும் அது தீவிரமாக நவீன நாடக உருவாக்கத்தில் முனைந்திருக்கிறது என்றும் அறிந்து கொண்டேன்.

எனக்கு முத்துசாமியின் சிறுகதைகளைப் பிடிக்கும். நவீனச் சிறுகதைகளில் அவர் தனித்துவமானவர். குறிப்பாக அவர் கதை சொல்லும் முறை வித்யாசமானது. சிறிய சம்பவங்களை நுட்பமாக விவரித்துக் கொண்டே செல்லும் கதைமுறை அவருடையது. ஊர் சார்ந்த நினைவுகள் மற்றும் நவீன வாழ்வின் அபத்தம் இரண்டும் கலந்த குரல் அவர் கதைகளுக்கு உண்டு. கதாபாத்திரங்களின் நிகழ்வுகளைவிடவும் அவர்களின் மனவோட்டத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் தரும் எழுத்துமுறை அவருடையது. புஞ்சை என்ற ஊரைப் பற்றிய வெவ்வேறு விதமான பதிவுகள் அவர் கதைகளில் தொடர்ந்து இடம் பெற்றிருந்தன. அத்தோடு கசடதபற இதழ்களில் முத்துசாமி எழுதியதையும் வாசித்திருக்கிறேன்.

நீர்மையின் இன்னொரு சிறப்பு முத்துசாமியின் மகன் ஓவியர் நடேஷ் வரைந்த முகப்பு ஓவியம். மிகச் சிறப்பாக அச்சிடப்பட்டிருந்த புத்தகமது. அதில் முத்துசாமியின் சித்திரம்

ஒன்றை மிக நவீனமான முறையில் நடேஷ் வரைந்திருப்பார். அதிலிருந்து ஒரு முத்துசாமியை நாம் கற்பனை செய்து கொள்வது விசித்திரமாக இருக்கும்.

இருபதிற்கும் குறைவான சிறுகதைகளே முத்துசாமி எழுதியிருக்கக்கூடும். ஆனால் அந்தக் கதைகள் அவருக்கெனத் தனியான வாசக உலகை உருவாக்கியிருந்தன. தொடர்ந்து அவர் சிறுகதையுலகில் செயல்படாமல் போனது பெரிய இழப்பே.

நவீன நாடகங்களில் ஏற்பட்ட ஈடுபாட்டின் காரணமாக கேரளாவில் உள்ள திருச்சூரில் உள்ள நாடகப்பள்ளிக்கு ஒருமுறை சென்றிருந்தேன். அங்கே நாடகவிழா ஒருவார காலம் நடைபெற்றது. அப்போதுதான் நான் வாசித்திருந்த பல நவீன நாடகங்களை ஒரு சேரக்காணக் கிடைத்தது. நாடகப்பள்ளியின் வளாகமும் அதன் கட்டிட அமைப்பும் மிக நவீனமானவை. அதை லேரி பேக்கர் வடிவமைத்திருந்தார்.

நாடகப்பள்ளியில் நடத்தபட்ட நாடகங்களைக் காண்பதற்கு அருகாமையில் உள்ள கிராம மக்கள் வருவதைக் கண்டது ஆச்சரியமாக இருந்தது. லோர்க்காவின் நாடகம் ஒன்றை மலையாளத்தில் நிகழ்த்தினார்கள். சமஸ்கிருத நாடகம் ஒன்று நிகழ்த்தப்பட்டது. அயென்ஸ்கோ நாடகத்தை மாணவர்கள் நிகழ்த்தினார்கள். இப்படி ஒரு வார காலம் நடைபெற்றது. அங்குள்ள மாணவர் விடுதியில் தங்கியபடி நாடகங்களைப் பார்த்து பிரமித்துப் போயிருந்தேன்.

இந்த நாடகங்கள் மேடை அமைப்பை விட்டுவிலகி புதிய நாடகவெளியை உருவாக்கியிருந்ததும் சம்பிரதாயமாக வசனங்களைப் பெரிதும் சார்ந்திருந்த நடிப்பை விலக்கி நடிகனின் உடலின் வழியே நிகழும் நாடகமாக வெளிப்படுத்தும் முறையும் குரலை உபயோகிக்கும் முறைகளும் நாடக பாவனைகளும், அவர்கள் உருவாக்கும் படிமங்களும், உருவகங்களும் நவீன நாடகம் என்பதைப் பற்றிய ஆதார பிரக்ஞையை உருவாக்கியது. அந்த நாட்களில் முத்துசாமியைச் சந்திக்க வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் கொள்ளத் துவங்கினேன்.

ஆனால் ஏதோ தயக்கம் அதைத் தடுத்துக்கொண்டேயிருந்தது. திருச்சூரில் சந்தித்த நாடகத்துறை நண்பர்களின் வழியே பெங்களூரில் நடைபெறும் நவீன நாடகங்கள் பற்றி அறிந்து கொள்ள ஆரம்பித்தேன். இதற்காகவே பெங்களூர் செல்லும் போதெல்லாம் நவீன நாடகங்களைத் தேடிச்சென்று பார்க்கத் துவங்கினேன். அப்படித்தான் கிரிஷ் கர்நாட்டின் துக்ளக், ஹயவதனா, மற்றும் கம்பாரின் நாடகங்கள் காண நேர்ந்தது.

நவீன நாடகம் என்பது தனியுலகம். அதற்கெனத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட நடிகர்களும் இயக்குனர்களும் அதற்கான குறைந்தபட்ச பார்வையாளர்களைப் பற்றிய

கவலையின்றித் தங்களது முழு ஈடுபாட்டையும் செலுத்தி வருவதைக் கண்ட போது அது என்னை ஈர்க்கத் துவங்கியது.
அந்த நாட்களில் திருச்சியில் பாதல்சர்க்கார் நாடகவிழா நடை பெற்றது. அதைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கே கூத்துப்பட்டறையின் நாடகம் ஒன்றைக் கண்டேன். முத்துசாமியைக் காண முடியவில்லை. மற்ற நாடகங்களிலிருந்து கூத்துப்பட்டறை நாடகம் மிகவும் வேறுபட்டிருந்தது.

அந்த நாடகவிழாவின் உந்துதலில் சூரியனின் அறுபட்ட சிறகுகள் என்ற நாடகத்தை எழுதி அதை நாடகவெளி இதழுக்கு அனுப்பி வைத்தேன். ரங்கராஜன் அப்போதுதான் நாடகத்திற்கான சிற்றிதழாக வெளியை அறிமுகம் செய்திருந்தார். அதில் என்னுடைய நாடகம் வெளியானது. அதன் தொடர்ச்சியாக சுதேசிகள் நாடகக்குழுவிற்காக 'உருளும் பாறைகள்' என்ற நாடகத்தை எழுதித் தந்தேன். அது சங்கீத நாடக அகாதமியின் தென் மண்டல நாடகவிழாவிற்காகத் தேர்வு செய்யப்பட்டது. அந்த நாடகம் குறித்து முத்துசாமி தனக்குப் பிடித்துள்ளது என்று தெரிவித்ததாக சுந்தர்காளி சொன்னபோது மீண்டும் முத்துசாமியைப் பார்க்கும் ஆசை துளிர்விடத் துவங்கியது.

மதுரை நண்பர்களுக்காக எட்வர்ட் பாண்டின் ஸ்டோன், பிரெக்டின் கலிலியோ, மகேஷ் எல்கஞ்வரின் பிரதிபிம்பம், என்று பரபரப்பாக நாடகங்களை மொழியாக்கம் செய்வதும் எழுதித் தருவதுமாக இருந்த நாட்களில் எனக்கிருந்த ஒரே வாசிப்புத் துணை ந. முத்துசாமியின் நாடகங்கள். அத்தோடு அவர் எழுதிய அன்று பூட்டிய வண்டி என்ற நிகழ்த்து கலைகள் பற்றிய கட்டுரைகள். மரபுக்கலைகள் குறித்த அவரது பார்வையும் விவரிப்பும் அசலானவை. அன்று பூட்டிய வண்டி முத்துசாமியின் முக்கியமான கட்டுரைத் தொகுப்பு.

தெருக்கூத்து தென்மாவட்ட மக்களுக்குப் பரிச்சயம் இல்லாத வடிவம். அப்படி ஒரு நிகழ்த்துகலை இருப்பதையே மக்கள் அறிந்திருக்கவில்லை. தென்மாவட்டங்களுக்கு என்று சிறப்பான நிகழ்த்துகலைகள் நிறைய இருந்தன. ஆனால் தெருக்கூத்து அங்கேயில்லை.

முத்துசாமியின் கட்டுரைகள் அளித்த உந்துதல் காரணமாக தெருக்கூத்தைத் தேடிச் சென்று பார்ப்பது என்று சுற்றியலைந்து காஞ்சிபுரம் அருகில் உள்ள ஒரு கிராமத்தில் முதன்முறையாகத் தெருக்கூத்தைப் பார்த்தேன். நடிகர்களின் ஒப்பனையும், நிகழ்த்தும் முறையும் வியப்பாக இருந்தது. அது முத்துசாமியைச் சந்திக்கும் ஆசையை அதிகப்படுத்தியது.

சென்னையில் வந்து சுற்றியலைந்தபோது சிறுகதைகள் மற்றும் நாடகம் இரண்டிலும் இருந்த என் அக்கறைக்கு முத்துசாமியே காரணமாக இருந்தார். அப்போது அடையாற்றில்

தங்கியிருந்த போது அண்ணாமலை அறிமுகமானார். அவர் கூத்துப்பட்டறையில் பயின்ற நடிகர். அவரிடம் முத்துசாமியைச் சந்திக்க வேண்டும் என்று சொன்னதும் அதற்கென்ன பார்த்துவிடலாமே என்று சொல்லி மறுநாளே முத்து சாமியைச் சந்திக்க அழைத்துச் சென்றார். அலியான்சே பிரான்சேயின் வெளிவாசலில் முத்துசாமி நின்றுகொண்டிருந்தார்.

முத்துசாமியின் தோற்றம் ஒரு நடிகருக்கான கம்பீரம் கொண்டது. குறிப்பாக அவரது மீசையும் முகபாவங்களும் அற்புதமானவை. அவர் பேசும் தோரணையும் கைகளை அவர் உபயோகிக்கும் லாவகமும் எவரையும் ஈர்க்கக் கூடியவை. ஆனால் அவர் குரலில் இயல்பாகவே எதையோ மறுக்கின்றவரைப் போன்ற எதிர்ப்புணர்வு இருக்கும். உண்மையில் அவர் வேடிக்கையாகப் பேசும்போதுகூட அந்தத்தொனி அவரிடமிருக்கிறது. அது பலநேரம் முத்துசாமி மிகவும் கோபப்படக்கூடியவர் என்ற பிம்பத்தை உருவாக்கியிருந்தது. அது உண்மையில்லை. முத்துசாமியோடு நெருங்கிப் பேசினால் அவரிடம் சொல்லித் தீராத நினைவுகளும் நாடகம் குறித்த புதிய தேடுதல்களும் மரபுக் கலைகள் குறித்த தனித்துவமான அவதானிப்புகளும் நிரம்பியிருக்கும்.

என் முதல் சந்திப்பில் முத்துசாமி 'ஒங்க நாடகம் ரொம்ப நல்லாயிருந்தது. எழுதுங்க' என்று ஒரேயொரு வரிதான் பேசினார். அதன் பிறகு அலியான்சேயில் பிரான்சிலிருந்து வந்திருந்த தோல்பாவைக் கலைஞருடன் ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது. அதன் முன் வரிசையில் அமர்ந்தபடியே அந்த பிரெஞ்சுக் கலைஞரை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார் முத்துசாமி. ஏதோ ஓவியம் ஒன்றைப் பார்வையிடுவதைப் போன்றிருந்தது அவரது முகபாவம்.

முடிவில் முத்துசாமி பத்து நிமிடங்கள் பேசினார். "தெருக்கூத்து ரொம்ப ஒசத்தியானது. அதை அப்படியே நாடகமாகப் போட்டுற முடியாது. அதை நாம முதல்ல புரிஞ்சிகிடணும். குரல்வளம் உள்ள நடிகர்கள் நம்மகிட்டே இல்லை. முதல்ல நாம அதை உருவாக்கணும். அதே போல பார்வையாளர்களுக்கும் நடிகருக்கும் இடையில் உள்ள வெளி ரொம்ப முக்கியமானது. நடிகர்கள் கதாபாத்திரத்தை சிருஷ்டி பண்றாங்க. அதுல மூழ்கிப் போறதில்லை.

கதாபாத்திரமாக மாறிப்போறது என்பதெல்லாம் தெருக்கூத்துல கிடையாது. நடிகர் கதாபாத்திரம் ரெண்டுக்கும் இடையில் ஒரு பெரிய மாயம் நடக்குது. நடிகன் தன் கற்பனையால் அந்தக் கதாபாத்திரத்தை வளர்த்துகிட்டே போறான். அது ஒரு விளையாட்டு. கண்ணுக்குத் தெரியாத விளையாட்டு. நடிகன் ஒரு ஜென் துறவி மாதிரியும் இருக்கணும். அதே நேரம் சாமுராய் மாதிரியும் இருக்கணும். பழைய மேடை நாடக நடிப்பு எல்லாம் இப்போ எடுபடாது" என்று அவர் பேசிய விதமும் சொற்களை அவர் கையாளும் லாவகமும்

அதை விளக்கிச் சொல்லும் போது அவரிடம் ஏற்படும் முகமாற்றங்களும் பார்வையாளர்களைக் கட்டிப் போட்டிருந்தது.

பேச்சை அவர் திடீரென நிறுத்தி முடித்துக்கொண்டுவிட்டார். கிட்டத்தட்ட அதுவே ஒரு நிகழ்த்து கலை போலவே இருந்தது. நிகழ்ச்சி முடிந்து முத்துசாமி வெளியே செல்லும் வரை பார்த்துக்கொண்டேயிருந்தேன். சம்பந்தம் என்ற கூத்துக் கலைஞருடன் அவர் ஒரு டிவிஎஸ் 50யின் பின்னாடி ஏறிக்கொண்டு புறப்பட்டார். அவரது உயரத்திற்கு அந்த வண்டியில் போவது சிரமம் தருவதாக இருந்திருக்கக்கூடும். ஆனால் அவரிடம் அது தென்படவில்லை.

அலியான்சேயின் வெளியில் இருந்த படிகளில் அமர்ந்தபடியே முத்துசாமி பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். நவீன இலக்கியப் பரிச்சயம் கொண்டிருந்த முத்துசாமி நவீன நடனத்திலிருந்தே தனது நாடகத்திற்கான மூலங்களைக் கொண்டிருக்கிறார். ஆகவே அவருக்கு நாடகப்பிரதி என்பது ஒரு வரைபடம் போல நாடகம் போடுவதற்காக ஆதாரம் மட்டுமே. நடிகனின் உடல் மற்றும் குரலில் அவர் செய்யும் மாற்றம் அற்புதமானவை.

கூத்துப்பட்டறையில் நடிப்பிற்கு மட்டும் பயிற்சி அளிக்கப்படுவதில்லை. மாறாக நடனம், யோகா, மார்சல் ஆர்ட்ஸ், சிலம்பம், தேவராட்டம், களறி, தாய்சி, தியானம், எனப் பல்துறைப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. அதன் மூலம் நடிகன் தன் உடலை எப்படிப் பயன்படுத்துவது என்பதை அறிந்து கொள்ள முடியும். அது போலவே மரபான நடிப்பு முறையிலிருந்து விலகிய பிரக்ஞை பூர்வமாக நடிப்பைக் கைக்கொள்ள முடியும் என்று கூத்துப்பட்டறையில் பயின்ற நண்பர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அது உண்மை என்பதை அதிலிருந்து பயின்று வந்த பல நடிகர்கள் இன்று நிரூபணம் செய்கிறார்கள். சிறந்த இரண்டு உதாரணங்கள் பசுபதி மற்றும் கலைராணி. இவர்கள் நடிப்பை பிரக்ஞை பூர்வமாகவும் பல்வேறு தளங்களில் விரித்தும் கற்பனை செய்தும் புரிந்து கொண்டவர்கள். இவர்கள் மட்டுமின்றி பிரசாத், அண்ணாமலை, ஜார்ஜ், பாங்ளா , குமாரவேல், சந்திரா, என்று தனித்துவமிக்க நடிகர்கள் பலரை கூத்துப்பட்டறை உருவாக்கியிருக்கிறது.

அதன் பிறகு கூத்துப்பட்டறையின் நாடகங்களை அலியான்சே மேக்ஸ்முல்லர் பவன் மற்றும் தீவுத்திடலில் உள்ள அரங்கில் தொடர்ச்சியாகக் காண நேர்ந்தது. ஒவ்வொரு நிகழ்வின் போதும் முத்துசாமி தொலைவில் நின்று கொண்டிருப்பார். ஒரு சிரிப்பு மற்றும் எப்படியிருக்கீங்க என்ற வினா இரண்டையும் தவிர அவர் வேறு எதையும் பகிர்ந்து கொண்டது கிடையாது.

ஆனால் ஒரு முறை பிரிட்டீஷ் கவுன்சில் ஆங்கில நாடகம் ஒன்றினையும் அதைத் தொடர்ந்த இரவு விருந்தையும் அளித்தது. சென்னையில் தமிழ் நவீன நாடகங்கள்

பார்ப்பதற்கு ஐம்பது பேர்கூட வருவதில்லை. ஆனால் ஆங்கில நாடகம் பார்ப்பதற்கு முந்நூறு பேர்களாவது வருவார்கள். இதில் ஆச்சரியம் ஐநூறு ரூபாய் டிக்கெட் போட்டு நடக்கும் நவீன நாடகங்களுக்குக் கூடப் பல நேரங்களில் டிக்கெட் விற்றுப் போய் நாடகம் பார்க்க முடியாமல் வீடு திரும்ப நேரிடும். அது ஒரு எலைட் இன்ட்ரஸ்ட் என்று முத்துசாமியே ஒரு சமயம் சொன்னார்.

அன்று பிரிட்டீஷ் கவுன்சிலின் வெளியில் நாடகம் முடிந்து வெளியே விருந்து துவங்கியது. பகட்டான ஆங்கிலப் பேச்சுகள், நாடகம் பற்றிய மேல்உதட்டு அபிப்ராயங்கள் தாண்டி தனியே அமர்ந்திருந்தார் முத்துசாமி, அருகில் சென்று அமர்ந்தேன். அவராகப் பேசத்துவங்கி பேச்சு அவரது சொந்த ஊரான புஞ்சை பற்றியும் அங்குள்ள நற்றுணையப்பன் என்ற தெய்வம் குறித்தும் நீண்டது.

பேச்சின் நடுவில் செம்பொனார் கோவிலில் இருந்த நாதஸ்வரக் கலைஞர் ஒருவரைப் பற்றி நினைவுகூறத்துவங்கி உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தவர் அப்படியே எழுந்து நின்று அந்த நாதஸ்வரக் கலைஞர் வாசிக்கும் முறையைத் தன் கைகளால் பாவனை செய்தபடியே தனிநடிப்பு போல சொல்லத் துவங்கினார்.

"அப்படியே ஆகாசத்துக்கும் பூமிக்கும் இடையில் அந்த நாதஸ்வரம் சுழன்று சுழன்று வருது. அந்த மனுசன் ஆவேசத்துடன் வாசிக்கிறார். வெளியே இருக்கிற மரங்கள் எல்லாம் ஒடுங்கிப் போய் நிக்குது. அருள் வந்த ஆள் போல அவர் வாசிச்சிகிட்டே இருக்கார். ரொம்ப ஒசத்தியான இசை. இன்னைக்கும் மனசில அப்படியே இருக்கு. இசையைக் கேட்டு நாம கற்பனை பண்ண முடியலை. அது ஒரு உன்னதமான அனுபவம். பார்த்துகிட்டு இருக்கும்போதே எல்லாம் மறைஞ்சி போற மாதிரி இருக்கு. பாம்பாட்டி முன்னால் நிக்குற பாம்பு மாதிரி இருக்கேன். எதையோ தொலைச்சிட்டு தேடிக்கிட்டு இருக்கிறது மாதிரி நாதஸ்வரம் மேலேயும் கீழேயும் இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் போய்க்கிட்டே இருக்குது. சாட்டையைச் சுழட்டுற மாதிரி இருக்கு இசை. ஆனா.. சட்னு அப்படியே ஒரு நிமிஷம் அவர் வாசிக்கிறதை நிறுத்திடுறார். நம்மாலே நிறுத்த முடியலை."

அவர் சொல்லச் சொல்ல, காதில் அந்த நாதஸ்வர இசை கேட்பது போலவே இருந்தது. இசையை ஒரு மனிதனால் இவ்வளவு நுட்பமாகக் காட்சிப்படுத்த முடியுமா என்ற வியப்பிலிருந்து என்னால் மீள முடியவேயில்லை. முத்துசாமி சொல்லி முடித்து சிரிப்போடு அருகில் இருந்த தண்ணீரை எடுத்துக் குடித்துவிட்டு நெருக்கத்தோடு என் தோளில் தட்டினார். முத்துசாமியிடமிருந்து இதைத்தான் தெரிந்துகொள்ள ஆசைப்பட்டிருந்தேன் என்று அந்த நிமிடத்தில் தோன்றியது.

அதன் பிறகு அவரை ஒன்றிரண்டு முறை தேடிப்போய்ப் பேசுவதும் பார்ப்பதுமாக இருந்தேன். இணக்கமும் அன்புமான பகிர்தல் அவரிடம் எப்போதுமிருந்தது. இதன் இடையில் நடேஷ் நெருக்கமான நண்பராகியிருந்தார். நடேஷ் முத்துசாமி இருவரும் பேசிக்கொள்வதைக் காணும்போது அப்பா பையன் போலவே இருக்காது.

முத்துசாமியின் கவனம் தமிழ் நவீன நாடகத்திற்கான புதிய மொழியை உருவாக்குவதிலே முதன்மையாகக் குவிந்திருக்கிறது. அது மரபுக்கலைகளிலிருந்து உருவான நவீன உடல்மொழி. தமிழ்நவீன நாடகப் பிரக்ஞையை முத்துசாமியே உருவாக்கினார்.

பேராசிரியர் ராமானுஜம், மு.ராமசாமி, மங்கை, ஞாநி, பிரளயன், ராஜி, ஆறுமுகம், ராஜேந்திரன், சண்முகராஜா, முருகபூபதி என்று நவீன நாடகப் பரப்பில் பல்வேறு ஆளுமைகள் தீவிரமாக நாடக உருவாக்கத்தில் செயல்பட்டு வருகின்றார்கள். இவர்கள் யாவருக்குள்ளும் முத்துசாமியின் ஏதோவொரு நுட்பமான பாதிப்பும், அரூபமான நெருக்கமும் அறிந்தும் அறியாமலும் இருக்கின்றது.

முத்துசாமி உருவாக்கிய நாடக மொழிக்கான அடிப்படைகளை அவர் சிற்பங்கள் ஓவியங்கள், நடனம், மரபுக்கலை, கோவில்கலை, மேலை நாடக மரபுகள் என்று பல்வேறு இழைகளைக் கொண்டு உருவாக்கியிருக்கிறார்.

முத்துசாமியின் நாடகம் தந்த உந்துதலால் சந்திரலேகாவின் நாடகங்களைக் காண நேர்ந்தது. அது முற்றிலுமான ஒரு நடனநாடகம் என்றே சொல்வேன். அதில் நடிகன் பெரிதும் நடனக்கலைஞராகவே இருக்கிறான். அவன் உடலை யோகநிலைகள் போல வெவ்வேறு படிகளில் ஒன்று சேர்ப்பதும் அவிழ்ப்பதுமே நாடகத்தின் முக்கிய போக்காக இருந்தது. அபத்தமோ, முரண்களோ, பகடியோ அதில் இல்லை.

முத்துசாமியின் நாடகங்களை ஒரு சேர வாசிக்கும் போதுதான் அவர் உருவாக்கியுள்ள தமிழ் நவீன நாடகப்பரப்பு எவ்வளவு பெரியது என்று உணர முடிகிறது. காலம் காலமாக எழுதிய போது முத்துசாமி நவீன நாடகம் குறித்து அதிகம் அறிந்திருக்கவில்லை. அது நடை இதழில் 1969ஆம் ஆண்டு வெளியாகிறது. எழுத்து இதழில் சி.சு. செல்லப்பா ஓரங்க நாடகங்கள் என்று சில நாடகங்களை வெளியிட்டார். ஆனால் அது நவீன நாடக வகைமை கொண்டதில்லை.

முத்துசாமி சுயமாக தனக்கான நாடகமொழியைக் கண்டுபிடித்திருக்கிறார். அதன்பிறகு தெருக்கூத்தின் பரிச்சயம் அவருக்கு 1975ஆம் ஆண்டுதான் ஏற்பட்டிருக்கிறது. அன்றிலிருந்து அவரது பிரதிகள் உருமாற்றம் கொள்ளத் துவங்குகின்றன. உருவகங்கள் குறியீடுகள் கலாச்சார மறுவாசிப்பு புராணக்கதைகளின் மறுவடிவம் என்று அவர் தன் பிரதிக்கான அர்த்த தளங்களை விரிவாக எடுத்துக்கொண்டு போகிறார். படுகளம் நாடகம் அதன் உச்ச நிலை

என்றே சொல்வேன். மகாபாரதமும் சமகால நிகழ்வுகளும் ஒன்றோடு ஒன்று கலப்பதும் அதில் வெளிப்படும் பகடியும் நிகழ்த்து முறையும் நவீன நாடகத்தின் சிறப்பான உயர்நிலை.

நாற்காலிக்காரர், சுவரொட்டிகள், உந்திசுழி, கட்டியக்காரன், நற்றுணையப்பன், இங்கிலாந்து தெனாலி, பிரகலாத சரிதம், சந்திர ஹரி, படுகளம் என்று முத்துசாமியின் நாடகங்கள் ஒவ்வொன்றும் ஒரு தளத்தில் இயங்குகின்றது.

முத்துசாமியின் நாடகங்களை முதன்முதலாகப் பார்க்கும் பார்வையாளன் அடையும் திகைப்பு நடிகர்கள் பேசும் முறை. அவர்கள் வசனங்களை நேரடியாக ஒப்புவிப்பதில்லை. மாறாக அதைச் சிலவேளைகளில் உச்சாடனம் செய்கிறார்கள். சில வேளைகளில் கவிதை போல உயர்நிலைக்குக் கொண்டு போகிறார்கள். சிலவேளைகளில் சொற்களின் ஊடே இடைவெளியை உருவாக்கி அர்த்த மாற்றங்களை ஏற்படுத்துகிறார்கள். இது பார்வையாளன் அடையும் முதல் திகைப்பு.

அடுத்தது அவர்கள் மேடையைப் பயன்படுத்தும் விதம். பொதுவில் திரைச்சீலைகளும் மேஜை நாற்காலிகளும் அரங்க பொருட்களாக அறிமுகமாகயிருந்த பார்வையாளனுக்கு முத்துசாமியின் நாடகத்தில் அவர்கள் தங்கள் பாவனைகளால் பொருட்களை உருவாக்குவதும் அதைப் பயன்படுத்துவதும் வியப்பளிக்கக் கூடியது. மூன்றாவது, நாடகத்தின் பின்புல இசை மற்றும் கூட்டியக்கம். ஒரு இசைக்கோவை போல நாடகம் வேறுவேறு தளங்களுக்கு உயர்ந்து பின்பு உச்சநிலையை அடைகிறது.

இது பார்வையாளர்களுக்குக் குழப்பம் ஏற்படுத்திவிடாதா, நாடகம் புரிந்து கொள்ளப்படவில்லை என்ற கேள்வி முத்துசாமியின் ஒவ்வொரு நாடகத்தின் முடிவிலும் கேட்கப்படுகிறது. அவர் மிகப் பொறுமையாக, இதற்குப் பார்வையாளர்கள் பழகிக் கொள்ள வேண்டும். திரும்பத் திரும்ப எனது நாடகங்களைக் காண்பதுதான் அதைப் புரிந்துகொள்வதற்கான ஒரே வழி என்று சொல்கிறார். அதுதான் உண்மை. இந்த நாடகங்கள் புரியவில்லை. இதை வெறும் ஏமாற்று என்று புறக்கணிப்பதைவிடவும் இதை எப்படிப் புரிந்து கொள்வது என்று முயற்சிப்பதே அவசியம்.

முத்துசாமி நவீன நாடகப்பிரதிகளை எழுதியதோடு அதை முழுமையானதொரு நவீன நாடகமாக நடிகர்களைக் கொண்டு பயிற்சி செய்து உருமாற்றிக் காட்டுகிறார். குறிப்பாக மேடையின் ஒளியமைப்பில் கூத்துப்பட்டறை செய்த பல முன்முயற்சிகள் இந்திய அளவில் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியவை. டாக்டர் ரவீந்திரன், மற்றும் நடேஷ் ஒளியமைப்பு செய்த முறைகள் மிகுந்த பாராட்டுக்கு உரியவை.

அது போலவே பன்சி கௌல், கன்யாலால், அன் மோல் விலானி, கில் ஆலன், ஜான் மார்டின், என்று பல்வேறு நாடக இயக்குனர்களுடன் முத்துசாமி இணைந்து உருவாக்கிய தமிழ்நாடங்கள் நவீனத் தமிழ்நாடகத்தை உலக அரங்கிற்கு எடுத்துச் சென்றுள்ளது. இன்று நாடகத்திற்கான சிறப்புப் பயிலரங்கில் ஒன்றாகக் கூத்துப்பட்டறையை யுனெஸ்கோ அங்கீகாரம் செய்து உதவி செய்து வருகிறது.

முத்துசாமியை நீண்ட நேர்காணல் ஒன்று செய்து எனது அட்சரம் இதழில் வெளியிட வேண்டும் என்று அவரை நான்கு முறை தொடர்ச்சியாகச் சந்தித்து உரையாடலைப் பதிவு செய்தேன். பத்து மணி நேரத்திற்கும் அதிகமான பதிவு. முத்துசாமி அந்தப் பதிவில் எங்கும் தன் சாதனைகள் பற்றியோ, தனது ஏமாற்றங்கள் பற்றியோ ஒரு முறைகூடக் குறிப்பிடவேயில்லை. இதழ் நின்று போய்விடவே அந்த ஒலிப்பதிவுகள் அப்படியே கைவிட்டுப் போய்விட்டன.

அலியான்சே மேக்ஸ்முல்லர்பவன் என்று அயல்நாட்டுக் கலாச்சார நிறுவனங்களோடு இணைந்து நாடகம் போடுகின்றவர் என்று குற்றம் சாட்டப்பட்ட முத்துசாமி சென்னையில் பலவருடம் சேரிப்பகுதி மக்களுடன் இணைந்து வசித்தவர். அடிப்படை வசதிகள்கூட எதுவுமில்லாத மிக எளிமையான அரசுக் குடியிருப்பில் தன் வாழ்க்கையைச் செலவிட்டவர். பொருளாதார நெருக்கடிகளுக்காகத் தன்னை மாற்றிக்கொள்ளாதவர் முத்துசாமி.

இன்று சிறுகதை, கவிதை, நாவல் போன்ற வடிவங்களின் மீது இலக்கியவாதிகள் காட்டும் அக்கறையில் ஒரு பகுதிகூட நாடகத்தின் மீது இல்லை என்பதே உண்மை.

தெருக்கூத்திற்கு இன்றுள்ள அங்கீகாரத்திற்கு அவரே முக்கிய காரணம். நாடகம், கூத்து, கலை என்று தன் முழு நேரத்தையும் ஒப்படைத்துக் கொண்ட முத்துசாமி சங்கீத நாடக அகாதமி விருது பெற்றபோது அது இலக்கியச் சூழலில் பெரிதாகக் கண்டு கொள்ளப்படவேயில்லை. ஆனால் முத்துசாமியின் தொடர் இயக்கம் காரணமாகவே இன்று வெளி மாநிலங்களில் நவீனத் தமிழ்நாடகம் குறித்த அறிமுகம் ஏற்பட்டு உள்ளது.

நாடகத்திற்கான தேவை இப்போதுதான் மிக அதிகமாக உள்ளது. அதிகமான மன அழுத்தம் மற்றும் நெருக்கடியான சூழலில் மனிதர்களுக்கு அகவிடுதலை தரக்கூடிய தனித்தன்மை கொண்டது நாடகம். பன்னாட்டு நிறுவனங்கள் இன்று தங்களது ஊழியர்களுக்கு யோகா மற்றும் நாடகப் பயிலரங்கம் நடத்துகின்றன. நாடகம் ஒருபோதும் புறக்கணிக்கபட்டுவிடாது. அதை நாம் முறையாக எடுத்துச் செல்ல வேண்டும் என்று முத்துசாமி சொல்லியிருந்ததை சமீபத்திய நேர்காணல் ஒன்றில் வாசித்தேன்.

முப்பது ஆண்டுகாலமாக முத்துசாமியின் அக்கறை அப்படியே இருக்கிறது. பிரதான இலக்கியச் சூழல் அவரைக் கண்டுகொள்ளாமல் எப்போதும் போல வீண்வாதங்கள், வம்புகளின் பின்சென்று கொண்டிருக்கிறது. அதை அவர் கண்டுகொள்ளவும் இல்லை கவலைப்படவும் இல்லை. அபத்தம் தான் வாழ்வின் பிரதான சுவை என்று அவர் அறிந்திருக்கக்கூடும்.

கரிசலின் உன்னதக் கதை சொல்லி கி.ராஜநாராயணன்

கடவுள் விடுகிற மூச்சைப் போல காற்று வீசும் கரிசல்வெளி
வெயிலின் சமுத்திரத்தில் யாவும் முங்கிய நிசப்தம்
கருஞ்சாம்பல் மண்பரப்புக்குள் மெல்ல முனகும் சிருஷ்டிகரம்
- தேவதச்சன்

கரிசல் நிலத்தைப் பற்றிய துல்லியமான சித்திரத்தை தேவதச்சனின் இந்தக் கவிதை நமக்குத் தருகிறது.

முள்வேலிக்குள் சிக்கிக் கொண்ட கிழிந்த துணியெனப் படபடத்த படியே ஆகாசத்தின் ஒரே இடத்தில் நின்று கொண்டிருக்கும் சூரியனும், ஆட்டுஉரல்களில்கூட நிரம்பி வழியும் வெயிலும், குடிநீருக்காக அலைந்து திரியும் பெண்களும், கசப்பேறிய வேம்பும், கானலைத் துரத்தியலையும் ஆடுகளும், தாகமும் பசியும் அடங்காத காட்டு தெய்வங்களும் கொண்டதுதான் கரிசல் வெளி.

கரிசலில் பிறப்பவர்கள் இயல்பிலே வெக்கை குடித்தவர்கள். வாழ்க்கை இவர்களுக்கு எவ்விதமான சுகபோகத்தையும் தந்துவிடவில்லை. தினப்பாடுகளைக் கடந்து போவதற்கே சமர் செய்து பழகிய மனிதர்கள். குறிப்பாக இங்குள்ள விவசாயிகள் வானத்தோடு பேசிப் பழகிப்போனவர்கள். மழையைக் கொண்டு செல்லும் மேகம் வேறு ஊரை நோக்கிப் போகிறதே என்று ஆத்திரப்பட்டு மேகங்களை விரட்டி மடக்கி இழுத்துவரப் பின் தொடர்பவர்கள்.

ஆடுமாடுகளை எப்பாடுபட்டாவது நன்றாகக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்ற மனஉறுதிகொண்டவர்கள். வெயிலோடு வந்து சேர்பவர்களுக்குக் கருப்பட்டியும் செம்பு நிறைய தண்ணீரும் தந்து தாகசாந்தி செய்பவர்கள். ஆண் பெண் என்று பேதமில்லாத உழைப்பாளிகள். வெள்ளந்தி மனிதர்கள். விடாத நம்பிக்கை கொண்டவர்கள். நடந்து அலைந்து பழகிய கால்களும், கஷ்டங்களைக் கண்டு கலங்கி விடாத நெஞ்சுரமும் கொண்ட இந்த மக்களின் வாழ்க்கை அடுத்த நூற்றாண்டை நோக்கி அதி நவீன இந்தியா வளர்ந்து செல்லும் போதுகூட கவனிக்கப்படாமலே தானிருக்கிறது.

இன்று எல்லா கிராமங்களையும் வியாபித்துள்ள டிவியும், மெட்ரிக்குலேசன் பள்ளிகளும், ரியல் எஸ்டேட்டும்தான் இந்த ஊர்களுக்கும் புதிய வருகை. நெடுஞ்சாலையை ஒட்டிய கிராமங்கள் யாவும் சாலையைப் பார்த்து திரும்பிக் கொண்டு விட்டன. ஒதுங்கிய

கிராமங்களில் உள்ளவர்கள் ஊரை சபித்தபடியே இதில் மனுசன் குடியிருப்பானா என்று அருகாமை நகரங்களை நோக்கி நகரத்துவங்கிவிட்டார்கள்.

இருபது வருசங்களுக்கு முன்பு தீப்பெட்டித் தொழிற்சாலைகள் கரிசல் பூமியின் தலைவிதியைப் புரட்டிப் போட்டது. இன்று அதுவும் சுவடழிந்து போய்விட்டது. படிப்பு, வேலை, என்று வெளியேறத் துவங்கி விட்ட அடுத்த தலைமுறையோடு நிலங்களை விற்று காசாக்கி வங்கியில் இட்டு அதிலிருந்து வாழ்வது என்ற நடைமுறை மெல்லப் பரவி வருகிறது.

கரிசல் கிராமங்களைக் கடந்து போகும்போது கண்ணில் படும் காட்சிகள் துயரமானவை. இங்கே உழவுமாடுகளைக் காண்பது அரிதாகி விட்டது. ஊரில் விவசாயம் பார்ப்பவர்களின் எண்ணிக்கையும் குறைந்து போயிருக்கிறது. திண்ணை உள்ள வீடுகள் கண்ணில் படவேயில்லை. கிணறுகள் கண்மாய்கள் வறண்டு கிடக்கின்றன. அதில் சிறார்கள் கிரிக்கெட் ஆடுகிறார்கள்.

மாட்டுவண்டிகள் அச்சாணி முறிந்து கிடக்கின்றன. வண்டி செய்யும் ஆசாரிகள் தொழிலை விட்டே போய்விட்டார்கள். நகரத்தில் நடைபெறும் கட்டட வேலைகளுக்காக மொத்த மொத்தமாக ஆள் கூட்டிப் போகப்படுகிறார்கள். குடும்பமே கூலிக்காக நகரங்களை நோக்கிக் கிளம்புகிறது. திரும்பி வருவார்களா என்று தெரியாது. ஆனால் இந்தக் கிராமங்களைக் கடந்து செல்லும் சூரியனும் காற்றும் உலர்ந்த மேகங்களும் அப்படியே இருக்கின்றன. வாழ்க்கை மட்டும் புரண்டு கிடக்கிறது

இந்தச் சூழலில் கரிசல் வாழ்வின் நுட்பங்களையும், அதன் கடந்தகாலக் கதைகளையும் இந்தக் கிராமங்களில் வாழ்ந்து மறைந்த மனிதர்களைப் பற்றிய நினைவுகளையும் அறிந்து கொள்வதற்கு இலக்கியப் பதிவுகளே துணை செய்கின்றன.

அப்படி கரிசலைத் தன் எழுத்தின் வழியே ஆவணப்படுத்திய உன்னதக் கதை சொல்லி கி. ராஜநாராயணன். தனி ஒரு ஆளாக அவர் செய்த பங்களிப்பில் இருந்தே கரிசல் எழுத்தாளர்கள் என்று ஒரு மரபு உருவானது.

பூமணி, பா.ஜெயபிரகாசம் கோணங்கி, தமிழ்ச்செல்வன், தேவதச்சன், சோ. தர்மன். முத்தானந்தம், உதயசங்கர், காசிராஜன், கௌரி சங்கர், சாரதி, ஜோதி விநாயகம், மேலாண்மை பொன்னுசாமி, அப்பண்ணசாமி பாரததேவி, என நீளும் கரிசல் எழுத்தாளர்கள் பட்டியல் வளர்ந்து கொண்டேதானிருக்கிறது.

இந்தியாவில் வேறு ஏதாவது ஒரு மொழியில் ஒரே கிராமத்தைச் சேர்ந்த இரண்டு நண்பர்கள் ஒன்றாக எழுத்தாளர்கள் ஆனதும் இரு வருமே குறிப்பிடத்தக்க வகையில் இலக்கியத்தை வளப்படுத்தி சாகித்ய அகாதமி பெற்றதும் நடந்திருக்கிறதா என்று தெரியவில்லை. தமிழ் இத்தகைய பெருமைக்குரியது.

தூத்துக்குடி மாவட்டத்தின் இடைசெவல் கிராமத்தில் பிறந்த கு.அழகிரிசாமியும் கி.ராஜநாராயணனனும் தமிழின் இரண்டு முக்கிய படைப்பாளிகள். இருவரும் பால்யகாலம் முதல் நண்பர்கள். ஒன்றாக வளர்ந்தவர்கள். இருவருமே எழுத்தாளர்களாகி சாகித்ய அகாதமி பெற்றிருக்கிறார்கள்.

முறையான பேருந்து வசதி கூட இல்லாத கிராமம் அது. கோவில்பட்டி – திருநெல்வேலி பிரதான சாலையில் இருந்து கூப்பிடும் தூரத்தில் உள்ளது. நாளைக்கு ஆயிரம்கார்கள், பேருந்துகள் பிரதான சாலையில் கடந்து போகின்றன. ஆனால் இலக்கியவாதிகள் பிறந்த ஊர் கவனம் கொள்ளப் படாமலே கிடக்கிறது.

கு. அழகரிசாமி இடைசெவல் மனிதர்களைத் தன் எழுத்தில் பதிவு நுட்பமாகச் செய்திருக்கிறார். ஆனால் அவர்கள் மொழியில் பதிவு செய்யவில்லை. கிராவின் முக்கிய பங்களிப்பு மக்கள் தமிழில் கதைகளை எழுதியதே. அது பேச்சிற்கும் எழுத்திற்குமான இடைவெளியை வெகுவாகக் குறைத்தது. நம் எதிரில் ஒருவர் அமர்ந்து கதை சொல்வது போன்ற நெருக்கத்தை உருவாக்கியது.

வட்டார வழக்கு என்று இதை நான் சொல்லமாட்டேன். மாறாக இது ஒரு மரபு. இரண்டாயிர வருட தமிழ் இலக்கியத்தில் நிலம் சார்ந்து உருவாக்கப்பட்ட இலக்கிய மரபின் தொடர்ச்சியிது. தமிழின் நீண்ட கதை சொல்லும் மரபில் இது கரிசல் மரபு என்று அடையாளப்படுத்தலாம்.

கரிசல் எழுத்தின் பீஷ்மராக கி.ராவைச் சொல்ல வேண்டும். சொந்த மண்ணையும் மக்களையும் அவர்களின் வேர்மூலங்களையும் பதிவு செய்த கிராவின் எழுத்து தமிழ் நவீன இலக்கியத்தில் புதிய வாசலைத் திறந்துவிட்டது. ஆப்பிரிக்க இலக்கியம் இன்று என்ன காரணங்களுக்காக உலக அரங்கில் பேசப்படுகின்றதோ அதை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னதாகவே கரிசல் எழுத்தின் வழி தமிழில் துவக்கி வைத்தவர் கிரா.

வோலே சோயிங்கா, சினுவா அச்சுபே, என்று ஆப்பிரிக்க எழுத்தாளர்களுக்குக் கிடைத்துள்ள உலக அங்கீகாரம் இன்றுவரை கிராவிற்குக் கிடைக்கவில்லை. அதைச் செய்ய வேண்டியது தமிழ்ச் சமூகத்தின் கடமை.

1992இல் கிராவிற்கு சாகித்ய அகாதமி விருது கிடைத்துள்ளது என்ற தகவல் தெரிய வந்தவுடன் நானும் கோணங்கியும் கோவில்பட்டியில் இருந்து அவரைக் காண்பதற்காக பாண்டிச்சேரி புறப்பட்டோம். வழி முழுவதும் கிராவைப் பற்றியே பேச்சு. குடும்பத்து மனிதர் ஒருவர் கௌரவிக்கப்படுகிறார் என்பது போன்ற கூடுதல் சந்தோஷம்.

கோணங்கியை கிரா மிகச் செல்லமாக அழைப்பார். உரிமையோடு பேசுவார். ஒருமுறை நானும் கோணங்கியும் அவரைச் சந்திக்க இடை செவல் சென்றபோது கோணங்கி கதையைப் பற்றி வியந்து வியந்து சொல்லிக் கொண்டிருந்தார் கிரா.

அவர் படித்து ரசித்த கதைகளைப் பற்றிச் சொல்வதைக் கேட்பது ரசமான அனுபவம். அப்படி ஒரு எழுத்தாளன் எழுதும் போதுகூட அனுபவித்திருப்பானா என்று தெரியவில்லை. அவ்வளவு நேர்த்தியாக பலாப்பழத்தைச் சுளை சுளையாக எடுத்துக் கையில் தருவது போல விளக்கிச் சொல்வார்.

பாண்டிச்சேரிக்குப் போய் இறங்கி கிரா வீட்டினைத் தேடிச் சென்றோம். இடைசெவலில் இருந்த அவர் புதுவைப் பல்கலைக் கழகத்தின் நாட்டார் வழக்காற்றியல் துறையின் வருகைதரு பேராசிரியராகப் புது அவதாரம் எடுத்திருந்தார். புதுவை வாசம் அவரது தன்னியல் பிறகு மெருகேற்றியிருந்தது. பிரெஞ்சு இலக்கியவாதிகளைப் போல நைனாவும் வாக்கிங் போகிற அழகு பார்க்க அவ்வளவு அழகாக இருக்கிறது என்று கோவில்பட்டியில் நண்பர்கள் பேசிக் கொள்வார்கள்

ஊரில் இருந்த நாட்களில் கிராவைப் பார்த்திருக்கிறேன். கோவில்பட்டியிலிருந்து இடைசெவல் போகின்ற டவுன்பஸ்ஸிற்காக கோபாலன் கம்பெனி முன்னால் உள்ள புளிய மரத்தடியில் நின்று கொண்டிருப்பார். அவரோடு காத்திருப்பவர்கள் அத்தனை பேரும் விவசாயிகள். அவரும் ஒரு விவசாயியே. ஒரே சிறப்பு, கதை எழுதத்தெரிந்த விவசாயி.

கோவில்பட்டியின் புழுதியை தாங்கிக் கொண்டு பஸ் எப்போது வரும் என்று காத்துக் கொண்டிருப் பதைக் கண்டிருக்கிறேன். சில நாட்கள் தேவதச்சன் கடையில் வந்து நின்று அவரோடு பேசிக் கொண்டிருப்பார். கையில் எப்போதும் ஒரு மஞ்சள் பையிருக்கும். தெரிந்த முகத்தைப் பார்த்தவுடன் முகத்தில் சிரிப்பு மலரும். இணக்கமாகப் பேசத் துவங்குவார்.

கிரா விவசாய சங்கத்தில் தீவிரமாக இருந்த நாட்கள் அது. அதைப் பற்றி தேவதச்சனுடன் விவாதம் செய்தபடியே இருப்பார். தொலைவில் நின்றபடியே பார்த்துக் கொண்டிருப்பேன்.

அன்றைக்கு பாண்டிச்சேரியில் அவர் வீட்டிற்குப் போன போது இம்புட்டு தொலைவிலிருந்து வந்திருக்கிறார்களே என்று எங்களுக்கு ஒரே உபசாரம். கிரா வீடு உபசரிப்பிற்குப் பெயர்

போனது. அதிலும் கணவதி அம்மாவின் அன்பு அளப்பறியது. விருந்தாளிகளைக் கவனிப்பதற்கு என்று தனியே படித்திருப்பார்கள் போலும். அப்படிப் பார்த்துப் பார்த்துக் கவனிப்பார்கள்.

சாகித்ய அகாதமி விருது கிடைத்ததை ஒட்டி நிறைய பேர் வருவதும் பாராட்டுவதுமாக இருந்தார்கள். நாங்கள் அவரைத் தொந்தரவு படுத்த வேண்டாம் என்று கிளம்பி அங்கிருந்து சென்னைக்குக் கிளம்பினோம். வழியிலும் கிரா பற்றிய பேச்சு நீண்டது. நைனா அப்படியே இருக்காரு என்று கோணங்கி வியந்தபடியே வந்தார்.

நான் கிராவை முதன்முறையாக விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஆலங்குளம் என்ற ஊரில் நடை பெற்ற இலக்கிய முகாமில் சந்தித்ததைப் பற்றிச் சொன்னேன்.

அந்த முகாம் ஒரு டூரிங் தியேட்டரில் நடைபெற்றது. பகலில் காட்சிகள் கிடையாது என்பதால் இலக்கிய முகாம் நடத்த இடம் தந்திருந்தார்கள். முப்பது நாற்பதுபேர் வந்திருப்பார்கள். கிரா கரிசல்கதைகள் பற்றி உரையாற்றினார். கந்தர்வன் முற்போக்கு இலக்கியம் பற்றிப் பேசினார். தோழர் எஸ்.ஏ.பெருமாள் மாக்சிம் கார்க்கி பற்றிப் பேசினார். இப்படி பகல் முழுவதும் நடந்தது. அந்தப் பயிற்சி முகாமிற்குப் போகும் முன்பு என் அண்ணன் அங்கே நடப்பதைக் குறிப்பெடுத்து வர வேண்டும் என்று சொல்லியிருந்தான்.

ஆகவே நான் முதல்வரிசையில் அமர்ந்தபடியே ஒரு நோட்டில் மிகக் கவனமாகக் குறிப்புகளை எழுதிக் கொண்டேயிருந்தேன். கிரா என்னை ஏதோ ஒரு பத்திரிகையின் செய்தியாளர் என்று நினைத்திருக்க வேண்டும். மதிய உணவின் போது எந்தப் பத்திரிகை என்று கேட்டார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. பிறகு அவரே விளக்கிச் சொன்னார். நான் கல்லூரியில் படிக்கின்றவன் என்று சொன்னதும், அப்படியா, நான் தப்பா நினைச்சிட்டேன் என்றபடியே இதை என்ன செய்வீங்க என்று கேட்டார். நான் தெரியலை என்றேன். அவருக்குச் சிரிப்பு வந்தது. பிறகு எதுக்கு இந்த சள்ளை பிடிச்ச வேலை என்று கேட்டார்.

மதியம் நான் குறிப்பு எடுக்கவேயில்லை. அதை அவர் கவனித்து சிரித்துக் கொண்டார். சில எழுத்தாளர்களைச் சந்திக்கும்போது நாம் விரும்பாமலே வேறு ஒரு பிம்பம் நம்மைப் பற்றி உண்டாகிவிடும். அப்படிப் பலமுறை எனக்கு நடந் திருக்கிறது என்று சொன்னேன். கோணங்கியும் சிரித்துக் கொண்டார்

இதற்கு முன்பாக நான் கிராவைப் படிக்கத் துவங்கிய விதமும் திருகு தாளமாகவே நடந்தேறியது.

ஆல்பெர் காம்யூ, காப்கா, சார்த்தர், ஹெஸ்ஸே என்று தேடி வாசித்துக் கொண்டிருந்த நாட்களில் கிராவின் கதைகள் எனக்கு அறிமுகமானது. அவரைப் படிக்கப் படிக்க யாரோ தெரிந்த மனிதர் தான் சந்தித்த விஷயங்களை நேரிடையாகச் சொல்கிறாரோ என்று தோன்றியது. இது ஒன்றும் பெரிய விஷயமில்லையே இதை எதற்குக் கொண்டாடுகிறார்கள் என்றும் மனதில்பட்டது.

சிறுகதைகள் என்றால் வடிவ நேர்த்தியும் கவித்துவமான மொழியும் பன்முகத்தன்மையும் கொண்டிருக்க வேண்டும் என்று உறுதியாக நம்பிக் கொண்டிருந்தேன். அப்படி இல்லாத கதைகளை யார் எழுதியிருந்தாலும் உடனே நிராகரிக்க வேண்டும் என்றும் பழகியிருந்தேன்.

இதனால் கிராவின் சிறுகதைகளைப் படித்தவுடன் ஒரு தபால் அட்டையில் இவை எல்லாம் என்ன கதைகள் என்பது போல கடுமையாக விமர்சனம் செய்து அனுப்பி நீங்கள் காம்யூ, சார்த்தர், ம்யூசில் ஹெஸ்ஸே எல்லாம் படிக்க வேண்டும் என்று நீண்ட பட்டியலை எழுதியிருந்தேன். சில நாட்களில் அவரிடமிருந்து பதில் வந்தது. நீங்கள் நிறைய படிக்கிறீர்கள். இது ஜீரணமாக கொஞ்ச நாள் ஆகும். அப்புறம் என்னைப் படித்துப் பாருங்கள் என்று எளிமையாக எழுதியிருந்தார். அது உண்மை என்று புரிந்தது.

ஆரம்பகால இலக்கியவாசகன் எப்போதுமே பரபரப்பும் எடுத்தெறியும் விமர்சனங்களும் கொண்டிருப்பான். அப்படித்தான் நானும் இருந்தேன். ஆனால் தொடர்ந்த வாசிப்பும் எழுத்தும் பார்வையை விசாலப்படுத்தியது. பல விஷயங்களைப் புரிய வைத்தது.

மண்ணையும் மனிதர்களையும் எழுதுவது அத்தனை எளிதல்ல என்பதைப் புரிந்து கொள்ளத் துவங்கிய பிறகு அவரது கதைகளைப் படிக்கத் துவங்கினேன். கதைகளில் சம்பவங்கள் மட்டுமின்றி பறவைகள், மிருகங்கள், மனித நம்பிக்கைகள், சடங்குகள், வெயில், மழை, காற்று, மண் என்று நுட்பமாக விரிந்து கொண்டே போனதோடு தனித்துவமான கிராமத்துச் சொற்கள், அசலான கேலி, பாலியல் சார்ந்த பதிவுகள் என்று கதையுலகம் வளர்ந்து கொண்டே போனது.

கிரா ஒரு கதைக்களஞ்சியம் போலிருந்தார். முதன்முறையாக என்னைச் சுற்றிய உலகை நான் பார்த்துக் கொள்ளத் துவங்கினேன். மஞ்சனத்திச் செடியும் தும்பையும் நெருஞ்சியும் அவர் கதைகளில் வந்தது போல ஏன் என் எழுத்திற்குள் வரவேயில்லை என்று கேட்டுக் கொண்டேன். தவிட்டுக் குருவிகள், தைலான், செம்போத்து, நாரை, கௌதாரி போன்ற பறவைகள் ஏன் நவீனக் கதைகளை விட்டு விலகிப் பறந்து போகின்றன. கார்க்கியின் கிழவி இஸர்கீலை ரசிக்கத் தெரிந்த எனக்கு ஏன் கிராவின் பப்பு தாத்தா சாதாரணமாகத் தெரிந்தார் என்று குற்றவுணர்ச்சி கொள்ளத் துவங்கினேன்.

தத்துவமும் மெய்யியலும் மட்டுமே வாழ்வின் தரிசனங்களை உருவாக்குபவை என்று நினைத்துக் கொண்டிருந்தது மாறி வாழ்வின் அன்றாடச் செயல்பாடுகளில் இருந்து பெறும் அகதரிசனம் தத்துவம் தரும் உன்னத நிலைகளைவிடவும் வலிமையானது என்று புரிந்தது.

கிராவைத் தேடித் தேடி வாசித்தேன். அவரது படைப்புலகில் எனக்கு மிக விருப்பமானது கோபல்ல கிராமம் நாவல். அது இலக்கியப்பதிவு மட்டுமில்லை. ஒரு சமூகம் எப்படி நம்மண்ணில் வேர் ஊன்றியது என்ற சரித்திர ஆவணம். நாட்டார் மரபு எப்படி நிலம் கடந்து தொடர்கின்றன என்று ஆய்வதற்கான சான்றுப் பொருள். நினைவுகள் எவ்வளவு வலிமையானவை என்பதை நிரூ பணம் செய்யும் சாட்சி. மானுடவியல் நோக்கில் வாழ்க்கை எப்படி மாறுகிறது என்பதைச் சுட்டிக்காட்டும் ஆய்வுப்படைப்பு. இப்படி அது பன்முக நிலைகளில் முக்கியத்துவம் வாய்ந்த நாவலது.

கிராவின் சிறுகதைகள் சொல்மரபிலிருந்து உருவானவை. அவை கதைகளின் வழியே மனித வாழ்வின் துயர்களை, சந்தோஷங்களை, அகச்சிக்கல்களைப் பேசுகின்றன. அவர் அலங்காரமாகக் கதை சொல்வதில்லை. ஆனால் உயிரோட்டமாகக் கதை சொல்கிறார். கடலைச் செடியை மண்ணிலிருந்து பிடுங்கினால் எப்படி வேரில் ஒட்டிய மண்ணோடு சேர்ந்து வருமோ அப்படியான படைப்பது. எளிய கிராமத்து மனிதர்களின் அன்றாட வாழ்க்கையை அவர் அளவு உன்னிப்பாக எழுதியவர் வேறு எவருமில்லை.

விஞ்ஞானத்தின் வருகை கிராமத்து வாழ்க்கையை எப்படிப் புரட்டிப் போட்டது என்பதைப் பற்றிய பதிவுகள் தமிழில் அதிகம் இல்லை. கிரா அதைக் கவனமாகப் பதிவு செய்திருக்கிறார். டீ தயாரிக்கும் கம்பெனிகள் எப்படி இலவசமாக தேயிலைகளை வீடு வீடாகக் கொண்டு வந்து கொடுத்தார்கள் என்பதில் துவங்கி, கடிகாரம் வந்தது ரயில் வந்தது என்று நீண்டு விஞ்ஞானம் கிராமத்தில் நுழையும் போது ஏற்படும் அதிர்ச்சிகளை அசலாகப் பதிவு செய்திருக்கிறார். அது போலவே சுதந்திரப் போராட்ட நாட்களில் தமிழ்க் கிராமங்கள் எப்படியிருந்தன என்பதற்கும் அவரது கதைகளே நேர் சாட்சிகள்.

திருடனை எப்படிக் கழுவேற்றினார்கள் என்பதை அவரது கதையில்தான் முதன்முறையாக வாசித்துத் தெரிந்து கொண்டேன். சமணர்களைக் கழுவேற்றிய சரித்திர உண்மைகளைப் படித்து அறிந்திருந்த போதும் கழுமரம் எப்படியிருக்கும் அது என்னவிதமான தண்டனை என்பதை அவரே முதன்முதலில் விரிவாக விளக்கி எழுதியிருந்தார்.

ஒரு முறை நகுலனைச் சந்திக்கச் சென்றபோது அவர் தன்னுடைய அம்மா கிராவின் கதை ஒன்றை அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார். கரிசல்காட்டில் ஒரு சம்சாரி என்ற கதையது. அந்தத் தலைப்பு அவளை ஏதோ செய்தது. அடிக்கடி தலைப்பை மட்டுமே சொல்லிக்

கொண்டிருப்பாள். பெண்கள் நாம் படிக்கும் அதே கதைகளை வேறு விதமாகப் படிக்கிறார்கள் போலும் என்றபடியே உங்களுக்கு கிராவைப் பிடிக்குமா என்று கேட்டார். ஆமாம் என்றபடியே உங்களுக்கு என்று கேட்டேன். இரண்டு கைகளையும் உயர்த்தியபடியே அசலான எழுத்தாளர் என்று சொல்லிச் சிரித்தார். நகுலனின் எழுத்தில் கிராவின் எழுத்து பற்றிய நுட்பமான பதிவு சில இடங்களில் வெளிப்பட்டுள்ளது.

கதவு என்ற கிராவின் கதை அது எழுதப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை தொடர்ந்து வாசிக்கபட்டும் கொண்டாடப்பட்டும் வருகிறது. சமீபத்தில் பிரெஞ்சில் இருந்து வந்த ஒரு ஆய்வாளரைச் சந்தித்தேன். அவர் அந்தக் கதையை தான் பிரெஞ்சில் வாசித்திருப்பதாகவும் அது அற்புதமான கதை என்றும் சொல்லி வியந்தார்.

எழுத்தாளர் என்ற முறையில் தன் மண்ணையும் மக்களையும் இலக்கியமாக்கியதோடு கிராவின் பணி முடிந்துவிடவில்லை. நேரடியான அரசியல் ஈடுபாடும் கொண்டவர் கிரா. இடதுசாரி இயக்கங்களுடன் சேர்ந்து பணியாற்றியவர். சிறை சென்றவர். விவசாய சங்கங்களின் போராட்டத்தில் கலந்து கொண்டு இரண்டுமுறை சிறை சென்றிருக்கிறார்.

அதுபோலவே நாட்டுப்புறக் கதைகளைச் சேகரித்துப் பாதுக்காக வேண்டும், அது தனிவகை இலக்கியம் என்று பல ஆண்டுக்காலமாக அவர் மேற்கொண்ட முயற்சி தற்போது ஆயிரம் பக்கத்திற்கும் மேலான பெரிய நூலாக வெளிவந்துள்ளது.

அத்தோடு நாட்டுப்புறக்கதைகள் பற்றி ஆய்வு செய்யவும் கற்றுத் தருவதற்காகவும் புதுவைப் பல்கலைக்கழகம் அவரை பேராசிரியர் ஆக்கி கெளரவப்படுத்தியது. நாட்டுபுறக் கதைகளிலும் பாலியல் சார்ந்த கதைகளைச் சேகரிப்பதில் பலரும் முகச்சுழிப்பு கொண்டபோது பாலியல் மனிதனின் ஆதார இச்சை, அதை எதற்காக விலக்க வேண்டும் என்று பாலியல் கதைகளைச் சேகரித்து, அதைத் தனித்த நூலாகவும் மாற்றியவர் கிரா.

இன்னொரு பக்கம் கரிசல் வட்டாரச் சொற்களைத் தொகுத்து அகராதி உருவாக்கியிருக்கிறார். கடித இலக்கியம் என்ற வகையை மேம்படுத்தியது அவரது கடிதங்கள். அழகிரிசாமிக்கும், நண்பர்களுக்கும் அவர் எழுதிய கடிதங்கள் அபூர்வமான இலக்கியத் தன்மை கொண்டவை.

தாமரை, சாந்தி, தீபம் என்று இலக்கிய இதழ்களில் எழுதிக் கொண்டிருந்த கிரா விகடனில் எழுதியதன் வழியே பரவலான பொது வாசகர்களைச் சென்று சேர்ந்தார். அது அவருக்கெனத் தனித்த வாசக பரப்பை உருவாக்கியது. இசையிலும் பழந்தமிழ் இலக்கியங்களில் அவர் கொண்டுள்ள ஈடுபாடு அலாதியானது. விளாத்திகுளம் சாமிகளிடம் நேரடியாக இசை பயின்றிருக்கிறார். டிகேசியிடம் கம்பராமாயணம் கேட்டு அறிந்திருக்கிறார். இப்படி ஆயிரம் சிறப்புகள் கிராவிற்கு உண்டு.

சென்றஆண்டு சென்னைப் புத்தகக் கண்காட்சியில் கிராவைச் சந்தித்தேன். கையைப் பிடித்தபடியே அன்போடு பேசிக்கொண்டிருந்தார். அவரோடு அவரது பேரன் நின்றிருந்தார். சென்னையில் கணிப்பொறித் துறையில் வேலை செய்கின்றவர். அவரை அறிமுகம் செய்து வைத்து இவன் உங்களைத்தான் விரும்பிப் படிக்கிறான் என்று சொல்லி சென்னையில்தான் இருக்கான், உங்களைச் சந்திக்கச் சொல்கிறேன் என்று சொன்னார். பத்து நிமிசம்தான் பேசியிருப்போம். ஆனால் மனதில் விளக்கிச் சொல்லமுடியாத சந்தோஷம் உருவானது.

மகாகவி தாந்தேயின் கண்ணில் பட்ட புலி ஒன்று அவரது கவிதையின் வழியே நித்தியத்துவம் அடைந்து விட்டது என்று போர்ஹே ஒரு கதையை எழுதியிருப்பார். ஒரு வகை யில் கிராவின் வழியே கரிசல் கிராமங்கள் தன் வாழ்க்கையை எழுதிப் பாதுகாத்து வைத்துக் கொண்டுவிட்டன என்றே தோன்றுகிறது.

சி.சு.செல்லப்பா: சுமந்து சென்ற எழுத்து

சி.சு.செல்லப்பாவிற்கு விளக்கு விருது அறிவிக்கபட்டதைத் தொடர்ந்து அவரைச் சந்திப்பதற்காக நானும் வெளிரெங்கராஜனும் திருவல்லிக்கேணியில் இருந்த அவரது வீட்டிற்குச் சென்றிருந்தோம்.பிள்ளையார்கோவிலின் அரு காமையில் உள்ள சிறிய ஒற்றையறைக் குடித்தனம். வயதான செல்லப்பாவும் அவரது மனைவியும் மட்டும் தனியே வசித்துக் கொண்டிருந்தார்கள்.

செல்லப்பாவை மதுரையில் இரண்டு மூன்று முறை சந்தித்திருக்கிறேன். ஆனால் சென்னைக்கு வந்த பிறகு சந்திக்கவேயில்லை. வீடு தேடிச் சென்றதும் அதே உற்சாகம் குறையாமல் உள்ளே அழைத்து பாயில் உட்காரச் சொன்னார். வீட்டில் சாமான்கள் அதிகமில்லை. ஒரு பெரிய காகிதப்பெட்டி நிறைய புத்தகங்கள் மற்றும் காகிதங்கள் நிரம்பியிருந்தன. கொடியில் காய்ந்து கொண்டிருந்த ஈர வேஷ்டியும் துண்டுமே அவரது சொத்தாக மிஞ்சியிருந்தது.

ஆனால் இலக்கியம் பற்றிப் பேசத் துவங்கியதும் அவர் குரலில் அதே ஆவேசம். கண்களில் ஒளிரும் வேகம். புதிய விமர்சன முறைகளை விவரிக்கும் கறார்தன்மை. உலக இலக்கியத்தைப் பற்றி எடுத்துச் சொல்லும் தடையற்ற பிரவாகம். யாவும் கடந்து சகமனிதன் மீது கொள்ளும் நெருக்கமான அன்பும் அக்கறையும் அவரிடமிருந்தன.

ரங்கராஜனும் அவரும் விருது பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். விருது வாங்கிக் கொள்வதில் தனக்கு உள்ள தயக்கத்தை வெளிப் படையாகப் பகிர்ந்து கொண்டபடியே தனக்கான பரிசுத்தொகையில் ஒரு புத்தகம் வெளியிட முடியுமா என்று கேட்டார்.

அவர் விருப்பபடியே செய்துவிடலாம் என்றதும் அவசர அவரசமாகத் தனது காகிதப் பெட்டிக்குள் இருந்த கையெழுத்துப் பிரதிகளைத் தேடி வெளியே எடுத்தார். ஒன்று பி.எஸ்.ராமையாவைப் பற்றியது. மற்றொன்று நவீனத் தமிழ் விமர்சனத்தின் வரலாறு பற்றியது என்று பத்துப் பதினைந்து கையெழுத்துப் பிரதிகள்.

அழகாக எழுதி, எண் இடப்பட்டு வெளியாவதற்காகப் பல வருடமாகக் காத்துக்கிடக்கின்ற பிரதிகள்.உங்களுடைய சிறுகதைகளை வெளியிடலாம் என்று ரங்கராஜன் சொன்னதும் முதல்ல பி.எஸ்.ராமையா வரட்டும் எவ்வளவு பெரிய எழுத்தாளர். அவரைப் பத்திய விபரங்கள் முதல்ல தெரியட்டும் என்று ராமையாவின் சிறுகதைகளைப் பற்றிய விரிவான கட்டுரைத் தொகுதியை முன்னால் எடுத்துக் காட்டினார்.

செல்லப்பா மாறிவிடவேயில்லை. அதே தீவிரம். அதே உற்சாகம் என்று தன் வாழ்வின் இறுதி நாள் வரை படைப்பிலக்கியத்தின் போராளிக்குணம் மிக்க மனிதராகவே வாழ்ந்தார் செல்லப்பா.

செல்லப்பாவின் புத்தகத்திற்கு உதவி செய்வதற்காக நாலைந்து முறை அவரைத் தேடிச்சென்று சந்தித்தேன். அவரது வீடு குடியிருப்பதற்கே போதுமானதில்லை. அதில் சந்திக்க வருகின்றவர்களுக்கு ஏது இடம். அருகாமையில் உள்ள தஞ்சாவூர் பட்சணக்கடைக்கு அழைத்துச் சென்று உட்கார வைத்து காபி வாங்கித் தந்து பேசிக் கொண்டிருப்பார்.

எண்பத்திநாலு வயதைக் கடந்த முதுமையில் ஏன் இப்படித் தனியாக வாழ்கிறீர்கள் என்று கேட்டேன்.யாருக்கும் சுமையா இருக்கவிரும்பலை. பிள்ளைகள் நம்மைப் புரிஞ்சிக்கிடலே. சண்டை போட்டு ஆகப்போறது ஒண்ணும் இல்லே. அவளுக்கு காது வேற கேட்கலை. நீ வேணும்னா மகன்கூட இருநு சொன்னேன். கேட்கலை. என் பின்னாடி வந்துட்டா.

இதே தெருவில்தான் கல்யாணம் ஆகிப் புதுக்குடித்தனம் வந்து இருந்தேன். இப்போ பேரன் பேத்தி வரைக்கும் பாத்திட்டு அதே தெருவில் முன்னாடி இருந்ததைவிடச் சின்னவீட்ல சாவை எதிர்பார்த்து உட்கார்ந்துகிட்டு இருக்கேன். எனக்கிருக்கிற ஆசை எல்லாம் நான் எழுதினது எல்லாத்தையும் அச்சில ஏத்திப் பாத்துறணும். ஒவ்வொரு புத்தகம் எழுதுறதுக்கும் மாசக்கணக்கில ஆகியிருக்கு. ஆனா அதை வெளியிட யாரும் முன்வரலை. நானே போட்ருவேன். கையிருப்பு இல்லை. நகையை வித்துப் புத்தகம் போட்ட காலம் முடிஞ்சி போச்சி. இப்போ விக்கிறதுக்கு எதுவுமில்லை. என்று வலியை மறைத்த மனதுடன் பேசினார்.

யாருமற்ற தனிமையில் நீளும் அவர்களின் முதுமையும், எழுதி வெளியிடக் காத்திருக்கும் கையெ ழுத்துப் பிரதிகளும், எழுத்தின் மீதான செல்லப்பாவின் அசாத்தியமான நம்பிக்கையும் அவர் மீது பெரும் மதிப்பை உருவாக்கியது.

1650 பக்கங்கள் கொண்ட நாவலான சுதந்திர தாகம், ராமையாவைப் பற்றிய புத்தகம் என்று வீடு நிறைய அச்சிடப்பட்ட புத்தங்களுடன் அமர்ந்துகொண்டு தன் காலத்திற்குள் தன் நாவலை அச்சில் பார்த்துவிட்டேன் என்று தன்னைப் பார்க்க வருகின்ற ஒவ்வொருவரிடமும் சொல்லிக்கொண்டிருந்தார் செல்லப்பா. எல்லாக் குடும்ப நெருக்கடிகளையும் தாண்டி அவரைச் சந்தோஷம் கொள்ளச் செய்தது அவரது எழுத்துகள் மட்டுமே.

தமிழ்ச் சிற்றிதழ் இலக்கியம் இன்று அடைந்துள்ள வளர்ச்சியின் முதல்படியாக அமைந்தது செல்லப்பாவின் எழுத்தே. அவரிடமிருந்தே தமிழின் புதுக்கவிதை இயக்கம் துவங்குகிறது. வாடி வாசல் தமிழில் வெளியான மிக முக்கியமான நாவல். செல்லப்பாவின்

இந்த நாவல் ஜல்லிக்கட்டை மையமாகக் கொண்டது. நான் அறிந்தவரை இந்த ஒரு நாவலைத் தவிர ஜல்லிக்கட்டு குறித்த தனித்த இலக்கியப் பதிவுகள் எதுவுமில்லை.

என் பதின்வயதிலிருந்து ஜல்லிக் கட்டைத் தொடர்ந்து பார்த்து வந்திருக்கிறேன். சில வேளைகளில் ஜல்லிக்கட்டிற்கு மாடு கொண்டு போகின்றவர்களுடன் சேர்ந்து அலைந்திருக்கிறேன். ஜல்லிக்கட்டுக் காளையை வளர்ப்பது ஒரு தனிக்கலை. அதில் தேர்ந்தவர்கள் பெண்களே. அவர்கள் ஜல்லிக்கட்டுக் காளையோடு கொள்ளும் உறவு மிக விசித்திரமானது. எவ்வளவு முரட்டுக் காளையும் அவர்களது சொல்லில் கட்டுப்பட்டுவிடும் வியப்பைக் கண்டிருக்கிறேன்.

அத்தோடு காளையைப் போட்டிக்காகக் கொண்டு போவது, களம் தயாரிப்பது. காளையை அடக்க வரும் வீரர்கள், அதையொட்டிய நிகழ்வின் உற்சாகம், போட்டியில் வெற்றியோ தோல்வியோ எதுவுமாயினும் காளைகளை வீடு திரும்பச் செய்வது என்று ஜல்லிக்கட்டின் பின்னால் மதுரையைச் சுற்றிய நிலப்பரப்பின் தொன்மையான கலாச்சாரம் நீண்டு படர்ந்துள்ளது.

செல்லப்பா அதை மிக நுட்பமாகத் தனது நாவலில் பதிவு செய்திருக்கிறார். வாடிவாசலைப் படித்த நாளில் இருந்து செல்லப்பாவைச் சந்திக்க வேண்டும் என்ற ஆசை இருந்துகொண்டேயிருந்தது.எண்பதுகளின் இறுதியில் செல்லப்பா மதுரையில் தனது மகன் வீட்டில் தங்கியிருக்கிறார் என்று நண்பர் ஒருவர் சொன்னதும் செல்லப்பாவை சந்திப்பது என்று முடிவு செய்தேன்.

தமிழ்ச் சிறுபத்திரிகைகளின் முன்னோடி இதழ் எழுத்து. அதிலிருந்துதான் புதுக்கவிதை, நவீன விமர்சனம் உருவாகின. செல்லப்பா அதை ஒரு இலக்கிய இதழாக மட்டுமின்றி ஒரு இலக்கிய இயக்கமாகவே நடத்தினார்.

தமிழ்ப் புனைவுலகிற்கு இணையாக இலங்கையில் இருந்த படைப்பாளிகளையும் ஒன்று சேர்த்து அவர்களுக்கான எழுத்துக்களம் அமைத்துத் தந்தது செல்லப்பாவே. இன்று சிறுபத்திரிகைகள் சார்ந்த பதிப்பகங்கள் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன. இதற்கான முன்முயற்சியும் அவர் உருவாக்கியதே. எழுத்து சார்பில் அவர் வெளியிட்ட புத்தகங்கள் மிகத் தனித்துவமானவை.

எழுத்து, மணிக்கொடி என்ற சொற்களை மட்டுமே அறிந்திருந்த எனக்கு வாசிப்பதற்கு அவை எங்கே கிடைக்கும் என்று எந்த விபரமும் தெரியவில்லை. ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள பெனிங்டன் நூலகத்தில் கிடைக்கக்கூடும் என்றார்கள். இதற்காகவே அங்கே உறுப்பினராகி தேடியபோதும் எழுத்தோ மணிக் கொடியோ கையில் கிடைக்கவில்லை.

கோட்டையூரில் உள்ள ரோஜா முத்தையா செட்டியாரிடம் இருக்கிறது என்று இன்னொரு நண்பர் சொன்னதை நம்பி கோட்டையூருக்குச் சென்று ரோஜா முத்தையா செட்டியாரைச் சந்தித்தபோது அவர் வீடு மிகப்பெரிய நூலகமாக இருந்ததைக் காணமுடிந்தது.

அவர் தன்னிடம் பழைய இதழ்கள் எல்லாமும் இருக்கிறது. அத்தனையும் எடுக்க முடியாது.மாதிரிக்காக ஒரு இதழைக் காட்டுகிறேன். இங்கேயே வாசித்துவிட்டுத் தந்துவிட வேண்டும் என்றார்.கண்ணில் பார்த்துவிட்டால் போதும் என்று தலையசைத்தவுடன் அவரே உள்ளே சென்று இரண்டு சிற்றிதழ்களைக் கொண்டுவந்து தந்தார். அத்தோடு சாப்பிடுவதற்கு அடையும் காபியும் கொண்டுவந்து தந்து, சாப்பிட்டுவிட்டுப் பிறகு நிதானமாக இதைப் படித்துக் கொண்டிருக்கலாம் என்று அன்போடு உபசாரம் செய்தார்.

மனம் சாப்பாட்டில் கவனம் கொள்ளவில்லை. செல்லப்பாவின் எழுத்து இதுதானா என்று கையில் வைத்திருந்த சின்னஞ்சிறு இதழின் மீதே கவனம் குவிந்திருந்தது. ரோஜா முத்தையா தன் சேகரத்தில் வைத்திருந்த பல்லாயிரம் புத்தகங்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். சில நாடக விளம்பரங்கள், பாட்டுப் புத்தகங்கள் போன்றவற்றைக் கொண்டுவந்தும் காட்டினார்.

ஒரேயொரு மணிக்கொடி இதழையும் எழுத்து இதழையும் கையில் புரட்டிப் புரட்டிப் பார்த்துக்கொண்டேயிருந்தேன். எழுத்து என்ற முகப்பு அச்சு மிக அழகாக இருந்தது. மௌனியின்மனக்கோலம் என்ற கட்டுரை, நாலைந்து கவிதைகள். டி.கே.துரைசாமி என்ற பெயரில் நகுலன் எழுதிய விமர்சனம், முருகையன் எழுதிய கட்டுரை என்று இதழ் தீவிரமானதாகவே இருந்தது. இதழில் செல்லப்பா ஏதாவது எழுதியிருக்கிறாரா என்று தேடினேன். சிறிய குறிப்புகளைத் தவிர அதிகமில்லை. மற்றவர்கள் எழுத வேண்டும் என்பதற்காகவே அவர் தன் இதழ் முழுவதையும் பகிர்ந்து கொடுத்திருக்கிறார்.

ஒப்பிடும்போது மணிக்கொடியைவிடவும் எழுத்து நவீனப் பிரக்ஞை கொண்டதாகத் தோன்றியது. அரை மணி நேரத்திற்குள் படித்து முடித்தபோதும் அதைத் திருப்பித் தர மனதின்றி கையில் வைத்துக்கொண்டேயிருந்தேன். மாலையில் ரோஜா முத்தையா மிகக் கவனமாக அதை வாங்கிக் கொண்டுபோய் உள்ளே வைத்து விட்டார். வீடு திரும்பும்போது எப்படியாவது எழுத்து இதழ்கள் அத்தனையும் ஒன்று சேரப் படிக்க வேண்டும் என்ற ஆசை உண்டானது. யாரிடம் மொத்த இதழ்கள் இருக்கும் என்று தேடத்துவங்கினேன்.

ராமநாதபுர மாவட்டக் கூட்டுறவு வங்கியின் தலைமை அலுவலகத்தில் எனது நண்பனின் அப்பா வேலை செய்துகொண்டிருந்தார். ஒரு நாள் அவரைச் சந்திக்கச் சென்றபோது தங்கள் அலுவலகத்தில் ஒரு நூலகம் இருப்பதாகவும் அதை யாரும் பயன்படுத்துவதேயில்லை

என்றும் சொன்னார். ஏதாவது காந்திய நூல்கள் வாங்கி வைத்திருப்பார்கள் என்ற சலிப்பில் அதில் அக்கறை காட்டவேயில்லை.ஆனால் சில நாட்களுக்குப் பிறகு அவர் அந்த நூலகத்தில் இருந்து தபால்காரன் என்ற நாவலை எடுத்து வந்து காட்டி இது உங்களுக்குப் பிரயோஜனப்படுமா என்று கேட்டார்.

உலகப் புகழ்பெற்ற நாவலின் தமிழாக்கம் எப்படி ஒரு கூட்டுறவு வங்கியின் நூலகத்திற்கு வந்தது என்ற ஆச்சரியத்துடன் வாங்கிக்கொண்டு இதைப்போல வேறு புத்தகங்கள் உள்ளதா என்று கேட்டேன்.

ஆமாம் வேண்டுமானால் நேரில் வந்து பாரு என்றார். மறுநாளே அவரோடு பயணம் செய்து பல வருடமாகக் கண்ணாடி பீரோவில் பூட்டி வைக்கப்பட்டிருந்த புத்தகங்களைப் புரட்டினால் பாதி சைவ சிந்தாந்த பதிப்பு நூல்கள், தேவாரத் திரட்டுகள், யுனெஸ்கோ இதழ்கள். அதற்குள் பைண்ட் செய்யப்பட்ட இரண்டு சிவப்பு நிற புத்தகங்கள் தென்பட்டன. உருவி எடுத்தபோது முதல் இதழில் இருந்து எழுத்து இதழ் தொகுத்து பைண்ட் செய்யப்பட்டிருந்தது.

அத்தோடு தாமஸ்மன்னின் மாறிய தலைகள், ஆயிரத்தோரு அற்புத இரவுக் கதைகள் என்று பத்து பதினைந்து புத்தங்கள் கிடைத்தன. அத்தனையும் அவர் பெயரில் பதிவு செய்து எடுத்துக்கொண்டு பேருந்தில் ஏறியபோது நம்பமுடியாமல் இருந்தது. எப்படிக் கூட்டுறவு வங்கியில் எழுத்து இதழ்கள் வாங்கி வாசிக்கப்பட்டு பைண்ட் செய்யப்பட்டிருக்கின்றன.

வீடு வரும்வழி முழுவதும் வாசித்துக்கொண்டேயிருந்தேன். ஹெமிங்வே, பாக்னர், ஜாக் லண்டன் என்று தேர்ந்தெடுத்த மொழி பெயர்ப்புகள். புனைகதைகள் பற்றிய விரிவான கட்டுரைகள். புதுக்கவிதை குறித்த சர்ச்சைகள் விவாதங்கள், புதிய அழகியலை நோக்கிய அறிமுகம் என்று எழுத்து இதழை வாசிப்பது பரவசம் ஊட்டுவதாகவே இருந்தது.

அந்த இதழின் வழியாக செல்லப்பா நவீனத் தமிழ் இலக்கியத்திற்காக எவ்வளவு தூரம் ஓடியோடி உழைத்திருக்கிறார். எவ்வளவு கனவு கண்டிருக்கிறார். எத்தனை எழுத்தாளர்களை உருவாக்கியிருக்கிறார் என்ற உண்மை துல்லியமாகப் புலப்பட்டது. தன் விருப்பத்தின் வழியே மட்டுமே அவர் பயணம் செய்திருக்கிறார். தமிழ் இலக்கியத்தைச் சமகால உலக இலக்கியத்திற்குச் சமமானதாக உருமாற்ற வேண்டும் என்ற வேட்கை அவருக்குள் தீவிரமாக இருந்திருக்கிறது.

குறிப்பாகத் தமிழ் விமர்சனத் துறையை ஆங்கில இலக்கியத்தின் நவீன விமர்சனத் துறைக்கு நிகரானதாக உருவாக்கவேண்டும் என்பதில் கூடுதலாகவே அக்கறை கொண்டிருக்கிறார். அதே வேளையில் தனது கருத்துகளோடு உடன்படாத பல முக்கியப் படைப்புகளையும் அவர் பிரசுரம் செய்திருக்கிறார்.

செல்லப்பாவின் எழுத்து தமிழின் நவீன இலக்கியப் பிரக்ஞையின் முதல் அடையாளம். மிகக் கவனமாகவும் தேர்த்தியாகவும் நடத்தப்பட்ட சிற்றிதழ். ஒவ்வொரு இதழிலும் படைப்பாளிகள் பற்றிய குறிப்புகளும், புத்தகங்களை வாங்குகின்றவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளும் புதிய அறிவிப்புகளும் வெளியிடப்பட்டிருக்கின்றன. அதற்குப் பயன்படுத்தப்பட்ட வாசகங்கள் மற்றும் வாசகன் மீது அவருக்கு இருந்த அக்கறை மிகவும் பாராட்டப்பட வேண்டியது.

என்னிடம் எழுத்துத் தொகுதி இருக்கிறது என்பதைப் பெரிய புதையல் கிடைத்த சந்தோஷத்துடன் போகின்ற இடங்களுக்கு எல்லாம் கொண்டு சென்றேன். அதைக் கையில் வாங்கிப் புரட்டி பலர் அடைந்த வியப்பும் இன்னும் மனதில் நிற்கிறது. எழுத்துத் தொகுதியை வாசித்தபிறகே செல்லப்பாவின் எழுத்துகளைத் தேடி வாசிக்கத் துவங்கினேன். அதன்முன்பாக வாடி வாசல் மட்டுமே படித்திருந்தேன்.

இந்த மயக்கமே என்னை செல்லப்பாவைக் காண்பதற்கு அழைத்துச் சென்றது. செல்லப்பா மதுரையின் பைபாஸ் ரோட்டின் உள்ள புறநகர் குடியிருப்பு ஒன்றில் தனது மகனோடு தங்கியிருந்தார். நான் பார்க்கச் சென்ற மதியநேரத்தில் வீடு அமைதியாக இருந்தது. அழைப்புமணியை அழுத்தியபோது ஒரு வயதான பெண்மணி வெளியே வந்து யார் வேண்டும் என்று விசாரித்தார். சி.சு.செல்லப்பாவைப் பார்க்க வேண்டும் என்று சொன்னேன். உடனே அவர் நீங்க எழுத்தாளரா என்று கேட்டார். ஆமாம் என்று தலையசைத்தவுடன் இருங்க வரச்சொல்றேன் என்றபடியே உள்ளே சென்றார்.

சில நிமிசங்களில் நாலு முழ வேஷ்டி அணிந்து சட்டையில்லாத வெறும் உடம்புடன் நரைத்த தலையும் ஒடுங்கிய கண்களும் மெலிந்த உடலுமாக செல்லப்பா வெளியே வந்து நின்று கைகூப்பினார். வீட்டில் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. நாற்காலியில் அமர்ந்து கொண்டபோது அவர் தரையில் உட்கார்ந்துகொண்டார். என் முன்னே அமர்ந்திருப்பவர்தான் சி.சு.செல்லப்பாவா என்பது நம்ப முடியாமல் இருந்தது.

அவர் பாதங்களையே பார்த்துக் கொண்டிருந்தேன். எவ்வளவு தூரம் அலைந்த கால்கள் அவை. நீண்டு மெலிந்த பாதங்கள். அதில் கடந்து சென்ற பாதைகளின் சுவடேயில்லை. எந்த ஊருல இருந்து வர்றீங்க என்று பரிவான குரலில் கேட்டார். ஊரைச் சொன்னவுடன் உங்க ஊர்ல வாசகசாலை இருக்கா என்று கேட்டார். இருக்கிறது என்று சொன்னேன். சுப்பாராஜனு ஒரு காங்கிரஸ்காரர் இருக்கிறாரா என்று கேட்டார். ஆமாம் என்றதும் எப்பவோ ஒரு தடவை உங்க ஊருக்கு பொஸ்தகம் விக்க வந்திருக்கிறேன். ஒரே செம்மண் புழுதியா இருக்கும் என்றார்.

தான் வெளியிட்ட புத்தகங்களைத் தலைச்சுமையாகக் கட்டித் தூக்கிக்கொண்டு ஒவ்வொரு இடமாகச் சென்று விற்று வந்தவர் செல்லப்பா என்று வாசித்திருக்கிறேன். அது நிஜம் என்பதை அவரது பேச்சின் துவக்கத்திலே புரிந்து கொள்ள முடிந்தது. சில நிமிச நலவிசாரிப்புகளுக்குப் பிறகு நேரடியாக ஆங்கில இலக்கிய விமர்சனத்தைப் பற்றிப் பேசத் துவங்கினார்.

எப்ஆர் லீவிஸ் மற்றும் கிளாயண்டே புருக்கின் விமர்சன முறைகள் எப்படிப்பட்டவை, கோல்ட்ரிஜ் கவிதையைப் பற்றி என்ன கோட்பாடு வைத்திருக்கிறான், நியூ கிரிட்டிசிசம் என்றால் என்ன என்று மடமடவெனக் கொட்டிக்கொண்டிருந்தார்.

எங்கிருந்து இவற்றை எல்லாம் வாசித்தார். எப்படி இவ்வளவும் மனதில் சேகரமாகியிருக்கிறது என்ற வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தேன். கதை எழுதுற அத்தனை பேரும் விமர்சனமும் எழுதணும்.அப்போதான் இலக்கியம் வளரும் என்று வலியுறுத்தினார். நான் தேடி வந்தது செல்லப்பா என்ற ஆளுமையின் கடந்தகாலச் சுவடுகளை அறிந்துகொள்வதற்காக. அவர் விரும்புவதோ எதிர்காலத்தின் மீதான கனவுகளுடனான உரையாடல்களை என்று புரிந்தது.

நாலுமணியளவில் அருகில் போய்ப் பால் வாங்கி வர வேண்டும் போகலாமா என்று கூப்பிட்டார். வீட்டை விட்டு இறங்கி நடந்தோம்.செல்லப்பா வேகமாக நடக்கக் கூடியவர். எழுபதைக் கடந்த வயதிலும் நடையின் வேகம் அப்படியே இருந்தது. பால் வாங்கிக்கொண்டு திரும்பி வந்தவுடன் இன்னொரு நாள் வாங்கோ.. நிறைய பேசுவோம் என்று வாசலில் வைத்து விடை தந்து அனுப்பிவைத்தார். குடும்ப உறவுகளின் கசப்பிற்குள்ளாக அவர் வாழ்ந்துகொண்டிருந்தார் என்பது அப்போது தெரியாது. எதற்காக என்னை இவ்வளவு அவசரமாக அனுப்பி வைக்கிறார் என்ற ஆதங்கத்துடன் மதுரைக்குள் சென்றேன்.

அதன்பின்னே சில மாதங்களுக்குப் பிறகு செல்லப்பாவை இரண்டாம் முறையாகப் பார்க்கப் போனபோது அவர் வெளியே எங்காவது போகலாமா என்று கேட்டார். இரு வருமாகப் பொதுப்பணிதுறையின் பூங்கா ஒன்றில் போய் உட்கார்ந்து கொண்டோம்.

செல்லப்பா தன்னைப்பற்றிப் பேசத்துவங்கினார். அவரது அப்பா சுப்ரமணிய ஐயர் அரசாங்க ஊழியர்,பொதுப்பணித்துறையில் வேலை செய்தவர். காந்தியவாதி. சுதந்திரப் போராட்ட காலத்தில் தீவிரமாக காந்தியப்பணிகளில் செயல்பட்டவர்.

செல்லப்பாவிற்கோ பகத்சிங்கின் மீது தீவிரமான விருப்பம். பகத்சிங் கொல்லபட்டதற்கு காந்தியே காரணம் என்று சில காலம் காந்தியவாத இயக்கங்களை விட்டு விலகி இருந்தார். அப்பாவின் தொடர்ந்த அறிவுரை காரணமாக சத்யாகிரகத்தில் ஈடுபட்டு ஆறுமாத

சிறைவாசம் சென்றார்.அங்கிருந்து வெளியாகி குடிசைத்தொழிலாகக் காகிதம் தயாரிப்பதை மேற்கொண்டிருக்கிறார்.

பி.ஏ பொருளாதாரம் படித்தபோது ஆங்கிலப் பாடம் மனதில் நிற்கவேயில்லை. அதனால் தொடர்ந்து தோல்வியுறவே படிப்பை அப்படியே கைவிட்டார். முதல்கதை சுதந்திரச் சங்கில் வெளியானது.பத்திரிகைகளில் சில காலம் பணியாற்றிவிட்டு எழுத்து என்ற சிற்றேட்டைத் துவங்கி நடத்தியிருக்கிறார்.

தன்னிடமிருந்த கேமிராவால் மதுரையைச் சுற்றியுள்ள ஜல்லிக்கட்டுகளைத் தேடித்தேடிச் சென்று தான் புகைப்படம் எடுத்து வைத்துள்ளதாகவும், தனக்குப் புகைப்படக் கலையின் மீது அதிக விருப்பம் என்றும் சொன்னார். அது போலவே மாதவையாவின் நாவல்கள் பற்றி விரிவாகப் பேசினார்.செல்லப்பாவின் மனதில் யாவும் நேற்று நடந்தவை போலவே இருந்தது ஆச்சரியமாக இருந்தது.

எது உங்களை வாடிவாசல் எழுத வைத்தது என்று கேட்டேன். அவர் ஹெமிங்வேயின் குறுநாவல் ஒன்றை வாசித்ததாகவும் அது காளைச்சண்டை வீரனைப் பற்றியது என்றும். அது போலவே மதுரையைச் சுற்றிய பகுதியில் நடைபெறும் ஜல்லிக்கட்டை வைத்துதான் ஏன் ஒரு நாவல் எழுதக் கூடாது என்று முடிவு செய்து வாடி வாசல் எழுதியதாகவும் சொன்னார். ஹெமிங்வேயின் தோற்காதவன் என்ற குறுநாவல் எழுத்து இதழில் வெளியாகி இருப்பதை வாசித்திருக்கிறேன் என்றேன்.அது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

எழுத்து படித்திருக்கிறீர்களா என்று கேட்டார். ஒன்றிரண்டைத் தவிர மற்ற முழுத்தொகுப்பும் என்னிடம் இருக்கிறது என்று சொன்னேன். அவரால் நம்பமுடியவில்லை. எப்படிக் கிடைச்சது என்று கேட்டுக்கொண்டேயிருந்தார். பிறகு தன்னிடம் இருந்த இதழ்கள் கால ஓட்டத்தில் சிதறிப் போய்விட்டன. உங்களிடம் உள்ள தொகுப்பு எனக்குக் கிடைக்குமா என்று கேட்டார். மறுமுறை கொண்டுவந்து தருவதாகச் சொன்னேன். அவர் அடைந்த சந்தோஷத்திற்கு அளவேயில்லை.

தனது இலக்கியப்பயணத்தில் அடைந்த வலியும் ரணமுமான நாட்களைப் பற்றி எவ்விதமான ஒளிவும் இன்றிச் சொல்லிக்கொண்டிருந்தார். புத்தகம் போட்டு அஞ்சு பைசா சம்பாதிக்கலை. நடையா நடந்து படிக்கிற ஒவ்வொரு ஆளையும் தேடிப் போய்ப் புத்தகம் வித்து இருக்கேன். யாரும் என்னை வாவானு வரவேற்பு குடுத்துக் கூப்பிடலை. நான் ஆசைப்பட்டதுக்கு நான் அலைஞ்சேன். அவ்வளவுதான். ஆனா மனசுக்குப்பிடிச்ச வேலை செஞ்ச திருப்தியிருக்கு என்றார்.

பிறகு என்னிடம் சிகாவை உங்களுக்குப் பழக்கம் உண்டா என்று கேட்டார். யார் சிகா என்று கேட்டேன். பேராசிரியர் சி. கனகசபாபதி. ரொம்பப் பிரமாதமான விமர்சகர். புதுக்கவிதையைப் பற்றி நிறைய எழுதியிருக்கிறார். உங்களுக்கு அவரைப் பரிச்சயப்படுத்தி வைக்கிறேன். ரொம்ப முக்கியமான ஆளு என்றார்.

நான் அறிந்தவரை செல்லப்பாவிற்குப் பேராசிரியர்கள் எவரிடமும் மரியாதை கிடையாது.பெரும்பான்மையான கல்லூரிப் பேராசிரியர்கள் கூலிக்காக வேலை செய்கின்றவர்கள் அவர்களுக்கு நவீன இலக்கியத்தில் பரிச்சயமே கிடையாது என்று சொல்லித் திட்டுவார்.

ஏதோ ஒரு கல்லூரியில் அவரைப் பேச அழைத்து அங்கே வாடி வாசல் நாவலில் இடம்பெற்றுள்ள கதாபாத்திரங்களின் ஜாதியைப் பற்றிய விபரங்களைக் கேட்டிருக்கிறார்கள். செல்லப்பா கோபத்தில் கூட்டத்தை விட்டே வெளிநடப்பு செய்துவிட்டதாகச் சொன்னார். அவ்வளவு ஆவேசமான அவர் சிகாவை உயர்வாகப் பேசியது நிச்சயம் அவர் படைப்புகளின் மீதான மரியாதையால் என்பது புரிந்தது.

செல்லப்பாவை வாழ்வின் நெருக்கடிகள் கடுமையாக முடக்கியிருந்தன. ஆனால் அவருக்குள் இருந்த எழுத்தாளன் ஒடுங்கவேயில்லை. அவர் தீவிரமான செயல்பாட்டை நோக்கியே தன்னைத் தக்கவைத்துக்கொண்டிருந்தார். ராஜராஜன் விருதை வாங்க மறுத்த காரணத்தால் தன் குடும்பத்தினர்களே தன்னை வெறுத்து ஒதுக்கியதாகவும் இதன் காரணமாக வீட்டிற்குள் பெரிய கசப்பு என்று சொல்லியபடியே அதெல்லாம் பெரிய விஷயமில்லை. நாளைக்குப் புதுசா படிக்க வரப்போகிறவனுக்கு நான் செஞ்சு வச்சிருக்கிற வேலைகள் புரியும். அது போதும் எனக்கு என்றார்.

மேலை இலக்கியத்தில் எதை அறிமுகம் செய்யவேண்டும், அதை எப்படி அறிமுகம் செய்ய வேண்டும்,விமர்சனம் என்பதன் முக்கியத்துவம் என்ன? கோட்பாடுகள் எப்படி அமைய வேண்டும் என்று துல்லியமான எண்ணங்கள் செல்லப்பாவிடம் இருந்தன. அத்தோடு எவரையும் எதிர்பாராமல் தன் எழுத்தின் திசையில் போராடிச் செல்லும் மனவுறுதியும் அவரிடமிருந்தது.

செல்லப்பாவின் பங்களிப்பு மகத்தானது. அவரது படைப்புகள் மறுவாசிப்புக்கு உள்ளாகவே வேண்டும் என்பதோடு அவரது இலக்கியப் பணிகள் முழுமையாக சமகால வாசகர்களின் பார்வையில் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

சி.சு.செல்லப்பா எழுத்தையும் இலக்கியத்தையும் நம்பி வாழ்ந்த ஒரு ஆளுமையின் அடையாளம்.தமிழ் இலக்கியத்தை வளப்படுத்திய முன்னோடிக் கலைஞன். இன்றும்

அவருக்கு உரிய இடமும் கௌரவமும் கிடைக்கவில்லை என்பதே உண்மை. வாசகனைத் தேடிச் சென்ற எழுத்தாளனின் பாதை இன்று தூர்ந்து போயே கிடக்கிறது.

இருநூறு வருடங்களுக்கு முன்பு வெளியான ஒரு ஆங்கில இலக்கிய இதழின் பிரதியைக் கணினி வழியாக இங்கிருந்தே வாசித்துவிட முடியும் அளவு இன்று தொழில் நுட்ப வசதி பெருகியிருக்கிறது.ஆனால் தமிழின் முன்னோடிச் சிற்றதழ்களின் பிரதிகளை வாசிக்கத் தேடி அலைய வேண்டிய துர்பாக்கியமே இன்றும் உள்ளது.

இப்போதும் திருவல்லிக்கேணியைக் கடந்து செல்கையில்
பாரதி, சி.சு.செல்லப்பா. புதுமைப்பித்தன்.கு.ப.ரா என்று வாழ்ந்து மறைந்த எழுத்தாளர்களின் நினைவு பீறிடவே செய்கிறது. எழுத்து வலியது என்பதை ஒவ்வொரு நிமிசமும் அது நினைவூட்டிக்கொண்டேயிருக்கிறது.